
கல்கி
KALKI
19-10-1958
30
நயா
பைசா



இல்லை—லக்ஸினல் சலவை செய்தது!

நீங்கள் அணியும் அழகழகான சோளிகள்—பட்டோ, பருத்தியோ, மென்மையான ஸாட்டினலோ—வெகு நேர்த்தியான சலவையின்மூலம் பராமரிக்கப்பட வேண்டியவை ஆம். அதுதான் லக்ஸ் பராமரிப்பு.

மென்மையான லக்ஸ் நுரை அழுக்குகளை அறவே அகற்றி விடுகிறது. எத்தனை தடவை சலவை செய்தாலும் உங்கள் சோளிகளை புதுமை மாறாமல் வைத்திருக்கிறது. நாசுக்கான ஆடைகளுக்கு லக்ஸ் உபயோகியுங்கள்!

அழகான ஆடைகளுக்கு நெடுங்காலம் புதுமைத்
தோற்றம் அளித்துக் காப்பது லக்ஸ்

LUX

LX. 141-50 TM

ஹிந்துஸ்தான் லீவர் லிமிடெட் தயாரிப்பு

கல்கி

பொருளடக்கம்

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம், கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.

மலர் 18 | இதழ் 12

தமிழ்த்திரு நாடு தன்னைப்—பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார்

விளம்பி௵ ஐப்பசி 3உ

பாகிஸ்தான் கற்பிக்கும் பாடம்

நமது அண்டை நாடான பாகிஸ்தானில் பெரும் புரட்சி ஏற்பட்டிருக்கிறது. ஆட்சியிலிருந்த மந்திரிகளையும் சட்டசபைகளையும் நீக்கிவிட்டு ராணுவம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறது. இது நமது நாட்டில் பலவித அபிப்பிராயங்களைக் கிளப்பிவிட்டிருக்கிறது.

இத்தகைய சம்பவங்கள் இன்றைய உலகில் சகஜமாகி விட்டன. அதனால் பாகிஸ்தானில் ராணுவ ஆட்சி ஏற்பட்டதில் என்ன அதிசயம் இருக்கிறது என்று சிலர் மேம்போக்காகப் பேசுகிறார்கள்.

தலைவர் மிர்ஸா அந்நாட்டு அரசியல் தலைவர்களைப் பற்றியும், கட்சிகளின் போக்கைப் பற்றியும் கூறியுள்ள அத்தனை விஷயங்களும் நமது மந்திரிகளுக்கும் அரசியல் கட்சிகளுக்கும் பொருந்தும் போலிருக்கின்றனவே என்று நம்மில் பலர் நினைக்கிறார்கள்.


லஞ்சமும் ஊழலும் மலிந்து சகிக்க முடியாதபடி போயிருக்கிறது என்று பாகிஸ்தான் ஜனாதிபதி மிர்ஸா கூறியிருப்பது நம் நாட்டு அரசாங்க நிர்வாகம் போய்க் கொண்டிருக்கும் போக்கையே இடித்துக் காட்டுவது போலிருக்கிறது என்று பலர் நினைக்கிறார்கள்.

பாகிஸ்தான் உணவு விஷயத்தில் உபரி நாடு. தன் தேவைக்குப் போக வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய சக்தி வாய்ந்திருந்த நாடு. ஆனால் அரசியல் குழப்பங்கள் காரணமாக, சுயநலம் காரணமாக, விவசாயத்தை அரசியல் சூதாட்டத்துக்குப் பணயமாக வைத்து அரசியல் தலைவர்கள் பாழ்படுத்தி யிருக்கிறார்கள். உணவு விஷயத்தில் பிறநாடுகளை எதிர்பார்க்கும் பரிதாப நிலைக்கு வந்துள்ளோம் என்கிறார் பாகிஸ்தான் ஜனாதிபதியாக இருந்த மிர்ஸா. நமது நாட்டிலும் விவசாயத்தைத் தேர்தல் போட்டிப் போராட்டத்துக்குப் பயன்படுத்திவருவதைப் பார்க்கும்போது, பாகிஸ்தான் தலைவர் கூற்றை நாமும் ஒரு எச்சரிக்கையாகக் கொள்ள வேண்டும்.

மேலும் மிர்ஸா, இப்பொழுதுள்ள அரசியல் தலைவர்கள் தேர்தல்களை ஒழுங்காகவே நடத்த மாட்டார்கள் என்று மிக உறுதியாகச் சொல்கிறார். கராச்சியில் சமீபத்தில் நகரசபைக்கு நடைபெற்ற தேர்தலில் வோட்டளிக்கும் உரிமை பெற்றவர்களில் 29 சத விகிதம் பேர் வோட்டளித்தனர். அதில் சுமார் பாதி வோட்டுகள் பொய் வோட்டுகள். அப்படியானால் பொதுத் தேர்தல் எந்த ஒழுங்கில் நடக்கும் என்று பார்த்துக் கொள்ளுங்கள் என்கிறார். இப்படி மிர்ஸா அடுக்கிக்கொண்டு போகும் குறைகளைப் படிக்கும்போது, அவர் எடுத்துக் கொண்ட முடிவு சரி என்றே தோன்றுகிறது. பாகிஸ்தான் மக்களும் முழு மனத்துடன் ஆமோதிக்கிறார்கள் என்று அங்கு நிலவும் அமைதியிலிருந்தே ஊகிக்கலாம்.

பல தலைவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். பல பேர்கள் மேல் லஞ்சக் குற்றம் தாக்கல் செய்யப்பட்டிருந்த போதிலும் மக்களிடம் எந்தவிதமான எதிர்ப்பாவது கிளர்ச்சியாவது தோன்றியதாகத் தெரியவில்லை. இவற்றையெல்லாம் மக்கள் ஆதரிப்பதிலிருந்து, தர்மம், நியாயம், நேர்மைக்குக் கட்டுப்பட்ட நல்ல அரசாங்கம் வேண்டும், அது எந்த முறையில் வந்தபோதிலும் சரியே என்று எண்ணுகிறார்கள் போலிருக்கிறது.

படிப்பினை !



இது 'பாகிஸ்தான் மக்களின் கோரிக்கை மட்டுமல்ல; உலகில் எந்தப் பகுதியிலும் மக்களின் மனோபாவம் இதே மாதிரிதான் இயங்குகிறது.

கொள்கைகளைப் பற்றியும், ஆட்சி முறைகளைப் பற்றியும் அக்கறையில்லை. ஜனநாயக முறையோ, கம்யூனிஸ முறையோ, எதேச்சாதிகார முறையோ ஏதாயினும் சரி, அவர்களுக்கு வேண்டியது நல்ல நிர்வாகம்!'

"நாம் மாபெரும் திட்டங்கள் போடுகிறோம். நமது திட்டங்களைக் கண்டு உலகமே வியக்கிறது. உலக பாங்கும், அமெரிக்காவும் ஜெர்மனியும் ஒன்றோடொன்று போட்டி போட்டுக் கொண்டு வந்து நமக்குக் கடனுதவிகள் பண்ணுகின்றன, பாருங்கள்!" என்று நமது பிரதாபத்தைப் பேசலாம்.

திட்டங்களை நிறைவேற்றும் சர்க்கார் இயந்திரம் ஊழல் மலிந்ததாக இருந்தால் மக்கள் மனம் வெறுப்படையும்.

பின்னர், பாகிஸ்தான் பாடம்தான்! ஆகவே, பாகிஸ்தானைப் பார்த்து, நமது நிர்வாகத்தைச் சீர்படுத்த வேண்டியது மிகவும் அவசியம். முன்னால் போகிறவன் இடறி விழுந்தால் பின்னால் போகிறவனுக்கு விளக்குப் பிடித்த மாதிரி.

நாம் பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்று பிடிவாதம் செய்யாமல், செய்ய வேண்டிய மாறுதல்களை எந்த அளவுக்குச் செய்யலாம்; எந்த அளவுக்கு மேல் செய்யலாகாது; போடவேண்டிய வரி எந்த அளவுக்குப் போடலாம்; எந்த அளவுக்கு மேல் போடலாகாது என்பதைக் கவனிக்காமல் அரசாட்சி நடந்தால், பாதிக்கப்பட்ட மக்கள் எந்த விதத்தையாவது தேடி நியாயம் அடையப் பார்ப்பார்கள். அத்துடன் சரியான எதிர்க்கட்சியில்லாமல் பதவியிலிருக்கும் கட்சியின் பிடிவாதத்துக்குத் தடையில்லாமற் போய் அரசியல் பின்முடங்கிப் போனால் இத்தகைய அபாயம் நேரிடுவதற்குக் காரணமாகிறது.

ராணுவத்தை நாமே ஏற்படுத்தி வைத்திருக்கிறோம். நாம் ஏற்படுத்திய நோக்கம் வேறாயினும், அதைக் கொண்டு ஜனநாயகத்தை அழிக்கும் சந்தர்ப்பம் ஜனநாயக விரோதிகளுக்கு உண்டாகிவிடுகிறது. இதைப் பாகிஸ்தான் நிகழ்ச்சி நிரூபித்து விட்டது. இதிலிருந்தும் நாம் பாடம் கற்க வேண்டும். பாகிஸ்தானில் ஒன்றுபட்ட ராணுவ ராஜ்யம் ஏற்பட்டது. நம் நாட்டில் அதைவிட மோசமான விளைவு ஏற்படலாம். ஆட்சியும் நாடும் சின்னாபின்னமாகப் போகலாம்.

இவற்றையெல்லாம் ஆராய்ந்தால் முக்கியமாக வேண்டியது யோக்கியதை. அரசியல் தலைவர்களிடமும் மக்களிடமும் சத்தியமும் தர்மமும் நிலைபெற வேண்டும். அதற்கு வழி தேட வேண்டும். கட்சியைப் பலப்படுத்தினால் மட்டும் போதாது.

தலையிடவில்லையாம்!

புது தில்லியில் உலக பாங்கியின் முக்கியஸ்தர்கள் மகாநாடு நடைபெற்றது. அந்த மகாநாட்டில் இந்தியாவுக்குக் கடன் தர வேண்டியதின் அவசியத்தையும் பற்றி வற்புறுத்தப்பட்டது.

ஆனால் இத்துடன் நின்றிருந்தால் தேவலை எனலாம். அவர்கள் இந்தியாவின் கொள்கைகளைப் பற்றியும் பேசியிருக்கிறார்கள். இந்தியாவின் வரித் திட்டத்தைப் பற்றியும் பேசியிருக்கிறார்கள்.

தொழில்கள் பலவும் சர்க்கார் நிர்வாகத்தில் எடுத்துக் கொள்வது சரியல்ல; தனிப்பட்ட முதலாளிகள் தொழில் நடத்துவதற்கு அதிக வாய்ப்பளிக்க வேண்டும். அவர்கள் நசித்துப் போக விடக்கூடாது. உற்சாகப்படுத்தித் தொழில்களை ஆரம்பிக்கச் செய்ய வேண்டும் என்கிறார்கள்.

அது மட்டுமன்றி நமது சர்க்காரின் வரித் திட்டங்கள் தனி முதலாளிகளைத் துன்புறுத்துவதாக இருக்கிறது; அவர்கள் தொழில்களில் பணம் ஈடுபடுத்த முடியாத வகையில் வரிகள் விதிக்கப்பட்டிருக்கின்றன என்று குற்றம் சாட்டியிருக்கிறார்கள்.

இக் குறைகளையெல்லாம் நாம் ஏற்கனவே எடுத்துக் காட்டியிருக்கிறோம். நமது நாட்டு நலனில் அக்கறை கொண்ட பெருந் தலைவர்கள் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். அப்போதெல்லாம் ஆவடித் தீர்மானம் எடுத்துக் காட்டப்பட்டது. 'நாம் சோஷலிஸ பாணி சமுதாயத்தை ஏற்படுத்துவதாகத் தீர்மானம் போட்டான பிறகு, தொழில்களைச் சர்க்கார் எடுத்துக் கொள்ளாமல் என்ன செய்யும்? சர்க்கார் எடுத்துக் கொள்ளும் தொழில்களை நடத்துவது, கடுமையான வரி விதிப்பின்றி எப்படி முடியும்?' என்றும் கூறப்பட்டது.

மக்கள் சொன்னதைக் கேட்காமற் போனாலும் கடன் கொடுப்பவர்கள் ஒரு யோசனை சொன்னால், அதைக் கேட்காமல் இருக்க முடியுமா? விரைவில் நமது சர்க்கார் கொள்கைகளில் மாறுதல் ஏற்படும் என்பதில் சந்தேகமில்லை.


நம் நாட்டுப் பெருந் தலைவர்கள் எச்சரிக்கை செய்தபோது கேட்டிருந்தால் கௌரவமாக இருந்திருக்கும். இப்பொழுது அந்நியர்கள் சொல்லிக் கேட்கப் போகிறார்கள்.

உள்நாட்டு அரசியல் விவகாரத்தில் தலையிட மாட்டோம் என்று அமெரிக்கா முதலிய வல்லரசுகள் கூறியது, வெறும் வக்கணைப் பேச்சு.

• • •

முன்னாளில் இந்தியாவின் நிதி மந்திரியாக இருந்த ஸர் ஜெர்மி ரெயிஸ்மென் என்பவர், தில்லியில் நடக்கும் உலக பாங்கு மகாநாட்டுக்கு வந்திருக்கிறார். இவர் இந்தியாவின் உற்ற நண்பர். இவர் கருத்துக்கள் எல்லோ

போதும் இந்தப் பாட்டு!



ராலும் மதிக்கப்படுகின்றன. வந்த இடத்தில் இந்தியாவின் தற்போதைய நிலையைப் பற்றித் தமது கருத்தை மிகத் தெளிவாக வெளியிட்டிருக்கிறார். மற்ற நிபுணர்கள் கருத்து எப்படியாயினும் இவருடைய கருத்துக்கள் மிகவும் மதிப்புக்கும் கவனத்துக்கும்உரியவை.

நமது நாட்டில் வரி கொடுக்காமல் ஏமாற்றுகிறார்கள். அதனால் திட்டத்துக்கு வேண்டிய மூலதனம் சேமிக்க முடியாமல் சர்க்கார் தவிக்கிறார்கள். இதைப் பற்றி ரெயிஸ்மென்னின் கருத்து என்ன என்று கேட்டதற்கு ரயிஸ்மென் அளித்த பதில் பின்வருமாறு:

''சுதந்திரத்துக்கு முன்புகூட மக்கள் வரி கொடாமல் ஏமாற்றியிருக்கிறார்கள். ஆனால் இது எவ்வளவு என்று நிர்ணயிப்பது கஷ்டம்.

உயர்ந்த நேர்மையுணர்ச்சியும் கடமையுணர்ச்சியும் மிகுந்த நாடுகளில் வரிகளை ஏமாற்றுவது என்பது மிகமிகக் குறைவு. இந்தியாவில் நேர்முகமான வரிகள் மிக அதிகம். இந்த நேர்முக வரிகளைக் குறைத்தால் வரிகளை ஏமாற்ற வேண்டும் என்ற சபலம் குறையும். 'செலவு வரி'யினால் சர்க்காருக்குக் கிடைக்கும் வருமானம் ஒன்றும் அதிகமாக இராது. ஆனால் இதை அமல்நடத்துவது மிகக்கஷ்டம். மக்களுக்கு எரிச்சலை உண்டாக்கும். இவைதான் இந்த வரியினால்விளையக்கூடிய பயன்.''

நமது தொழிலாளர்கள் உற்பத்திச் சக்தியைப் பற்றியும் ஜெர்மி ரெயிஸ்மென் மிக நுட்பமாகச் சில கருத்துக்களைத் தெரிவித்தார்.

''மத்திய சர்க்காரும், ராஜ்யசர்க்கார்களும் செய்துள்ள தொழில் சட்டங்கள் தொழிலாளர்களுக்கு எவ்வளவு பயன் விளைவிக்கின்றனவோ, அந்த அளவுக்குத் தொழிலாளர்கள் உற்பத்தியைப் பெருக்கவில்லை.

''நாட்டின் முதல் தேவை, ஒவ்வொரு தொழிலாளியும் உற்பத்தியைப் பெருக்குவது. தொழிலாளர்களை இத்துறையில் ஊக்குவிக்கப் பெருமுயற்சி வேண்டும். தேசிய நலனுக்கு இது மிகவும் முக்கியம் என்பதை வலியுறுத்த வேண்டும். ஆனால் தொழில்வளம் பெருகிய மேல் நாடுகளிலுள்ள தொழிலாளர்கள் கடைப்பிடிக்கும் முறைகளை இந்தியத் தொழிலாளிகள் கடைப்பிடித்து வருகிறார்கள். மேல் நாட்டுத் தொழில்கள் நன்கு வளர்ந்து விட்டவை. அந்தத் தொழில் ஸ்தாபனங்களால் தொழிலாளர்களின் மேற்கூறிய தகராறுகளைச் சமாளிக்க முடியும். இந்தியாவில் முடியாது. தொழிலாளர்கள் ஊக்கமாக வேலை செய்யாமல் 'காலம் கடத்தல்' முறையைக் கையாண்டால் அதிக பேருக்கு வேலை வாய்ப்புகள் ஏற்படும் என்று நினைப்பது தவறு. இது தவறான கருத்து. உற்பத்தி பெருகினால், மக்களின் வாங்கும் சக்தியும் பெருகுகிறது. பொருளின் தேவையும் பெருகுகிறது. இது தான் தொழிலாளர்களின் வேலை வாய்ப்புக்களைப் பெருக்கும்.''

விவசாயத் துறையைப் பற்றியும் தமது வியப்பைத்தெரிவித்தார். ''இந்தியா பிரதானமாக விவசாய நாடு. இந்த விவசாய நாடு, தன் உணவுத் தேவை விஷயத்தில் சுய நிறைவைப் பூர்த்தி செய்து கொள்ளாமலிருப்பது மிக வியப்பு. அடிப்படையான உணவுப் பிரச்னையை வெற்றிகரமாகத் தீர்த்துக்கொள்ளாமல் திட்டங்கள் போடுவது மிக ஆபத்தாகவே இருக்கும்! இப்பொழுது நிலவும் உணவு நிலைமை திருப்திகரமானதல்ல.''

இப்படிப் பல அரிய உண்மைகளை இடித்துச் சொல்லியிருக்கிறார்.

அருள் வாக்கு

ஒவ்வொருவரும் அவசியம் செய்ய வேண்டியது என்று சில அனுஷ்டானங்கள் அவரவர்கள் சம்பிரதாயப்படி தொன்றுதொட்டு விதிக்கப்பட்டிருக்கின்றன. இப்படி விதிக்கப்பட்டதையெல்லாம் அவசியம் செய்ய வேண்டும்.

பாஞ்சராத்ரம் என்றும் பாசுபதம் என்றும் இரண்டு மார்க்கங்கள் நமது சமூகத்தில் வழக்கத்தில் இருக்கின்றன. இவ்விரண்டிலும் பக்தியைப் பற்றித்தான் அதிகமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. உண்மையான பக்தி ஒருவனைப் பரம்பொருளிடம் கூட்டி வைக்க ஏற்பட்ட சாதனம்.

ஸந்தியா வந்தனம் என்ற உபாசனையைச் செய்ய வேண்டும் என்று சிலருக்கு விதி ஏற்பட்டிருக்கிறது. அதை அவர்கள் தினந்தோறும் மூன்று முறை குறித்த காலங்களில் தவறாமல் செய்யவேண்டும். இந்த உபாசனையில் பரமாத்ம ஸ்வரூபம் சூரிய மண்டலத்தில் சாந்நித்யம் பெற்றிருப்பதாகப் பாவிக்கப்பட்டு வழிபாடு செய்யப்படுகிறது. இதற்கு உரித்தான காலம் காலையில் சூரியன் உதயமாவதற்கு முன்னும், பகலில் சூரியன் தலைக்கு மேல் நேராக இருக்கும்போதும், மாலையில் சூரியன் மறைவதற்கு முன்னும் என்று விதிக்கப்பட்டிருக்கிறது.

ஆழ்ந்த கருத்துக்களைச் சுருக்கமாக சூத்திரங்கள் போல் சொல்லுவதில் பிரசித்தி பெற்றவர்கள் சித்தர்கள். அவர்களில் ஒருவர் இடைக்காட்டுச் சித்தர். இந்த வழிபாட்டைப் பற்றி அவர் குறிப்பிடும்போது ''காணாமல், கோணாமல் கண்டு கொடு; ஆடுகாண் போகுது பார், போகுதுபார்'' என்று பாட்டாகப் பாடினார். காணாமல் என்றால், சூரிய வெளிச்சம் காண்பதற்கு முன்னரே; கோணாமல் என்றால் சூரியன் மேற்கு திசையில் சாயாது தலைக்கு நேராக உச்சியில் இருக்கும் போது; கண்டு என்றால் மேற்கு திசையில் சூரியன் மறையாமல் இருக்கும் போதே; கொடு என்றால் அர்க்கியம் விடுதல்; ஆடு என்பது கங்கையில் நீராடல்; காண் என்பது ராமேச்வரத்தில் ஆண்டவனைத் தரிசித்தல். இவற்றையெல்லாம் ஒருவன் செய்தால் அவன் செய்த பாபங்களனைத்தும் அவனை விட்டு விலகும் என்பது கருத்து.

தற்போதுள்ள நவீன கால நிலைமையில் மத்தியான கால வழிபாட்டை உச்சி காலத்துக்கு முன்னால் எப்போதுவேண்டுமானாலும் சௌகரியப்படி செய்யலாம். ஆனால் காலையிலும்மாலையிலும்சந்தியோபாசனையைக் குறித்த காலத்தில் விதித்தபடி செய்வதுதான் முறை. செய்தே ஆகவேண்டும். இதைச் செய்ய வேண்டுமென்ற மன உறுதியிருந்து, அதற்குத் தேவையான சாதனங்களையும் சேகரித்து வைத்துக் கொண்டிருந்தால் வேலை நடுவிலிருந்தும் மாலையில் சில நிமிஷங்கள் சூரியனுக்கு அர்க்கியம்கொடுக்கச்சமயம் கிடைக்காமல் போகாது. மற்றவர்கள் ஒருவேளை இதைக்கண்டு கேலி செய்யக் கூடும். இதை எதிர்ப்பதற்குத் தைரியம் மட்டும்தான் தேவை. அவர்களுடைய கேலியைப் பொருட்படுத்தாமல் மாலை சந்தியாவந்தனத்தைச் செய்து முடிக்க வேண்டும். ஜலம் கிடைக்கவில்லையானால் புழுதியைக்கொண்டு அர்க்கியம் செய்யலாம். மகாபாரத யுத்தத்தின்போது குருக்ஷேத்திர யுத்தகளத்தில் இப்படித்தான் புழுதியைக் கொண்டே அர்க்கியம் கொடுத்து காயத்ரி வழிபாட்டைச் செய்ததாகச் சொல்லியிருக்கிறது. காயத்ரி மூலம் மூன்று வேதங்களின் பொருளை அறியலாம். இந்த மந்திரம் சைவர்கள்-வைணவர்கள் இருவருக்குமே புனிதமானது. ஸந்தியோபாசனையைக் காலம் தவறாமல் ஒருவன் செய்து பஞ்சாக்ஷரத்தையோ, அஷ்டாக்ஷரத்தையோ ஜெபம் செய்வதால் தன்னுடைய க்ஷேமத்துக்கு வழி செய்து கொள்ளுவதைத் தவிர, சமூகத்தின் நலனுக்கும், உலகத்தின் சாந்தி, அமைதி, ஆனந்தம் முதலியவற்றுக்கும் வகை செய்கிறான். அப்படிச் செய்பவனுக்குப் பரமாத்மா கூட பலத்தைக் கொடுத்து உதவுகிறான்.

இது எல்லோருக்கும் பொருந்தும். இதர மதத்தினர்கள் கூட, மேற்பார்வைக்கு மட்டும் தங்கள் மதங்களில் பற்றுள்ளவர்கள் போல் நடிப்பதையும் மற்ற மதத்தினர்களைக் கேலி செய்வதையும்விட்டு உண்மையிலேயே அவரவர்கள் சம்பிரதாயப்படி விதிக்கப்பட்ட அனுஷ்டானங்களை ஒழுங்காகச் செய்து வந்தால் தங்களுடைய க்ஷேமத்துடன் உலக க்ஷேமமும் விருத்தி யடையும்.

ஸ்ரீ சங்கராச்சாரியார் ◊ காஞ்சிகாமகோடி பீடம்

உலகத்துக்கொரு நஷ்டம்

கத்தோலிக்க மக்கள், சீனாவிலிருந்து அமெரிக்கா வரை பரவி யிருக்கிறார்கள். பல நாடுகளில் பல மொழிகள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இவர்கள் எல்லோருக்கும் ஒரு பெரிய மதத் தலைவர் இத்தாலி நாட்டின் ரோமாபுரியிலுள்ள போப். கத்தோலிக்க குருநாதரின் இந்தச் செல்வாக்கைப் பார்க்கும்போது அவரையே உண்மையான 'லோக குரு' என்று சொல்லலாம்.



இந்த ஸ்தானத்துக்கு எத்தனையோ பேர்கள் வந்திருக்கிறார்கள். இப்போது காலமான போப் பயஸ் உலகில் எல்லா மக்களின் உள்ளங்களையும் கவர்ந்த மதத் தலைவராக இருந்தார். தமது மதக் கோட்பாடுகளில் சிறந்து விளங்கியதோடு மட்டுமல்ல; அன்பு இதயம் படைத்தவர்; பரந்த மனப்பான்மை கொண்டவர்; உலக மக்களின் துயரங்களை உணர்ந்து அதற்குரிய பரிகாரங்களைத் தைரியமாகச் சொல்லி வந்தவர்.

உலக வல்லரசுகள், விஷகுண்டுகள் உற்பத்தி செய்வதையும், சோதனைகள் நடத்துவதையும் கடுமையாகக் கண்டித்து வந்தார். "உலகத்தை அழித்துவிட ஏராளமாகப் பணம் செலவழித்துக் குண்டுகளை உற்பத்தி செய்யும் இந்தப் பயங்கரப் போட்டி என்னத்துக்கு, வேண்டாம்!" என்று பல தடவை வன்மையாகக் கண்டித்தார்.

தற்காலத்தில் மக்கள் பொழுதுபோக்கு என்று சொல்லிக் கொண்டும், காலத்தையும் பணத்தையும் விரயமாக்கி வருவதோடு, உள்ளத் தூய்மையைக் கெடுத்துக் கொள்வதை மிகக் கடுமையாக எச்சரித்து வந்தார்.

அரசியல் விவகாரத் துறையிலும் மிகத் தெளிவான நோக்குடன் விளங்கினார்.

போப் காலமாவதற்கு முன் எழுதி வைத்த தமது கடைசி விருப்பத்தைப் படிப்பவர்கள் நெஞ்சம் உருகாமலிருக்க முடியாது.

"சொல்லாலும் செயலாலும் நான் யாரையாகிலும் புண்படுத்தியிருந்தால், அவர்கள் எல்லோரும் என்னை மன்னிக்கும்படி வணக்கத்துடன் கோருகிறேன்.

"எனக்காக ஞாபகார்த்தச் சின்னங்கள் எழுப்ப வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். எனது உடலை ஒரு நல்ல இடத்தில் அடக்கம் செய்தாலே போதும்; யாருக்கும் தெரியாத இடமாக இருந்தால் இன்னும் மேல்.

"எனக்காக, பலபிரார்த்தனைக் கூட்டங்கள் நடைபெறும் என்பது எனக்குத் தெரியும். அதனால் அதைப் பற்றி நான் எடுத்துச் சொல்ல வேண்டியதில்லை."

இவ்வாறு அவர் அந்தி காலத்தில் எழுதி வைத்ததைப் படிக்கும்போது, அவருடைய அடக்கம் புலனாகிறது. அந்த அடக்கமே, அவர் எவ்வளவு பெரிய மகான் என்பதை எடுத்துக் காட்டுகிறது.

சிறந்த ஞானியை உலகம் இழந்து விட்டது. கிறிஸ்தவர்கள் மட்டுமல்ல, நாம் அனைவரும் துயரத்தில் மூழ்க வேண்டிய நிகழ்ச்சி.

வாழி நெடும் புவனம்!

பொழுது புலர்கிறது. புலர்ந்து விட்டது என்பதை உலகத்துக்கு யார் சொல்வது? மனிதன் எல்லோருக்கும் எதையும் சொல்லத் தெரிந்தவன். அவனுக்கு விடிந்து விட்டதைச் சொல்ல ஒரு கோழி கூவ வேண்டியிருக்கிறது. வெறும் கூவல்தானா அது? "வாழி நெடும் புவனம்" என உலகத்தையே வாழ்த்துகின்ற கூவல். மண்ணில் பிறந்து மண்ணிலும் சிறிது உயரமான மரக்கிளையில் நின்று கொண்டு உலகத்தைக் கூவி எழுப்பும் அந்தக் கோழி உலகத்துக்குக் கூறும் செய்தி 'உலகம் வாழ்க' என்பதுதான். ஆன்மீக இலட்சியப்படி நோக்கினாலும் மண்ணில் பிறந்தும் மண்படாமல் நிற்பவர்கள்தானே உலகத்துக்கு எழுச்சியை அளிக்க முடியும்?

"ஆழியலைந்து தரங்க முழக்கும் அலைகடல் மருங்கினிலே
மூழ்கி யெழுந்திடு மொளிச்சுடர் முன்வரு மெனவோர்
கோழி யெழுந்து மரக்கிளையிற் கூவி யழைத்திடல்தான்
வாழிநெடும்புவன மெனத்தனி வாழ்த்திடல் காணீர்."

இந்தக் கருத்துச் செறிவுள்ள காட்சியைத்தான் நமது ஓவியர் வினு இவ்வார அட்டைப்படச் சித்திரமாக வழங்கி யிருக்கிறார்.



டெக் டூத்பிரஷ் வாங்க
3 தகுந்த காரணங்கள்
1 மிருதுவான கீட்டன் முடிகள்
ஈறுகளை புண்ணுக்காமல் பற்களை சுத்தம் செய்கின்றன
2 தேர்ந்தெடுக்க 2 வித தலைப்பாகம்
'ஓவல்' மற்றும் 'ஷார்ட் ஓவல்' வடிவங்களில் கிடைக்கும்
3 கைக்கு அடக்கமான பிடி
விஞ்ஞான முறைப்படி பிரத்தியேக வடிவம் கொண்டது
நினைவிலிருக்கட்டும்:
இந்த மூன்று விசேஷ அம்சங்கள் பொருந்தியது புது மாதிரி டெக் ஒன்றே!
Tek
Johnson & Johnson
OF INDIA
PRIVATE LTD.
ஜான்ஸன் அண்ட் ஜான்ஸன் ஆப் இந்தியா
பிரைவேட் லிமிடெட்



வாலி வதம்

ராஜாஜி

காட்சி 1.

[கிஷ்கிந்தைக்கு முன் — அரணியத்தில் மரங்களுக்கிடையில்மறைவில் ராமனும் லக்ஷ்மணனும். தூரத்தில் வாலிக்கும் சுக்ரீவனுக்கும் மல் யுத்தம் நடக்கிறது]

ராமன்: லக்ஷ்மணா! தருமசங்கடத்தில் சிக்கிக் கொண்டோம். அக்கினி பகவான் சந்நிதியில் சுக்ரீவனோடு சிநேகம் செய்துகொண்டு விட்டோம். அவனைக் காப்பாற்றுவது நம் கடமை. பிரதிக்ஞையைத் துறப்பதற்கில்லை. பார். நம்மையே திரும்பித் திரும்பிப் பார்க்கிறான். ஆயினும் என் கை கேட்கமாட்டேன் என்கிறது. வாலியோடு நேராக நின்று யுத்தம் செய்யாமல் இங்கு மறைவிலிருந்து அவனை அம்பு எய்து கொல்ல மனம் ஒப்பவில்லை. என்ன செய்வது?

லக்ஷ்மணன்: சுக்ரீவன் வாலியால் அடிபட்டுச் செத்தே போவான். நாம் எண்ணிய எண்ணங்களெல்லாம் வீணாகிப் போம். செய்த பிரதிக்ஞையைக் காப்பாற்றுவதே உங்களுடைய தருமம் அல்லவா? சுக்ரீவன் நம்முடைய வார்த்தையைக் கேட்டல்லவா அண்ணன் வாலியைச் சண்டைக்கு இழுத்தான்? அவன் இப்போது வாலி கையில் மாண்டால் கொன்ற பாவம் நமக்குத்தான்.

ராமன்: உண்மை! நீ சொல்லுவது உண்மை. பாபத்தைச் சுமப்பதே தருமம்.

லக்ஷ்மணன்: ஐயய்யோ! சுக்ரீவன் ஓடுகிறான்! வாலி துரத்துகிறான், பாருங்கள் அண்ணா!

ராமன்: மகாபுருஷன் வாலி! பார், பிழைத்துப் போகட்டும் என்று சுக்ரீவனை விட்டுவிட்டுத் திரும்பிச் செல்கிறான். இருவரும் ஒரே சாயலாக இருக்கிறார்கள். வில்லை வளைத்து அம்பு செலுத்தப் பார்த்திருந்தாலும் ஏமாந்து தான் போயிருப்போம்.

காட்சி 2.


[ரிஷ்யமூகவனம். சுக்ரீவன் ஓடி வந்து சேருகிறான். பிறகு ராமனும் லக்ஷ்மணனும் சுக்ரீவனிடம் வந்து சேருகிறார்கள். சுக்ரீவன் அவர்களோடு பேசவில்லை. தரையைப் பார்த்த வண்ணம் கோபமாக நிற்கிறான்.]

சுக்ரீவன்: உங்கள் எண்ணத்தை வெளிப்படையாக எனக்கு அப்பொழுதே சொல்லியிருந்தால் என் பாட்டுக்கு நான் மாதங்க ஆசிரமத்தில் ஒளிந்து ஜீவித்துக் கொண்டிருப்பேன்.

லக்ஷ்மணன்: அண்ணா! கோபிக்க வேண்டாம்!

சுக்ரீவன்: அண்ணாவது, தம்பியாவது! மோசக்காரர்கள். மோசம் செய்தீர்கள்.

லக்ஷ்மணன்: மகாராஜனே! கோபிக்க வேண்டாம். தரும சங்கடத்தில் சிக்கிவிட்டுத் தயங்கினோம். நீங்கள் இருவரும் கைகலந்த சமயத்தில் உங்கள்





அடையாளம் கூடச் சரியாகத் தெரிய வில்லை. உள்ளத்தில் வேதனை செய்த தரும சங்கடத்தின் காரணமாக ராம சந்திரனுக்குக் கண்கள் கலங்கி உம் அடையாளம் சரியாகத் தெரியவில்லை. அதனால் வளைத்த வில்லிலிருந்து அம்பை விடவில்லை. விட்டிருந்தால் உம்மையே கூட அது கொன்றிருக்கலாம். அப்புறம் நம் கதி என்ன? எவ்வளவு பெரும் பாபத்தில் அகப்பட்டுக் கொண்டிருப் போம்!

சுக்ரீவன்: நாங்கள் இருவரும் ஒரே சாயல் என்று எல்லாரும் சொல்கிறார்கள். நீங்கள் சொல்லுவது உண்மையா யிருக்கலாம்.

ராமன்: லக்ஷ்மணா! தீர்மானம் செய்து விட்டேன். பாபமோ தருமமோ, செய்த பிரதிக்ஞையைப் பூர்த்தி செய்வேன்! வானர ராஜன் கழுத்தில் அடையாளத் துக்கு அதோ அந்தப் பூப் பூத்திருக்கும் கொடியை மாலையாகப் போடு. மறுபடி யும் கிஷ்கிந்தைக்குப் போவோம்.

சுக்ரீவன்: உங்களுடைய பேச்சை நம்பலாமா? இல்லையென்றால் வாலி இந்தத் தடவை என்னைக் கொன்றே விடுவான்.

ராமன்: சுக்ரீவா! எங்களை நம்பு. லக்ஷ்மணன் மேல் ஆணை. சீதைமேல் ஆணை. வாலி பூமியில் விழுந்து உயிரற் றுப் புரள்வதைப் பார்ப்பாய்.

காட்சி 3.

[கிஷ்கிந்தை அரமனை அந்தப்புரம்]

வாலி: என்ன இது? சுக்ரீவன் மறுபடி யும் திரும்பி வந்து கர்ஜிக்கிறான். அவ னுடைய அந்தி காலம் வந்து விட்டது போலும்! சரி...யோசிப்பதில் பயனில்லை. நான் போய்க் காரியத்தை முடித்து விட்டு வருகிறேன்.


தாரை: வேண்டாம், நாதா! இன்று வேண்டாம். நாளை பார்த்துக் கொள்ள லாம். அவன் கர்ஜனையினால் நமக்கு என்ன நஷ்டம் வந்துவிட்டது? கர்ஜித்து விட்டுத் திரும்பிப் போகட்டுமே!

வாலி. என்றால் பொறுக்க இயலாது, கண்மணி! அவன் தரையிலே இடித்து என்னைப் போருக்கு வா என்று அழைக் கிறான். நான் எப்படிக் கோழையைப் போல் இங்கே படுத்திருக்க முடியும்?

தாரை: நாதா! வேண்டாம். ஒரு தடவை அடிபட்டுப் போனவன் திரும்ப வும் வந்து சண்டைக்கு அழைக்கிறான். உங்களுடைய பலத்தை அறிந்தவன் இவ்வாறு ஏன் யமனை அழைப்பது போல் மறுபடியும் வந்து கர்ஜிக்கிறான்? யோசி யுங்கள். அவனுடைய குரலையும் செய்கை யையும் பார்த்தால் ஏதோ புதிய பலத் தைச் சம்பாதித்தவன் போல் எனக்கு நிச்சயமாகத் தோன்றுகிறது. சகாய பலத்தால்தான் இப்படி வந்திருக்கிறான். தீர யோசித்துச் செய்ய வேண்டியதை நாளைக்குச் செய்யலாமே.

[மறுபடியும் சுக்ரீவன் கர்ஜனை கேட் கிறது]

வாலி. முடியாது, தாரா! என்றால் இனிமேல் சகிக்க முடியாது. இனி இவனை விட்டு வைத்திருக்கவே கூடாது.



[எழுந்து செல்கிறான். தாரை பிடித்து நிறுத்துகிறாள்.]

தாரை : அங்கதனுடைய க்ஷேமத்தை உத்தேசித்து நில்லுங்கள். எனக்குச் சந்தேகமே யில்லை. தம்பி சுக்ரீவன் ராம லக்ஷ்மணர்களின் சகாயத்தைக் கொண்டுதான் இப்படிச் சண்டைக்கு இழுக்கிறான். அவர்கள் உறுதியான விதத்தில் வாக்களித்திருப்பார்கள்.

வாலி : என்ன சொல்லுகிறாய்! அயோத்தி ராமசந்திரன் இங்கே எப்போது வந்தான்?

தாரை : சாரணர்கள் அங்கதனுக்கு இந்தச் செய்தியைச் சொன்னார்களாம். அவன் உங்களிடம் தன் பயத்தைச் சொல்ல இஷ்டப்படவில்லை. எனக்குச் சந்தேகமாகத்தான் இருக்கிறது. இப்போது போக வேண்டாம்.

வாலி (சிரித்து): ராமன் வந்து இங்கே இருந்தாலும் சுக்ரீவனிடமா சிநேகம் செய்வான்! மாட்டான். என்னை விட்டு விட்டு ராஜ்ய பதவி யிழந்த சுக்ரீவனிடமா அயோத்தி ராஜகுமாரர்கள் சிநேகம் செய்து கொள்வார்கள்? நீ சொல்வது விசித்திரமாகத்தான் இருக்கிறது. நான் நம்பவில்லை. வீணாகக் கவலைப்படுகிறாய் நீ! நான் போய் இந்தப் பயலைத் தீர்த்துக் கட்டி விட்டுத்தான் இனிமேல் தூங்குவேன்.

தாரை : இல்லை, நாதா! வேண்டாம். நாளை பார்த்துக் கொள்வோம். எனக்கு எப்படியோ இருக்கிறது. மனதில் பயம் நீங்கவில்லை. ராம லக்ஷ்மணர்கள் சுக்ரீவனிடம் ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பது நிச்சயம்.

வாலி : தாரா! ராமசந்திரன் அதருமம் செய்ய மாட்டான். இந்த ராம லக்ஷ்மணர்களுக்கு என்ன சம்பந்தம்? அவர்கள் ஒருநாளும் இதில் பிரவேசிக்க மாட்டார்கள்.

[சுக்ரீவன் கர்ஜனை]

என்னை இனித் தடுக்காதே. மங்கள மொழி சொல்லி வழியனுப்பு.

[தாரை வாலியை வலம் செய்து தெய்வத்துக்கு வணக்கம் செலுத்தி, உள்ளே செல்கிறாள்.]

காட்சி 4.

வாலி : உயிரில் ஆசை வைத்திருப்பாயானால், சுக்ரீவா, ஓடிப் போ! இந்தத் தடவை யமனை அழைக்காதே.

[சுக்ரீவன் கர்ஜித்து வந்து வாலியின் மேல் பாய்கிறான். முஷ்டி யுத்தம் நடக்கிறது]

லக்ஷ்மணன் : அண்ணா! இனித் தாமதிக்கலாகாது.

[ராமன் வில் வளைத்து அம்பை எடுத்து, அம்பைப் பார்த்துப் பேசுகிறான்.]

ராமன் : அம்பே! என் தருமத்தையும் வாலியையும் இரண்டையும் கொல்லச் செல்வாய்! போ!

[அம்பை விடுகிறான். வாலியின் உடலில் அம்பு புகுந்து விடுகிறது]

வாலி : ஆ...ஹா்ம்...இது வென்ன?

[சுற்றும் பார்த்து விட்டுக் கீழே விழுகிறான். கையும் காலும் விரிந்து கிடக்கிறான். ராம லக்ஷ்மணர்கள் பக்கத்தில் வருகிறார்கள். வாலியின் கண்களில் நீர் பெருகுகிறது. மெதுவான குரலில் வாலி பேசுகிறான்.]

வாலி : என்ன செய்தாய், ராமா! நீ ஒரு வீரனா! உனக்கு நான் என்ன துரோகம் செய்தேன்? மறைந்திருந்து என்னை ஏன் கொன்றாய்? உன் மனைவியை அடைய இதுவா வழி? உன் புத்தியை என்ன சொல்ல? உன் கீர்த்தியெல்லாம் மோசம். மோசடி! ஆஷாட பூதிக் கொடிய வஞ்சகனே! என் முன் நின்று நேருக்கு நேர் யுத்தம் செய்திருந்தாயானால் பூமியில் செத்து விழுந்திருப்பாய். என்னைப்போல் கிடந்திருப்பாய். ஐயோ! என்ன பாவம் செய்துவிட்டாய்! பிறந்தவர்கள் இறப்பது விதி. ஆயினும் முறை தவறி என்னைக் கொன்றாய்! தீராத பாபம் செய்துவிட்டாய்! வெட்கமில்லாமல் நிற்கிறாயே! தாரை சொன்னது உண்மையாய்ப் போய் விட்டது. யோக்கியர்கள் என்று உங்களை நான் கருதி அவளுக்குச் சமாதானம் சொன்னது பொய்யாகிப் போயிற்று! சுக்ரீவா! அரச பதவிக்கு ஆசைப்பட்டு இவர்களையும் அதருமத்தில் தள்ளினாய். ராஜ்யத்தை அனுபவி!

[கண்களை மூடிக்கொள்கிறான். கொஞ்ச நேரம் கழித்துக் கண்திறந்து மௌனமாக நின்ற ராமனைப் பார்க்கிறான்]

காட்சி 5.

[வானப்படலத்தில் தோன்றுகிற காட்சி: பரமேசுவரனும் பார்வதியும்]

பரமேசுவரன் : பிரியே! உன் கண்களில் ஏன் கண்ணீர் வடிகிறது?

பார்வதி : இந்தக் காட்சி பரிதாபமாக இருக்கிறதே! தரும சங்கடத்தில் அகப்பட்டுக் கொண்டு ராமசந்திரன் நிலையிழந்து துக்கப்படுகிறான். மனைவியை இழந்தது ஒரு பக்கம் இருக்க, தருமத்தையும் இழந்தேனா என்று சங்கடப்படுகிறான். வீரன் வாலி கோபத்தால் எரிக்கப்பட்டு மரணாவஸ்தையில் இருக்கிறான். யமாலயம் செல்லும் போது தீராத சினத்தோடு செல்கிறானே!

பரமேசுவரன் : இல்லை, கண்ணே! உன் கண்களிலிருந்து, வடிந்த அம்ருத நீர், பார், அவன் மேல் பட்டதும் மனம் தெளிந்து சாந்த நிலை அடைந்து விட்டான். கோபமும் துவேஷமும் நீங்கித்

தன்வசமுற்று முகத்தில் தேஜஸ் ஜொலிக்கிறது பார்.

[கீழே பூமியில் ராமனைப் பார்த்து வாலி]

வாலி: ராமா! ஏன் இப்படிச் செய்தாயோ தெரியவில்லை. புத்தி தடுமாறிப் போயிருக்க வேண்டும். ஹூம்... நடந்தது நடந்து போயிற்று. மறைவாக நின்று என் உயிரை யமனிடம் சேர்த்தாய். அது உன்னால் முடிந்தது. ஆனால் செய்த குற்றத்தை உணர்ந்து எடுத்த உயிரைத் திரும்பக் கொடுக்க உன்னால் முடியுமோ? முடியாது. தாரையையும் குழந்தை அங்கதனையும் சுக்ரீவன் இம்சிக்காமல் பார்த்துக் கொள்வாயா? இதையேனும் செய். பல தடவை தாரை எனக்குச் சொன்னாள்; தம்பியோடு சண்டை ஏன், இருவரும் சிநேகமாகச் சகோதரர்களாக வாழுங்கள் என்றாள். நான் கேட்கவில்லை. ஏமாந்து போனேன். துவேஷம் பொல்லாதது. அது என் தவறு. தாரையின் பிழை அல்ல. அவளையும் அங்கதனையும் உன்னிடம் ஒப்புவித்தேன். ஏதேனும் உன்னிடம் கருணை இருப்பின் இதைக் கவனத்தில் வைத்துக் கொள்.

[தாரை புலம்பிக் கொண்டு வருகிறாள். கீழே கிடந்த வாலியை அணைத்துக் கொண்டு புலம்புகிறாள்]

தாரை: ஐயோ! என் வீரனே! எத்தனை சூரர்களை வீழ்த்தினாய்! இப்போது மாண்டு கிடக்கிறாயே! என்னை விட்டுப் போய் விட்டாயே! ஐயோ!

[அங்கதன் ஓடி வருகிறான். அப்போது சுக்ரீவனும் அழுகிறான்]

தாரை: ராமனே! நீ தர்மம் அறிந்தவன். என்னைக் கொல்லுவதில் பாபம் இல்லை. வீர சுவர்க்கத்தில் என் நாதனை நான் அடைவேன். அந்த உதவியை எனக்குச் செய். பாபம் இல்லை.

வாலி: தாரா! அப்படிச் சொல்லாதே. அங்கதனைப் பார்த்துக் கொள்ள உயிர் வைத்துக் கொண்டு பொறுமையோடு இருப்பதுதான் உன் கடமை.

[தூரநின்ற ஹனுமானைப் பார்த்து]:

ஆஞ்சனேய! பக்கத்தில் வா! எனக்குப் பேசச் சக்தியில்லை. இந்த அம்பு என் உயிரைத் துன்புறுத்துகிறது. சீக்கிரம் இதை இழுத்து எடுத்து என் உயிர் அதன் வழி செல்ல விடு. சுக்ரீவனே! தம்பீ! நாம் இருவரும் சந்தோஷமாக வாழ்ந்திருக்கக் கொடுத்து வைக்கவில்லை. என்னுடைய தவறே பெரிது. தாரைமேல் கோபிக்காதே. அங்கதனைப் பார்த்துக் கொள். அவனுக்குத் தகப்பனாக இரு. தாரை சொல்வதைக் கேட்டுச் சுகமாக வாழ். குணமும் அறிவும் மிகுந்த அவளுடைய பேச்சை ஒரு நாளும் தட்டாதே. இதோ இந்திர மாலையைப் பெற்றுக் கொள். சகல போகங்களையும் தடையின்றி அனுபவிப்பாய்! என் வாழ்க்கை முடிந்தது. உனக்கு மங்களம்! ராம காரியத்தைச் செய்.

ஹனுமான்: நீலா! அம்பை எடுத்து விடு.

[நீலன் அம்பை மெள்ள எடுக்கிறான். காயத்திலிருந்து ரத்தம் மலையருவி போல் பொங்கி வடிகிறது — வாலி உயிர் நீத்தல்]

தாரை: ஐயோ! என் நாதன் உயிர் வெள்ளமாகப் பாய்ந்து மறைந்து விட்டது! அங்கதா! மகனே! இங்கே பக்கத்தில் வா கண்மணி! தகப்பனாருடைய முகத்தைக் கடைசித் தடவை பார்த்து விட்டு, காலைத் தொட்டு நமஸ்கரித்துக் கண்ணில் ஒற்றிக் கொள். ராமசந்திரா, உன் மனைவியை நீ அடைவாய். வானரங்கள் எல்லாம் உனக்கு உதவி செய்யும். நிச்சயமாக அடைவாய். ஆனால் சீதையை மறுபடியும் நீ அடைந்தாலும் உன் குற்றம் அவளை நீ அடையாமற் செய்து விடும் போல் எனக்குத் தோன்றுகிறது. உனக்கு மங்களம் ஆகுக!

சுக்ரீவன்: என் ஆசை என்னைக் கெடுத்தது. என் புத்தியைக் கலக்கிப் பாபம் செய்யத் தூண்டித் தருமாத்மா அண்ணனைக் கொல்லச் செய்தது. நான் என்ன செய்வேன், ராமா?

[அழுகிறான்]

ராமன்: லக்ஷ்மணா! இது வரை பிறர் செய்த தவறுகளினால் நீயும் நானும் துக்கம் அனுபவித்தோம். இப்போது நம்முடைய குற்றத்தாலேயே நாம் துக்கம் அனுபவிக்கிறோம். இதைப் பொறுப்பது மிகக் கஷ்டம்.

லக்ஷ்மணன்: அண்ணா! விதியை விலக்குவார் யாரும் இல்லை. நானும் அறிவு அடைந்தேன். விதியின் வேலையன்றி, என் தாய் ஜானகி என்னை விரட்டி அனுப்ப நேருமா?

[அழுகிறான்]

[மேலே பார்வதியும் பரமேசுவரனும்]

பரமேசுவரன்: உமையே! பார்த்தாயா? தேவதேவன் எல்லாரையும் எப்படிப் பொம்மலாட்டம் ஆட்டுவிக்கிறான்?

பார்வதி: எனக்குத் தாரையின் துக்கத்தைப் பார்த்துச் சகிக்கவில்லை.

பரமேசுவரன்: அவள் இனி விரத வாழ்க்கை வாழ்ந்து அவளுடைய உத்தம ஞானம் மேலும் உயர்ந்து செல்லும். கண்ணே, உன் வாழ்த்துத்தான் யாருக்கும் சாந்தியைத் தரும்; மாயை மயக்கங்களை ஒழிக்கும். தாரையை வாழ்த்துவாய். அவள் புகழ் உலகத்தில் சாசுவதமாக நிற்கும். ராவணனுடைய தீமைகள் முடிவதற்கு இதுவெல்லாம் நடைபெற்றது. செய்த தவங்களையெல்லாம் அவன் தின்று தீர்த்து விட்டான். அழியும் காலம் நெருங்கி விட்டது. அவனும் சுவர்க்கம் அடைந்து சாந்தி பெறுவான்.



செங்கோலும் ஜனநாயகமும்

க. சந்தானம்

14. அதிகார வர்க்கம்

எல்லா அரசாங்கங்களுக்கும் பொதுவான உறுப்பு அதிகார வர்க்கம். ஆதலால் திறமையும் நல்லொழுக்கமும் உள்ள அதிகார வர்க்கம் இருக்கும் எந்த அரசாங்கத்தாலும் பிரஜைகள் சுகமடைவார்கள். அதில்லாத எவ்வித அரசியல் முறையாலும் திருப்தியடைய மாட்டார்கள்.

முற்காலங்களில் அரசாங்கத்தின் அலுவல்கள் குறைவாக இருந்ததால் சொற்பக் குடும்பங்களே சர்க்கார் சேவகத்தால் பிழைத்து வந்தன. சைனியத்தில் மட்டுமே அதிக நபர்கள் இருந்தனர். அவர்கள் சாதாரணமாகத் தனி வகுப்பார்களாக இருந்தனர். மற்ற வகுப்பினர் போட்டி போடுவதில்லை.

இக் காலத்தில் அரசாங்க வேலைகள் பெருகி, சர்க்கார் சேவகம் முக்கிய தொழிலாகி விட்டது. முற்றிலும் முதலாளித்துவத்தை அனுசரிக்கும் அமெரிக்க ஐக்கிய நாட்டில் கூட ஐந்தில் ஒரு குடும்பம் சர்க்கார் சேவகத்தை நம்பி யிருக்கிறது. பொதுநல சமுதாயத்தை (சோஷலிஸ்டு சமுதாயத்தை) நாடும் தேசங்களில் நாளடைவில் பெரும்பாலோர் ஏதாவது ஒருவித சர்க்கார் சேவகர்களாகி விடுவார்கள்.

தற்சமயம் மத்திய, ராஜ்ய அரசாங்கங்களிலும், நகரசபை, துறைமுக டிரஸ்டு முதலிய பொது ஸ்தாபனங்களிலும் 60 லக்ஷம் சேவகர்கள் இருக்கின்றனர். ஆண்டுதோறும் இவர்களின் எண்ணிக்கை 1 லக்ஷம் அதிகரித்து வருகிறது. ஆதலால் பொது மேடைகளில் சர்க்கார் சேவகத்தை இகழ்ந்து பேசுவோரும் தமது மக்களையும், பந்துக்களையும் சர்க்கார் சேவகத்தில் புகுத்தப் பிரம்ம பிரயத்தனம் செய்வதைக் காண்கிறோம்.

இந்த நிலையில் ஒரு நாட்டில் எதேச்சாதிகார ஆட்சி இருக்குமாயின், அதை ஆதரிக்கும் கட்சியையோ, வகுப்புக்களையோ சேர்ந்தவர்களுக்கே சர்க்கார் சேவகம் கிடைக்கும். ஆதலால் மக்கள் ஆளுவோர், ஆளப்படுவோர் என்ற இரண்டு பாகங்களாகி விடுவார்கள். மற்றக் காரணங்களோடு இதுவும் எதேச்சாதிகாரத்தை எதிர்த்து ஜனநாயகத்தை ஆதரிப்பதற்கு முக்கியமான காரணமாகும்.

நாட்டில் உள்ள எல்லோரும் சர்க்கார் சேவகத்தில் அமரச் சம சந்தர்ப்பம் இருக்க வேண்டும் என்பது ஜனநாயகத்தின் அடிப்படையான கொள்கை. யோக்கியதை, திறமை, கல்வி இவற்றின் பேரிலேயே சேவகர்கள் நியமிக்கப்பட வேண்டும். இவைகளை மதிப்பிடப் பட்சபாதமற்ற நியமங்களும், நியமன அதிகாரிகளும் அவசியமாகும்.

முதலாளித்துவ சமூகங்களில் சர்க்கார் சேவகத்துக்குச் சம சந்தர்ப்பங்கள் அளிக்கப்பட்ட போதிலும், கல்வி, தேர்ச்சி ஏற்பாடுகளில் தனவந்த குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு அதிக வசதிகள் இருப்பதால், உயர்ந்த உத்தியோகங்களில் அவர்களே பெரும்பாலோராக இருக்கின்றனர். இந்த அநீதியை அகற்ற, ஏழை மாணவர்களுக்குத் தனி வசதிகளும், உதவிகளும் கொடுக்க வேண்டுமென்று கிளர்ச்சி ஏற்பட்டு, அதற்காகப் பலவித ஏற்பாடுகளும் செய்யப்படுகின்றன.

பாரதத்தின் பண்டைக் காலத்திய சமூக அமைப்பின் காரணமாக, சில வகுப்பார்கள் பரம்பரையாகத் தாழ்ந்த வகுப்பினராகக் கருதப்பட்டு அவர்களுக்குள் கல்வியும், நாகரிகமும் பரவாமலிருந்து வந்திருக்கின்றன. பிழைப்போடு, சர்க்கார் சேவகத்தால் [அவ் வகுப்பாருக்குக் கௌரவமும் உண்டாவதால், அவர்களுக்கு ஒரு சவு ஒதுக்கி வைத்து அந்த வகுப்பினருக்குள் அதிக யோக்கியதை யிருப்பவர்களை நியமிக்க வேண்டுமென்ற ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இது தாற்காலிகமாக இருப்பின் நியாயமே. ஆனால் இதில் ஓர் அபாயம் இருக்கிறது. தாழ்ந்த வகுப்பு என்று கணக்கிடப்படுவதால் லாபமிருந்தால் அதுவே ஒரு சம்பத்தாகப் பாவிக்கப்பட்டு வகுப்பு வித்தியாசங்கள் மறைவது கஷ்டமாகி விடும். தவிர, குறைந்த யோக்கியதையுள்ளவர்களைச் சர்க்கார் சேவகத்தில் எடுத்துக் கொள்ளுவதால், அதன் தரமே தாழ்ந்து பொது நலம் குன்றி விடும். சமமான கல்வி வசதிகள் இருந்தால், எந்த வகுப்பிலும் ஏறக் குறைய அதே எண்ணிக்கையில் திறமையுள்ள இளைஞர் கிடைப்பார்களென்று சமூக விஞ்ஞானிகள் அபிப்பிராயப்படுகின்றனர்.

ஜனநாயகத்தில் அதிகார வர்க்கம் பொது ஜனப் பிரதிநிதிகள் கொண்ட சட்டசபைக்கும், அதன் நிர்வாகியான மந்திரிசபைக்கும் பக்தியோடு தொண்டு புரியும் என்று எண்ணுவது சகஜம். ஆனால், எதேச்சாதிகாரத்தில், இருக்கும் பயம் போவது மட்டுமே நிச்சயம். பக்தி ஏற்படுவது சந்தேகமாக இருக்கிறது. ஜனநாயகத்தில் திடீரென்று சர்க்கார் சேவகர்களை வேலையைவிட்டு நீக்கமுடியாது; தண்டிக்கவும் முடியாது. சேவகர் சங்கங்கள் ஏற்பட்டு, சேவகர்களின் உரிமைகளை மட்டுமின்றி அவர்களின் சலுகைகளையும் பாதுகாத்து வருகின்றன. ஊதியம், விடுமுறை முதலியவற்றிலும் மிதமிஞ்சிய சலுகைகள் தேடுகின்றன. அதிகார வர்க்கத்தை அடக்கி ஆண்டு அதனிடமிருந்து பொது மக்களுக்குப் போதிய

சேவை பெறுவது ஜனநாயகத் தலைவர்களின் தலைவலியாக இருந்து வருகிறது.

அதிகார வர்க்கத்தின் எல்லாப் பாகங்களிலும் எண்ணிக்கையை அதிகரிக்கவும், உயர்தர உத்தியோகஸ்தர்களின் ஈவை உயர்த்தவும் ஓயாமல் சூழ்ச்சி நடந்து வரும். இதைத் தடுப்பது சுலபமல்ல. புதிய இலாகாக்களை ஏற்படுத்தி அதற்காகப் புதிய உத்தியோகஸ்தர்களை நியமிப்பது மந்திரிகளுக்கும் தமது செல்வாக்கை வளர்ப்பதற்கு வழியாகிறது.

இவ்விதம் அதிகார வர்க்கத்தின் பாரம் ஓயாமல் அதிகரித்து வரும். இதைத் தாங்க முடியாமல் ஜனநாயகம் உடைந்து போகுமோ என்று சந்தேகிக்க இடமுண்டு.

ஓர் புறம் சர்க்கார் சேவகத்தில் புகுந்து விட்டால், நிலைபெற்ற தொழிலும் ஊதியமும், பிற்காலத்தில் பென்ஷனும் கிடைப்பதால் எப்படியாவது புகுந்துவிட வேண்டுமென்ற அவா அதிகரித்து வருகிறது. மறுபுறம் ஆயுள் முழுதும் ஒரே மாதிரி பிரயோசனமற்ற வேலை செய்து வாழ்க்கைப்பலன் இழந்து விடுகிறோமென்ற உணர்ச்சியும் சர்க்கார் சேவகர்களுக்குள் வளர்ந்து வருகிறது. அதிகார வர்க்கத்தில் திருப்தியுடன் தமது பணி செய்வோர் மிகவும் சிலரே.

சர்க்கார் வேலையைத் திறமையுடனும், சிக்கனமாகவும் நடத்துவது ஓர் தனி விஞ்ஞானமாகி வருகின்றது. ஒவ்வொரு சேவகர் செய்யும் வேலையையும் கணக்கிட்டு அவரது திறமையை மதிப்பிடுவதற்கு சூக்ஷ்மமான முறைகளைக் கண்டு பிடித்திருக்கின்றனர். தொழிற்சாலைகளைப் போலவே சர்க்கார் காரியாலயங்களும் சுறுசுறுப்பாகவும், குறிப்பிட்ட அலுவல்களைச் சரியான காலத்தில் செய்ய வேண்டுமென்பதும் இவற்றின் உத்தேசமாகும்.

சர்க்கார் சேவகத்தில் லஞ்சம் வாங்கவும், தமது அதிகாரத்தை அக்கிரமமாக உபயோகித்து லாபமடையவும் பல சௌகரியங்களும், சந்தர்ப்பங்களும் உள. அவைகளைத் தடுப்பது சுலபமல்ல, லஞ்சம் கொடுப்பவன் குற்றம் சாட்ட முன் வரமாட்டான். ஆதலால், அதை நிரூபிப்பதுசாதாரணமாகச்சாத்தியப்படாது.

பரிசுத்தமான அதிகாரவர்க்கம் செங்கோலின் முக்கிய சாதனமாகும். மக்களின் மனத்தில் அற உணர்ச்சி பெருகி, சமூகத்தின் செல்வம் வளர்ந்து சர்க்கார் சேவகர்களுக்குத் தாராளமான ஊதியம் கொடுப்பது சாத்தியமாகும்பொழுது இந்த நிலைமை நன்கு ஏற்படும். அதுவரையில் லஞ்சத்துக்கு எதிராகப் பிரசாரம் செய்து, அகப்பட்டுக் கொண்டவர்களைத் தண்டித்து, அந்தப் பழக்கத்தின் மீது அருவருப்பு உண்டாக்கி வருவதே சாத்தியமானது.


முக்கிய பதவிகளில் இருக்கும் உத்தியோகஸ்தர்களின் பொறுப்பு என்ன என்பது ஓர் சிக்கலான பிரச்னை. பொதுவாக, சர்க்காரின் கொள்கைகளையும் திட்டங்களையும் உற்சாகத்துடன் நிறைவேற்ற வேண்டும் என்று கூறலாம். ஒரு கொள்கையோ, திட்டமோ நாட்டுக்குத் தீங்கு விளைவிக்கும் என்று ஓர் உயர் பதவியிலிருக்கும் உத்தியோகஸ்தர் எண்ணினால் அவர் கடமை என்ன? சர்க்கார் முடிவுக்கு முன் அவருடைய அபிப்பிராயங்களைத் தெளிவாக எடுத்துரைக்கப் பூர்ண வசதியளிக்க வேண்டும் என்பதைக் கொள்கை அளவில் அனைவரும் ஒப்புக் கொள்ளுவார்கள். ஆனால் அவ்விதம் செய்வோர்கள் மீது கோபிப்பதும், அவர்களை ஒதுக்கி விட்டு மேலதிகாரிகளுக்குத் தலை அசைப்போர்களை உயர்த்துவதும் சகஜமாக இருக்கிறது.

தனக்குப் பிடிக்காமலிருந்தாலும், சர்க்கார் திட்டங்களைச் சரிவர அமுல் செய்வது அதிகாரிகளின் கடமையாகும். ஆனால், இந்தத் தத்துவத்தை மிதமிஞ்சி வற்புறுத்தலாகாது. கூடியவரையில் திட்டத்தில் நம்பிக்கையில்லாதவர்களை அவர்களுக்குப் பிடித்த பணிக்கு மாற்றிவிட்டு, அதை மனப்பூர்வமாக ஏற்பவர்களின் மூலம் அமுல் செய்வது நலம். அப்படிச் செய்யும் பொழுது திட்டத்தை ஏற்காதவர்களை அவமானப்படுத்தவோ, தாழ்த்தவோ கூடாது.

ஒரு பெரிய தவறு நடந்து விட்டால் அதற்கு எவர் பொறுப்பாளி என்று உடனே தீர்மானித்துத் தண்டிக்கப்படுவது அதிகார வர்க்கத்தின் நேர்மைக்கு மிகவும் அவசியமாகும். கீழ்த்தரச் சேவகர்மீது பொறுப்புகளைச் சுமத்திவிட்டுப் பெரிய உத்தியோகஸ்தர்கள் தப்பித்துக் கொண்டு விடுவது வழக்கமாக இருக்கிறது. விசாரணைகள் பெரிய உத்தியோகஸ்தர்கள் மூலமே நடைபெறுவதால், அவர்கள் தங்கள் கூட்டத்தைச் சேர்ந்தவர்களைத் தப்புவிக்க முயலுவார்கள். இவ்வித விசாரணைகள் பொது வாழ்வில் பிரசித்தி பெற்றவர்கள் மூலம் நடைபெறுவது நலம். எவ்வாறு மிகப் பெரிய உத்தியோகஸ்தர்களின் தவறுகளுக்கு மந்திரிகள் பொறுப்பு ஏற்றுக் கொள்ள வேண்டுமோ, அவ்வாறே சிறிய உத்தியோகஸ்தர்கள் தவறுகளுக்கும் பெரிய உத்தியோகஸ்தர்கள் பொறுப்பு ஏற்பது நியாயமாகும். எவ்வளவு ஜாக்கிரதையாக மேற்பார்வையிட்டாலும், பிசகைத் தடுத்திருக்க முடியாது என்று நிரூபிக்கப்பட்டாலொழிய மேற்பார்வை செய்ய வேண்டிய உத்தியோகஸ்தரே முக்கிய குற்றவாளியாகக் கருதப்பட வேண்டும்.

சர்க்கார் சேவகர்கள் தங்கள் ஓய்வு நேரத்தில் சாகித்தியம், கலை, விஞ்ஞானம் முதலிய துறைகளில் தேர்ச்சியடைய வசதிகள் அளிக்கப்பட வேண்டும். அவ்விதம் தேர்ச்சியடைவோர்களுக்குப் பரிசுகள் வழங்கிக் கௌரவிப்பதும் நலமாகும்.

நூறு வருஷங்களுக்கு முன் இந்தியாவில் வேலை பார்த்து வந்த பல கலெக்டர்கள் வடமொழியிலும், வேதாந்தத்திலும் பண்டிதர்களாகி உயர்ந்த நூல்களை எழுதினர். குடும்பக் கவலைகள் இல்லாத சர்க்கார் சேவகர்கள் தங்கள் வேலையோடு திருப்தியடையாமல் இதர துறைகளில் நிபுணர்களானால், வாழ்க்கையின் தரம் உயர்வதுமன்றி, தங்களுடைய சர்க்கார் பணியையும் நன்கு செய்வார்கள். தொழிலுக்கும் ஆத்ம வளர்ச்சிக்கும் எவ்வித முரண்பாடும் இல்லை. காரியாலயத்தில் குறிப்பிட்ட காலம் வேலை செய்து விட்டு மீதி நேரத்தைச் சீட்டாடுவதிலும், வம்பு பேசுவதிலும்போக்குவது மதியீனம் என்ற உணர்ச்சி அதிகார வர்க்கத்தாரிடம் பரவ வேண்டும்.



52

புகழைப் பற்றிச் சொல்லியபின் அருள் புலால்மறுத்தல் முதலிய விஷயங்களைப் பற்றியுள்ள குறள் பாகம் துறவறத்தாருக்குச் சொன்னதாக உரையாசிரியர்களின் கருத்து. 25-வது முதல் 38-வது அதிகாரம் வரை துறவற இயல் என்று அதிகாரப் பிரிவும் செய்திருக்கிறார்கள்.

குறள் தோன்றிய காலம் ஜைன சமயமும் பௌத்த சமயமும் தென்னாட்டில் பரவியிருந்த காலம். திருவள்ளுவர் ஜைனரே என்று சிலருடைய கருத்து. அவ்வாறே இருக்கலாம். எப்படியாயினும் முனிவர் எல்லாருக்கும் பயன்படும் நூல் இயற்றினார். ஜைனர் உள்பட எல்லாச் சமயத்தாருக்குமாகத்தான் எழுதினார். அவர் காலத்தில் நாட்டில் ஜைனர்களும் பௌத்தர்களும் நடத்தி வந்த துறவறத்து மடங்கள் பல இருந்தன. அவர்களுக்குரிய உபதேசத்தையும் குறளில் சேர்த்தே இருக்கலாம். ஆயினும் இந்தப் பதினான்கு அதிகாரங்களும் துறவறத்தாருக்கே என்று வைத்துக்கொள்ள வேண்டியதில்லை. இவற்றில் அடங்கிய விஷயங்களில் இல்லறம் நடத்தும் மக்களுக்குப் பயனபடுவன பல இருக்கின்றன.

துறவில் முக்கியமான அம்சம் பற்றும் பசையும் அறுத்தலே என்பது வள்ளுவரின் முடிபு. முக்திக்கு சந்நியாசம் இன்றியமையாதது என்பது முனிவரின் அபிப்பிராயம் அல்ல. துறவு பூணாமலே இல்லற வாழ்க்கை நெறி தவறாமல் நடத்திப் பற்றுகளை அறுத்து நடுவுநிலைமை காத்து வந்தோமானால் வீடு பெறலாம் என்பது முனிவருடைய உபதேசம். இதுவே கீதை உபதேசமும் என்று பகவத்கீதை ஓதியவர்கள் காண்பார்கள். அனைவருக்காகவும் தமிழ் முனிவரால் எழுதப்பட்ட குறளில் அனைவரும் பயன் பெறும்படியான சமயபேதமற்ற உபதேசங்கள் மலிந்திருக்கின்றன.

* * *

அருள் என்பது மகன் மனைவி என்று தொடர்பு பற்றாமல் இயல்பாக எல்லா உயிர்கள் மேலும் செல்லும் கருணை. 'ஆண்டவன் அருள்' என்பது வேறு. அது நம் மேல் அவன் வைக்கும் கருணை. அதனை நாம் நினைத்தும் வேண்டியும் வரவேண்டியது பக்தர்களின் ஆசாரம். குறளில் அருள் என்பது நாம் பிராணிகளிடம் வைக்க வேண்டிய கருணை. யாதானும் ஒரு உயிர் இடர்ப்பட்டால் அதைக் கண்டதும் தன்னுயிருக்கும் உடலுக்கும் உற்ற துன்பத்தைப் போல் வருந்துவதற்கு நெஞ்சு ஈரம் என்பது பெயர். அதுவே அருள்.

உலகத்தில் பல சமயங்கள் உண்டு. அவை பல உபதேசங்களைச் செய்கின்றன. பல கொள்கைகளை வற்புறுத்துகின்றன. ஆயினும், அவற்றில் எல்லாம் பொதுவாக இருப்பது ஒன்று. அருள்தான் வீடு எய்தும் குணம் என்று எல்லாச் சமயங்களும் ஒன்றுபடச் சொல்லுகின்றன. அந்த அருளைப் போற்றுக என்கிறார் முனிவர்

நல்ல நெறியில் நின்று ஆராய்ந்து பார்த்தால் அருளே நமக்குத் துணையாகும் என்று அறிவோம். எந்தச் சமயத்தைப் பின்பற்றினாலும் அதுவே துணை என்று காண்போம். மெய்ப்பொருள் ஆராய்ச்சி பலவிதம் செய்யலாம். அப்படியெல்லாம் செய்தும் முடிவில் அருள்தான் வழி என்பதைக் காண்போம்.

> நல்லாற்றான் நாடி
> அருள்ஆள்க பல்லாற்றான்
> தேரினும் அஃதே
> துணை

நாடி—படிப்பு அனுமானம் முதலிய எல்லா வகையிலும் தேடி ஆராய்ந்து. அருள் ஆள்க—அருள் அல்லது நெஞ்சு ஈரத்தை வளர்த்தும் காத்தும் வருக. பல்லாற்றான் தேறினும்—பேதப்பட்ட சமய நெறிகளையெல்லாம் ஆய்ந்து பார்த்தாலும், அருள்தான் விடுதலை தரும் துணை என்பதை உறுதியாகக் காண்போம்.

* * *

> மன்உயிர் ஓம்பி
> அருள்ஆள்வார்க்கு இல்என்ப
> தன்உயிர் அஞ்சும்
> வினை.

பொதுவாகச் சொல்லுகிறார்: பற்றும் வேற்றுமை யுணர்ச்சியும் அகற்றி உள்ளத்தில் எல்லா உயிர்களிடத்தும் கருணை ஏற்பட்டு விட்டால் பாப பயம் அறவே நீங்கிப் போகும். உயிருக்குப் பகை பாபம். வினை என்பது இங்கே தீவினை - பாபம்

எல்லா வியாதிகளுக்கும் ஒரு மருந்து சொல்லுவது போல் எல்லாப் பாபங்களுக்கும் மருந்தாகும் அருள்.

[என்ப- என்று அறிவடைந்தவர்களுடைய முடிவு.]


GOKUL
SANDAL
TOILET POWDER
GOKUL
SANTOL
B. Sarojadevi

சேங்காலிபுரம் தீட்சிதர்

எஸ்.வி.எஸ்.

பக்கத்திலேயே இருப்பவர்களுக்கு மகத்துவம் தெரியாது; தூரத்தில் இருப்பவர்களுக்குத்தான் தெரியும் என்பார்கள்.

சமீபத்தில் சென்னையிலிருந்து யாராகிலும் வெளியூர்களுக்குப் போயிருந்தால், சென்னையில் என்ன முக்கியமான விசேஷம் என்று சொல்லத் தெரியாமல் விழித்திருக்கலாம். ஆனல் வெளியூர்வாசிகள்'டக்'என்று சென்னையில் நிகழும் விசேஷத்தைச் சொல்லி யிருப்பார்கள். "சென்னை, மயிலாப்பூரில் சேங்காலிபுரம் அனந்தராம தீட்சிதர் கதை நடந்ததாம். அதற்குத் தினம் ராஜாஜி போய் வந்தாராமே. உங்களுக்குத் தெரியாதா?" என்று ஆர்வத்தோடு கேட்டிருப்பார்கள்.

ஆமாம்! இந்தச் செய்தி சென்னையில் மட்டுமல்ல, தமிழ் நாடு முழுவதுமே பரவிப் பெரும் பரபரப்பை உண்டாக்கி யிருக்கிறது.

சேங்காலிபுரம் ஸ்ரீ அனந்தராம தீட்சிதர் அவர்கள் வேத சாஸ்திரங்களைக் கண்டு, பல தலைமுறைகளாகப்போதித்துவரும் பெரும் சாஸ்திரக் கலைஞர்களைக் கொண்ட பரம்பரையில் வந்தவர். தாமே முறைப்படி வேதாத்யயனம் செய்து வட மொழிக் கடலில் நீந்தியவர். சென்ற முப்பத்தெட்டு ஆண்டுகளாகத் தேசம் முழுதும் சென்று உபந்நியாசங்களைச் செய்து வேத தர்மத்தைப் பரப்பி வருகிறார். கற்றோரையும் மற்றோரையும் பிணைக்கும் தகைமை பெற்ற சொற்செல்வர்.

தமிழ் நாட்டில் ராமாயணம் சொல்லும் உபந்நியாஸகர்கள் எத்தனையோ பேர்கள் இருக்கின்றனர். ஆனல் இவர்கள் எல்லோரையும்விட தீட்சிதர் உபந்நியாஸம் தனிப்பட்ட முறையில் துலங்குகிறது. அதற்குக் காரணம் அவர் சுலோகங்களைச் சொல்லும் முறைதான். உபந்நியாசகர்கள் யாரும் பெருத 'கணீர்' என்ற பலமான வெண்கலநாதக்குரலில் அவர் நிதானமாகத் தாமே ஏற்படுத்திக் கொண்ட ஒரு சந்தத்தில் வடமொழி சுலோகங்களைச் சொல்லி வரும் போது, காது நிறைந்து, கூட மனமும் நிறைந்து விடுகிறது. வடமொழி தெரியாதவர்களுக்குக்கூடப் புரிந்து விட்டாற் போன்ற பிரமை ஏற்படுகிறது. 'சமஸ்கிருதம், — வால்மீகி ராமாயணம்—இவ்வளவு சுலபமாகவா இருக்கிறது' என்ற மயக்கம், சமஸ்கிருதம் படியாதவருக்குக்கூட ஏற்படுகிறது. (ஆனல் இது மயக்கமோ, பிரமையோ அல்ல; உண்மையில் சமஸ்கிருதம் மிகஎளிய பாஷை என்றுதான் தீட்சிதர் சொல்வார்.) இந்த ஒரு விஷயமே ராஜாஜியை மீண்டும்மீண்டும், இல்லை, தினந்தோறும்தீட்சிதர் கதைக்குப்போகச் செய்தது. வால்மீகியை எவ்வளவு படித்தாலும் கேட்பது போல் ஆவதில்லை. 'கற்றலின் சிறந்தன்று கேட்டல்' என்பதுமுதுமொழிக் காஞ்சி அல்லவா?



ஸ்ரீ அனந்தராம தீட்சிதர்

தீட்சிதரிடம் மற்றொரு விசேஷ குணத்தைக் குறிப்பிட வேண்டும். நமது வேத தர்மத்தில், அனுஷ்டானங்களில், ஆசார முறைகளில் அவருக்கு அளவுகடந்த நம்பிக்கை. அந்த ஆசார முறைகளைக் கைவிட்டவர்களை அவர் தயவு தாட்சிண்யம் பாராமல் இடித்துக் காட்டும் தைரியத்தை என்னவென்று சொல்வது! பழைய பழக்க வழக்கங்கள் மாறிப் புது நவநாகரிக முறைகள் மலிந்து வரும் இந்நாட்களில் இப்படிப் பேசுகிறாரே என்று யாரும் நினைக்கக் கூடும். ஆனல் ஸநாதன தர்மத்தில் அவருக்குள்ள திட நம்பிக்கை யாரையும் லட்சியம் செய்யாமல் துணிந்து பேசச் செய்கிறது. இந்தத் தைரியம் வேறு, ராஜாஜியின் கவனத்தைப் பெரிதும் கவர்ந்தது. உண்மையைச் சொல்வதற்கு எங்கும் எப்பக்கமும் பயத்தையே காணும் இந்நாளில் நமது ஹிந்து தர்மத்தின் சிறப்பை எடுத்துச் சொல்வதற்கு இங்கொரு தைரியசாலி யிருக்கிறாரே என்று ராஜாஜி பெரும் ஆறுதல் அடைந்திருக்கிறார்.

இப்பொழுதெல்லாம் தீட்சிதர் கதை என்றால் ஒரு தத்துவமாகப் போய்விட்டது. மக்கள் ஆயிரக்கணக்கில்நாலாயிரம்,ஐயாயிரம் என்று நாளுக்கு நாள் பெருகி வருகிறார்கள். இதற்குக் காரணம் அவருடைய பிரவசனத்தில் காணும் நகைச்சுவை. எல்லோரும் ரஸிக்கும் படியான உப கதைகள், உபமானங்கள் ஹாஸ்ய ரஸத்துடன் சொல்லும் முறை அவருக்கு அனேக ரஸிகர்களைத் திரட்டித் தந்திருக்கின்றது. கூட்டம் கூட்டமாக வருகிறார்கள். ஹாஸ்யம் என்பது இரு பக்கமும் கூர்மையுள்ள கத்திபோன்றது. இதைச் சர்வ ஜாக்கிரதையுடன் கையாள வேண்டும்.

அன்று சுந்தர காண்டப் பகுதி நடந்து கொண்டிருந்தது. சுந்தரகாண்டப் பகுதியின் முக்கிய கதாநாயகன் ஹனுமான் என்று சொல்லவா வேண்டும்? ஹனுமான்வீரன்; புத்தி சாமர்த்திய முள்ளவன். அத்துடன் அடக்கமே உருவானவன்; முதல் ராமபக்தன். இப்படிப் பட்ட ஹனுமானை மகாத்மா என்றே வால்மீகியும் முன்னோர்களும் போற்றிக் கொண்டாடி

வந்திருக்கிறார்கள். ஆனால் ஹனுமான் குரங்கு வடிவினன். ஆதலால் ஹாஸ்யம் செய்வதற்கு வேண்டிய வாய்ப்பிருக்கிறது. அதிலும் நம் நாட்டில் குரங்கு என்று சொன்னாலே போதும், சிரிப்பு வந்துவிடும். ஹனுமார் இலங்கையைத் தாண்டியதும், ராவணன் அரமனையில் ஒவ்வொரு அறையாக சீதையைத் தேடிய காட்சிகளும் பாமர ஹாஸ்யத்துக்கு அதிக இடம் கொடுக்கும் பகுதிகளாகும். இவற்றைச் சொன்னாலே மக்கள் சிரித்து விடுவார்கள். அப்பொழுது ஹனுமானின் சிறப்பு கேட்போர் மனத்தில் நிற்காமல் போய்விடும். அதனால் அன்று ராஜாஜியைப் பேசச் சொன்ன போது, ராஜாஜி ஒரு விஷயத்தை வற்புறுத்திச் சொன்னார்: 'ஹனுமானைச் சாதாரணக் குரங்காக மக்கள் மனத்தில் சித்திரித்துவிடக் கூடாது! அவன் ஒரு மகாத்மா! அந்த எண்ணத்தை வலியுறுத்த வேண்டும். அதனால் ஹனுமானைப் பற்றிக் குரங்கு என்ற முறையில் வரும் ஹாஸ்யங்களை நீக்கிவிட வேண்டும்.

''ஒரு மகத்தான காரியத்தை முன்னிட்டு, ஆண்டவனே ராமனாக, மனிதனாக அவதாரம் செய்தான். அதே போல் இந்திரன் முதலிய தேவர்கள் எல்லாம் குரங்காகவும் கரடியாகவும் அவதாரம் செய்தார்கள் என்று சொல்லப் பட்டிருக்கிறது. ஆகவே, ஹனுமான் ஒரு குரங்கு என்றால் சாமானிய குரங்கு அல்ல; சகல கலைகளையும் கற்றுத் தேர்ந்து அடங்கிய ஞானி அல்லவா அவன்?

''முன் காலத்தில் அரசர்கள் குடிகளின் நிலையறிந்து வரச் சாமான்யக் குடியானவன் போல் வேஷம் போட்டுக் கொள்வார்கள்.

''சாதாரணக் குடியானவர்களும் விசேஷ காலங்களில் நாடகத்துக்காகவும் கூத்துக்காகவும் ராஜா மாதிரி வேஷம் போட்டுக் கொள்வார்கள்.

''ஹனுமான், சுக்ரீவன், அங்கதன் எல்லாரும் குரங்குகள் என்றால் ராஜா குடியானவன் வேஷம் போட்டுக் கொண்ட மாதிரி என்று கொள்ள வேண்டும்'' என்றார். இதைக் கேட்டவுடன் அவதார தத்துவமே ஜனங்களுக்குப் புரிந்துவிட்ட மகிழ்ச்சி எல்லாப் பக்கங்களிலிருந்தும் பெருகியது.

தீட்சிதர் கதைகளில் மற்றொரு விஷயத்தையும் குறிப்பிட வேண்டும்.

அடிக்கடி தெய்வ வழிபாட்டையும் ஆராதனையையும் வற்புறுத்திச் சொல்லி வருகிறார். ''தெய்வத்தை வணங்கினால் உங்களுக்கு வேண்டியதைத் தருவார் என்கிறேன்! அதில் ஒன்றும் சந்தேகமில்லை!'' என்று அடிக்கடி சொல்லி வருகிறார். ''உத்தியோக உயர்வு வேண்டுமென்றால் உத்தியோக உயர்வு கிடைக்கும். குழந்தைப் பேறு இல்லாதவர்களுக்கு அப் பேறு கிடைக்கும். இப்படி எதுவும் கிடைக்கும். அதனால் தெய்வத்தை வணங்குங்கள்'' என்று சொல்வது இந்தப் பகுத்தறிவு யுகத்துக்கு ஏற்குமா? என்று சிலருக்கு ஐயம் எழக்கூடும்.

இதற்கு ராஜாஜி ஒரு நாள் அருமையான விளக்கம் தந்தார்.

''தீட்சிதர் என்ன இப்படி ஈசுவரன் வேண்டியது கொடுப்பான் என்று சொல்கிறாரே என நீங்கள் நினைக்கலாம். அது வேண்டும்; இது வேண்டும் என்று ஈசுவரனை நெருங்கி விட்டால் பிறகு தானாகவே இந்தப் பற்றுக்கள் அற்றுவிடும். உங்களையெல்லாம் ஈசுவரனை நெருங்கச் செய்வதற்காகவே இப்படி யெல்லாம் ஆசை காட்டுகிறார்'' என்றார்.

உண்மையும் அதுதானே? ஈசுவர சாந்நித்தியம் கிடைத்து விட்டால் உலக ஆசைகள் எதற்குப் பயன்படும்?

சமீப காலத்தில் ஸ்ரீமான் சேங்காலிபுரம் அனந்தராம தீட்சிதர், சென்னையில் பெரும் தர்மப் புரட்சி செய்து வருகிறார். மயிலாப்பூரில் ராமாயணம் சொன்னார். இப்பொழுது வன்னிய தேனாம்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமண்ய சுவாமி கோவிலில் பத்தாம் தேதி வெள்ளிக்கிழமையிலிருந்து பக்தி வயலாகிய பாகவதத்தைச் சொல்லி வருகிறார்.

சேங்காலிபுரம் தீட்சிதர் செய்யும் பணி காலத்துக்கும் தேசத்துக்கும் மிக மிக அவசியமான பணி. ராஜாஜி போன்றவர்கள் அதைக் கேட்கப் போவதிலிருந்து 'நம் நாட்டில் மங்கியுள்ள இத்தகைய கல்விமான்களைக் கௌரவித்துப் பயனடைய வேண்டும்' என்பதை மக்களுக்கு வலியுறுத்தவே செல்கிறார்கள் என்பதை தெரிந்து கொள்ள வேண்டும். இவர்களே உண்மைக் கல்விமான்கள்! இவர்கள் பரம்பரை சுதந்திர பாரதத்தில் பெருக வேண்டும். இவர்கள் பணி சிறக்க வேண்டும்


Arvind
QUALITY FABRICS
'SANFORIZED'
REGISTERED TRADE MARK
ஷர்ட்டிங்குகள்
பாப்ளின்கள்
கோட்டிங்குகள்
மற்றும்
பல ரக கலர்
பிரிண்டுகள்
அரவிந்த் மில்ஸ் லிட்., அஹமதாபாத்
Registered User of the Trade Mark 'SANFORIZED'

பாகவதமாகிய

பக்தி வயல்

பௌராணிகர்

7 வராக அவதாரம்

ஸ்வாயம்புவ மனுவானவர் பிறந்ததும் பிரமனை நோக்கித் தாமும் தம் மனைவியும் என்ன பணிவிடை செய்ய வேண்டும் என்று வினவினார். "உங்களை ஒத்த மைந்தரைப் பெற்றுப் பூமியை ஆண்டு வேள்விகளை நடத்தி நாராயணனை மகிழச் செய்வீர்" என்று பிரமன் அவருக்குக் கட்டளையிட்டார்.

"உங்கள் சொல்லை நான் மீறமாட்டேன். ஆனால் எனக்கு இருப்பதற்கு இடம் இல்லையே. பூமியானது கடலின் ஆழத்தில் அமிழ்ந்து கிடக்கிறதே" என்றார் மனு. இதைக் கேட்ட பிரமன், "புவிமீது மாந்தரைப் பெருக்க நான் பிரியம் கொண்டபொழுது பூமியைக் கடல் கொண்டு போய்விட்டதே" என்று கவலையில் ஆழ்ந்தார். அச்சமயம் திடீரென்று கைக்கட்டை விரல் அளவில் ஒரு சிறு முள்ளம்பன்றி அவருடைய மூக்கிலிருந்து வெளியேறி ஓடியது. பிரமன் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுதே அந்தச் சிறிய பன்றி யானை அளவு வளர்ந்து உறுமிக்கொண்டு நின்றது. பிறகு தேவகாரியம் நிறைவேறுவதற்காக பிடரியைக் குலுக்கிக் கொண்டு, ஆகாயத்தில் தாவிக் குதித்துக் கடலுக்குள் பாய்ந்தது. மலையென விழுந்த பெரும் பன்றியால் பிளவுண்ட நீருடன் கடல் 'ஓ'வென்று கதறியது. தன் கால்களால் நீரை வகுத்து ஆழம் எல்லாம் தேடிக் கடலடியில் பதுங்கியிருக்கும் பூமண்டலத்தைக் கண்டு, பன்றி வேடம் கைக்கொண்ட நாராயணன் தம் இரு கொம்புகளுக்கு இடையே பூமியைத் தாங்கிக் கொண்டு மேலே கிளம்பினார்.

அப்பொழுது இரணியாக்ஷன் அவரை எதிர்த்தான். இரணியாக்ஷன் தக்ஷன் மகள் திதி என்பவளுக்கும், தவத்தில் சிறந்த கச்யப முனிவருக்கும் பிறந்தவன். ஒரு நாள் இரவுக்கு முன் தோன்றும் அந்தி மயங்கும் வேளையில் கச்யபர் தன் மாலைக் கடனை முடித்துக் கொண்டு, அக்னி முன்னிலையில் ஆழ்ந்த தியானத்தில் அமர்ந்திருந்தார். அச்சமயம் திதி அவரை நெருங்கி, "முனிவரே! மதயானை வாழையை வதைப்பதைப்போல் காமன் என்னை வருத்துகிறான். ஆகையால் என்னிடம் வாரும். வருந்துவோர் பெரியோரை அண்டுவது வீணாகாதன்றோ?" என்று மொழிந்தாள். இவ்வாறு மதி கெட்டு வெகுவாக மன்றாடும் மனைவியிடம் முனிவர், "பெண்ணே! இன்னும் சிறிது நேரத்தில் உன் கோரிக்கையை நிறைவேற்றுகிறேன். அறம், பொருள், இன்பம் என்ற வழியைப் பின்பற்றின மனிதனுக்குத் தன் உடலில் பாதி மனைவியே ஆகிறாள். ஆனால், இன்னும் ஒரு முகூர்த்தம் நீ பொறுத்துக் கொள்ள வேண்டும். இரவும், பகலும் கூடும் இந்த வேளையில் பூதங்களும், பைசாசங்களும், மற்றும் ருத்ரனுடைய கொடிய கூட்டங்களும், சடை விரித்துக் காடுடைய சுடலைப் பொடி பூசி, மாசடைந்த மேனியுடனே ருத்ரனும் வெளியேறித் திரிகிறார்கள். இது கெடுதிகள் மலிந்த நேரம்" என்று பதில் உரைத்தார்.

ஆனால் மன்மதனால் கலவரப்பட்ட மனத்தை யுடைய திதி, அவர் சொன்னதைக் கேட்காமல், பாமரப் பெண்ணைப் போல் அவருடைய ஆடையைப் பிடித்து இழுத்தாள். இதுவும் விதியின் விளையாட்டென்று கருதி, முனிவரும் அவளுக்கு இணங்கினார். பின்னர், நீராடி மனத்தை அடக்கித் தனிமையில் இருந்து, "ஓம்" என்ற பிரணவ மந்திரத்தைக் கச்யபர் ஓதலானார். திதிக்கு வெட்கம் மேலிட்டது. முனிவரிடம் மெதுவாக அணுகி, "பூதங்களுக்குப் பதியான ருத்ரன் என் கருவைக் கலைக்காமல் காக்க வேண்டும்" என்று வேண்டினாள். அதற்குக் கச்யபர், "காமவெறிகொண்டு என் சொல்லை மீறி, தேவரை அவமதித்து, ஆகாத வேளையில் நீ கருவுற்றாய். ஆகையால், அமங்கலமான மங்கையே! உனக்கு இரண்டு புதல்வர்கள் பிறப்பார்கள். இவர்கள் அனாதைகளைக் கொன்று, நல்லவரைத் துன்

புறுத்தி, மாதர்களைக் கற்பழித்து, நிரபராதிகளின் உயிரை வாங்கி, மூவுலகும் காணாத கொடுமைகளைக் கையாண்டு வாழ்வார்கள். முடிவில் ஆதிதேவன் நேராகவே வந்து அவ் விரு வரையும் கொல்லுவார்'' என்றார்.

''சுதர்சனத்தைக் கையில் ஏந்திய கடவுளால் என் மைந்தர் மடிவதில் எனக்குக் குறை ஒன்றும் இல்லை. அந்தணராகிய உங்கள் சாபத்துக்குத் தான் அஞ்சினேன்'' என்றாள் திதி.

''ஹரியினிடத்திலும், சிவனிடத்தி லும், என்னிடத்திலும் உன் மனம் இப் பொழுதேனும் ஈடுபட்டிருப்பது ஏற் றதே. உன் புதல்வரில் ஒருவனுக்கு ஹரி பக்தியில் சிறந்தவனும், மேலோருக்கு மேலானவனும், மாசில்லா மனமுடைய வனுமான மைந்தன் பிறப்பான். அவன் உள்ளத்தில் தாமரைக் கண் வாய்ந்த கடவுள் எப்பொழு தும் குடிகொண்டிருப் பார்'' என்று ஆறுதல் அளித்தார் கச்யபர்.

நிற்க, திதியின் வயிற் றில் கரு வளர்ந்து வந்தது. தேவர்களுக்கு இடையூறு வருமே என்று அஞ்சி நூறு வரு ஷங்கள் வரையில் கருவை வயிற்றிலேயே வைத்திருந்தாள் திதி. ஆயினும் அதனுடைய ஒளி எங்கும் பரந்து சூரி யனையும் சந்திரனையும் மங்கச் செய்தது; திசை களும் இருண்டு விட்டன. இதைக கண்டு அஞ்சின தேவர்கள் பிரமனிடம் சென்று முறையிட்டார்கள். அவரிடம் பிரமன் பின்வரும் வரலாற்றைச் சொன்னார்:

''என் மனத்தில் நின்று உதித்த ஸனக ரும் அவருடைய மூன்று சகோதரர் களும் ஒரு நாள் வைகுண்டம் சென் றார்கள். அங்கே ஓயாமல் மலரும் செடி களும் தினந்தோறும் பழம் கனியும் மரங் களும் உண்டு. பாபத்தை அகற்றும் ஹரிநாமத்தைக் கந்தர்வர் கானம் செய்வார்கள். வண்டினம் உயர் குரலில் ரீங்காரம் செய்வதை நாராயணன் துதியோ வென்று அன்னமும், கிளியும், மயிலும், சக்ரவாகமும் அசையாமல் செவியுறும். மணம் மிகுந்த மந்தார மலரும், குந்தமும், குரபகமும், அல்லி யும், அரளியும் ஹரியின் மேல் மாலையாக இருக்கும் துளசிதான் என்ன புண்ணியம் செய்ததோ என்று வியப்புறும்.

''அங்கே நவரத்தினங்களால் செய்த விமானங்களில் நாராயணனையே மனத் தில் வைத்திருக்கும் யோகிகள் அழி வின்றி வாழ்கிறார்கள். சிலம்போசையும் ஓசையுடன் தாமரையைக் கையில் ஏந்தி லக்ஷ்மி அங்கே உல்லாசமாய் நடமாடு கிறாள். நாராயணனுடைய நாமத்தைக் கேட்டதுமே மயிர்க் கூச்செறிந்துக் கண் ணீர் சொரிந்து, ஆண்டவன் மேல் அன்பால் தன்னை மறந்து நிற்கும் பெரி யோர்தான் அவ்விடத்தை அடைய முடியும்.

''ஸனகரும் அவருடைய மூன்று சகோ தரரும் தரணிக்குத் தந்தையான ஆதி தேவனைக் காண ஆவலுடன் சென்றார் கள். ஆறு வாயில்களைக் கடந்து வைகுண் டத்தின் ஏழாம்வாயிலை அடைந்தார்கள். அவ்விடத்தில் ஒரே தோற்றம் கொண்ட இரண்டு வாயில்காப்போரைக் கண் டார்கள். மாலை அணிந்த மேனியும், நான்கு கைகளும், கருநிறமும், செங்கண் பார்வையும், நெரித்த புருவமும்வாய்ந்த அவ் விருவரும் கோபம் கொண்டு, சனகாதி கள் முன் நின்றனர். தடங்கலை அறியாத யோகிகள் நால்வ ரும், காப்போரைக் கேட்காமல் வாயிலைக் கடந்தார்கள். உடனே வாயில்காப்போர் அவர் களைக் கம்பால் தடுத் தனர். ஹரியைப் பார்க்க நாம் போவ தைத் தடை செய்யும் இவர்கள் யார் என்று வியந்து, சனகாதிகள் அவ்விருவரையும் கீழ்வருமாறு சபித்தார்கள்

'''கடவுளை வழிபட்டு நற்குணங்கள் நிரம்பிய நல்லோர் இருக்கும் இவ்விடத் தில், வேற்றுமைப் புத்தியினால் வாடும் நீங்கள் எவ்வாறு வந்தீர்கள்? வைகுண்ட வாசிகள் போல் வேஷம் பூண்ட நீங்கள் நாராயணன் வயிற்றில் நாம் எல்லாரும் அடங்கியுள்ளோம் என அறிந்தால் பயத்துக்கு இடமேது? யாருக்கு யாரி டம் பயம்? இங்கேயும் வேற்றுமையை விடாமல் இருக்கும் நீங்கள், ஆசையும், சினமும், காமமும் மிகுந்த கீழ் உலகில் விழக் கடவீர்கள்!'

''இதைக் கேட்ட வாயில்காப்போர், வந்தவர்கள் பெருமையை உணர்ந்தவ ராய், முனிவர்கள் முன் விழுந்து வணங்கித் தாள் பிடித்து, 'நாங்கள் செய்த பிழைக்கு நீங்கள் அளித்த சாபம் தகுதியானதே. ஆனால் எங்கள் மீது கருணை கூர்ந்து, நாங்கள் கீழ் உலகில் வாழும்பொழுது நாராயணனுடைய




நினைவு நீங்காமல் எங்களுக்கு நிலைத்திருக்கும்படி அருள வேண்டும்' என்று கேட்டுக் கொண்டார்கள்.

"இந்த நிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருக்கும் தருணம், சாதுக்களுக்குச் சொந்தமான பகவானே அங்கு வந்து சனகாதிகளுக்குத் தோற்றம் அளித்தார். ஆண்டவனைக் கண்ட முனிவர்கள் ஆனந்த பரவசம் அடைந்தார்கள். பலவாறாகக் கண்ணனைத் துதித்தார்கள். 'என் பக்தர்களுக்குச் செய்த அவமானம் எனக்கே செய்ததாகும். என் மனத்தை அறியாத இந்தச் சேவகர்கள் இருவரும் தண்டனையைத் தாங்க வேண்டியவர்கள். ஆயினும் சாபம் முடிந்து, திரும்பவும் விரைவில் இவர்கள் என்னை அடைய வேண்டும் என்று நீங்கள் உத்தரவு செய்ய வேண்டும்' என்று ஹரியே முனிவர்களைக் கேட்டுக் கொண்டார்.

"சனகாதிகள் இந்த மொழிகளை வியப்புடன் கேட்டார்கள். 'அனைவரையும் ஆளும் ஆண்டவனுக்கு நாங்கள் செய்யும் உதவி என்பதும் உண்டோ? மூவுலகையும் படைத்துக் காத்து வரும் தேவரீருக்கு இதுவும் ஒரு லீலை. எவ்விதம் வேண்டுமானாலும் உங்களுடைய சேவகர்களுக்குக் கொடுத்த சாபத்தை மாற்றுவதற்கு நாங்கள் சித்தமாயிருக்கிறோம். கோபம் கொண்டு சாபம் கொடுத்த நாங்களும் தண்டனைக்குத் தயாராக இருக்கிறோம்' என்று ஹரியினிடத்தில் முனிவர்கள் விண்ணப்பம் செய்தார்கள். அதற்கு ஹரி, 'இவர்களுக்கு நீங்கள் இட்ட சாபமானது என்னால் முன்னமேயே தீர்மானிக்கப்பட்டது. இவ்விருவரும் அரக்கர்களாய்ப் பிறந்து வெறுப்பால் எப்பொழுதும் என் மீதே மனம் செலுத்திப் பிறகு என்னையே அடைவார்கள்!' என்றார்.

"விஷ்ணுவை வலம் வந்து வணங்கி மகிழ்ச்சியுடன் சனகாதிகள் வைகுண்டத்தை விட்டுப் போனார்கள். மகாவிஷ்ணு, ஜயன், விஜயன் என்ற இரு காவலர்களைப் பார்த்து, 'இவ்விடத்தை விட்டு வருந்தாமல் போய் வாருங்கள். இதற்கு முன்னொரு தரம் லக்ஷ்மி தேவியை நீங்கள் இவ்வாறே தடுத்திருக்கிறீர்கள். இதன் பயனை அனுபவித்து விட்டு என்னிடம் வந்து சேருவீர்கள்' என்றார். ஜயனும் விஜயனும் வைகுண்டத்திலிருந்து விழுந்தார்கள். அவர்கள்தான் இப்பொழுது திதியின் கருவை அடைந்திருக்கின்றனர். இதுதான் எங்கும் இருள் சூழ்ந்திருப்பதற்குக் காரணம்'' என்ற வரலாற்றைப் பிரமதேவன் தேவர்களுக்குக் கூறினார்.

தேவர்களும் திரும்பச் சென்றனர். நூறு வருஷங்கள் முடிந்ததும் திதி இரட்டைக் குழந்தைகளைப் பெற்றாள். அவர்கள் பிறக்கும் பொழுது அனேக கெட்ட சகுனங்கள் தோன்றின. விரைவிலே வளர்ந்த அவ்விரு அரக்கரும், ஆகாயம் அளாவி உயர்ந்தனர். கால் அடியால் பூமியை அதிரச் செய்தனர். முதலில் பிறந்தவனுக்கு இரண்யாக்ஷன்



என்றும், பின் பிறந்தவனுக்கு இரண்யகசிபு என்றும் கச்யபர் பெயர் இட்டார்.

தன்னை ஒருவரும் வெல்லவும் முடியாது, கொல்லவும் முடியாது என்று மதம் கொண்டு, இரண்யாக்ஷன் சண்டையைத் தேடித் தேவலோகம் சென்றான். இவனைக் கண்டதுமே தேவர்கள் அஞ்சிக் கருடனைக் கண்ட பாம்பைப் போல் பதுங்கிக் கொண்டனர். இந்திரனைக் காணாமல் வீறிட்டுக் கொண்டு அரக்கன் கடலுக்குள் புகுந்தான். பல ஆண்டுகள் கடலைக் கலக்கி கதையால் அலையைப் புடைத்து, நடுவில் வருணனுடைய தலைநகரமாகிய விபாவரி என்ற இடத்தை அடைந்தான். வருணனை வேடிக்கையாக வணங்கி, "தேவரீர்! என்னுடன் போர் செய்ய வேண்டும்" என்று ஏளனம் செய்தான்.

பொங்கும் சினத்தை அடக்கிக் கொண்டு வருணன், "எனக்கு வயதாகி விட்டது. நான் இப்பொழுது போரை விட்டு விட்டேன். உன்னுடன் போராட ஆதிதேவனாகிய விஷ்ணுவால்தான் முடியும். நீ அவரைத் தேடிப் போ" என்று கூறினார்.

இதைக் கேட்ட இரண்யாக்ஷன், சிறிதும் கவலைப்படாமல் ஹரியைத் தேடிக் கடலில் திரிந்தான். அப்பொழுது பூமியைத் தூக்கிக் கொண்டு மேல் கிளம்பும் பன்றியைக் கண்டு, "ஆ! இதென்ன, ஒரு புது கடல் ஜந்து" என்று அவமதித்துப் பேசினான். "பன்றி வேஷம் பூண்டிருக்கும் கொடுந்தேவனே! பூமி எங்களுடையது. மறைந்து நின்று கொல்லும் வித்தை என்னிடம் பலிக்காது. இப்பொழுதே உன்னைக் கொன்று என்னுடைய இனத்தாரின் கண்ணீரைத் துடைக்கிறேன்" என்று அலறினான். பூமியை நீர்மேல் வைத்து விட்டு ஹரி அரக்கனை எதிர்த்தார். பாம்பெனச் சீறினான் அரக்கன். கதையால் விஷ்ணுவை அடிப்பதற்கு முயன்றான். ஆனால் யோகிகள் யமனிடம் நின்று தப்புவது போல், ஹரி அடிபடாமல் நகர்ந்து கொண்டார். பசுவுக்குப் போரிடும் காளைகளைப் போல் இருவரும் யுத்தம் செய்தார்கள். போரைப் பார்க்க வந்த பிரமன் ஹரியினிடம், "இனிமேல் தாமதிக்க வேண்டாம். என்னிடம் வரம் வாங்கி மதம் கொண்டு திரியும் இவ்வரக்கனை இந்த உச்சி வேளையிலேயே கொன்று விடுங்கள்" என்று வேண்டினார். திரும்பவும் அரக்கனுக்கும் ஹரிக்கும் பயங்கரமான யுத்தம் நடைபெற்றது. இரண்யாக்ஷன் தன் கதையைச் சுழற்றி ஹரியின் மேல் வீசினான். விளையாட்டாக அதைக் கைப்பற்றி, "இதோ, உன் கதை. மறு முறையும் எறிந்து பார்" என்று நகைத்தார் ஹரி.

அவமானம் மிகுந்து சினம் வளர, இரண்யாக்ஷன் தீப்பொறி பறக்கும் சூலத்தை விஷ்ணுவின் மீது வீசினான். சுதர்சனத்தால் சூலத்தைத் துண்டாக்கினார் ஹரி. நெருங்கி வந்து கையால் மார்மேல் அடித்தான் இரண்யாக்ஷன். மத யானை மேல் விழுந்த பூமாலை போல் அவன் கரங்கள் பலம் அற்றுப் போயின. உடனே இரண்யாக்ஷன் தன் மாயையை ஏவினான். பின் பெரும் புயல் வீசியது. திக்குகள் இருண்டன. கல் மழை பெய்தது. பல்லாயிரம் அரக்கர்கள் ஆயுதங்களோடு தோன்றினர். மாயையே உருவெடுத்த ஹரி தம் சுதர்சனத்தால் இவை அனைத்தையும் நீக்கிப் பூமியை நிர்மலமாகச் செய்தார். இதைக் கண்ட அரக்கன் விஷ்ணுவைத் தன் இரு கைகளால் கட்டிப் பிடித்தான். ஆனால் மறு விநாடியில் அவர் கட்டுக்கு வெளியில் நிற்பதைப் பார்த்து வியந்து கோபம் கொண்டான்.

இந்த விளையாட்டு இனி போதும் என்று தீர்மானித்த ஹரி, இரண்யாக்ஷனுடைய காதின் அடியில் மெதுவாகத் தட்டினார். அரக்கன் தள்ளாடிக் கண் விழி பிதுங்கி மரம்போல் சாய்ந்து உயிர் துறந்தான்.

தேவர்கள் ஒன்று கூடி, "வேள்விக்கு வேந்தே! சத்வ குணத்தின் வடிவே! உங்களால் நாங்கள் பிழைத்தோம்" என்று துதித்தார்கள்.

இந்தக் கதையை (1) மைத்ரேயர் விதுரருக்குச் சொன்னதாக (2) சுகர் பரீக்ஷித்துக்குச் சொன்னதை (3) சூதர் சௌனகாதிகளுக்குச் சொன்னார்.

பொங்கும் புகழுக்கு இதோ புதியதோர் சந்தர்ப்பம்

"நீங்களும் சினிமா நக்ஷத்திரம் ஆகலாம்"

என்ற போட்டியில் சேர்ந்துகொள்ளுங்கள்

விவரங்களுக்கு
உங்களுடைய "ஹாஸலேன்' ஸ்னோ" வியாபாரிலைய
இன்றே கண்டு தெளிவான விவரம் தெரிந்துகொள்ளுங்கள்
அல்லது
"நீங்களும் சினிமா நக்ஷத்திரமாகலாம்' என்ற போட்டி
தபால் பெட்டி 6532, பம்பாய்-26
என்ற விலாசத்திற்கு எழுதிக்கேளுங்கள்

போட்டி முடிவு தேதி: நவம்பர் 15-ம் தேதி '68



"ஹாஸலேன்' ஸ்னோ" தயாரிப்பாளர்களால்
ஏற்படுத்தப்பட்ட ஒரு போட்டி

அத்தியாயம் 30

நள்ளிரவில் நால்வர்

மூன்சிறை அறக்கோட்டத்தின் வாயிலில் எதிர்பாராத விதமாகக் கரவந்தபுரத்துத் தூதனைச் சந்திக்க நேர்ந்தது இரண்டு வகையில் நன்மையாக முடிந்தது தளபதி வல்லாள தேவனுக்கு. ஒன்று அந்தத் தூதன் கொண்டு வந்திருந்த அதி முக்கியமான அவசரச் செய்தியைத் தெரிந்து கொள்ள முடிந்தது. மற்றொரு நன்மை, 'அரண்மனைக்குப் போவதற்குக் குதிரையில்லையே?' என்று கவலைப்பட்டுக் கொண்டிருக்காமல், தூதனுடைய குதிரையிலேயே இருவரும் போய் விடலாம். பசி தீர அறக்கோட்டத்தில் சாப்பிட்டு விட்டுப் பின்பு அரண்மனைக்குப் புறப்படலாம் என்றுதான் முதலில் தளபதி நினைத்திருந்தான். ஆனால் தூதன் கொண்டு வந்திருந்த செய்தியின் அவசரத்தை அறிந்தபோது பசி, களைப்பு எதுவுமே அவனுக்கு மறந்து போய் விட்டன. தூதனின் குதிரையிலேயே பின்புறமாகத் தாவி ஏறி உட்கார்ந்துகொண்டு புறப்பட்டு விட்டான்.

"மகா சேனாதிபதி எங்களுடைய அறக்கோட்டத்தையும், எங்களையும் இப்படி ஒரேயடியாக அவமதித்து விட்டுப் போவது கொஞ்சங்கூட நன்றாயில்லை. இன்னும் ஓரிரண்டு நாழிகைகள் தங்கி உணவருந்தி எங்கள் உபசாரத்தை ஏற்றுக் கொண்டு போகலாமே!" என்று மூன் சிறை அறக்கோட்டத்திலுள்ள அண்டராதித்த வைணவனும், அவன் மனைவி கோதையும் மரியாதையாக வேண்டிக் கொண்டதைக்கூட அப்போது அவன் பொருட்படுத்தவில்லை.

பதில் சொல்லாமலே அவன் குதிரையை விட்டுக் கொண்டு செல்வதைப்



பாண்டிமாதேவி

நா. பார்த்தசாரதி

பார்த்து. "தளபதிக்கு நம்மேல் ஏதோ கோபம் போலிருக்கிறது" என்று எண்ணிக் கொண்டு மேலும் வற்புறுத்திச் சொல்லாமல் பயந்து போய் நின்று விட்டனர் வைணவனும் அவன் மனைவி கோதையும்.

"தூதனே! நீ கொண்டு வந்திருக்கும் செய்தி மட்டும் மெய்யாக இருக்குமானால் இப்போதுள்ள சூழ்நிலையில் தம்மைப் போல் பரிதாபப்படத் தக்கவர்கள் வேறு

யாருமில்லை. நல்ல சமயத்தில் நீ வந்திருக்கிறாய். இப்போது அரண்மனையில் மகா மண்டலேசுவரர் உள்படக் கூற்றத் தலைவர்கள் எல்லோரும் இருப்பார்கள். நாம் செய்ய வேண்டிய ஏற்பாடுகளைப் பற்றி எல்லோரிடமும் கலந்து பேசி விடலாம். குதிரையை மட்டும் இன்னும் சிறிது வேகமாகவே செலுத்திக் கொண்டு போ'' என்று தூதுவனைத் துரிதப்படுத்தினான் தளபதி. தூதனும் தன்னால் இயன்ற அளவு குதிரையை வேகமாகத்தான் செலுத்திக் கொண்டு போனான்.

•

•

பட்டி மண்டபத்தில் நடந்த கூற்றத் தலைவர்களின் கூட்டத்தில் நம்பிக்கையும் ஒளியும் நிறைந்த எதிர்காலத் தீர்மானங்களை உருவாக்கியிருந்தார்கள்.

அன்று கூற்றத் தலைவர்களுக்கும் மகா மண்டலேசுவரருக்கும் முன்னால் தன் நிலைமையைப் பற்றி விவரிக்கும்போது மகாராணி வானவன்மாதேவிக்கு அழுகையே வந்து விடும்போலிருந்தது.

''மகா மன்னர் இறந்த பிறகு மகா மண்டலேசுவரரும், நீங்களும் எனக்குப் பெரும் பதவியையும் மரியாதையையும் அளித்திருக்கிறீர்கள். ஆனால் இந்த அரச போக ஆடம்பரங்களை நீண்ட நாட்கள் அனுபவிக்கும் பொறுமை எனக்கு இல்லை. என் அருமைப் புதல்வன் எங்கே இருக்கிறானென்றே நான் அறிய முடியவில்லை. என்னைச் சுற்றிலும் துன்பங்களையும், சூழ்ச்சிகளையும் காண்கிறேன். எனது பிறந்தகமாகிய சேர நாட்டுக்காவது சென்று அமைதியாக வாழ்வேன். அதையும் செய்ய விடாமல் உங்கள் அன்பு என்னைக் கட்டுப்படுத்தி வைத்திருக்கிறது. மகா மன்னரையும், புதல்வனையும் விட்டுவிட்டு நான் மட்டும் இப்படி யாருக்காக இங்கு வாழவேண்டும்? இப்படி நான் வாழ்வதுகூடச் சிலருக்குப் பிடிக்கவில்லை போலிருக்கிறது. என்னையே அழித்து விடுவதற்குக் கூடச் சூழ்ச்சிகள் நடக்கின்றன.''

இப்படி மகாராணி வானவன்மாதேவியார் பேசிக்கொண்டு வரும்போதே; ''மகாராணியார் அப்படி அஞ்சக் கூடாது. தென்பாண்டி வீரர்களின் நெஞ்சில் நம்பிக்கையும் கைகளில் வலிமையும், வாளில் ஒளியும், இந்த விநாடி வரை குன்றி விடவில்லை. மகாராணியாரை அழிக்க எந்தத் தீய சக்தியாலும் முடியாது'' என்று ஆவேசம் பொங்கும் குரலில் உறுதியாகக் கூறினார் இடையாற்று மங்கலம் நம்பி. அதை ஆமோதிப்பதுபோல் அங்கிருந்த மற்றவர்களும் சிரக்கம்பம் செய்தனர்.

''அது சரிதான்! குமாரபாண்டியர் எங்கேயிருக்கிறார் என்றறிவதற்கு நாமாகவே ஏதேனும் முயற்சிகள் செய்ய வேண்டாமா? இப்படி வாளாவிருந்தால் அவரைப் பற்றி என்ன தெரிந்துகொள்ள




முடியும்?'' என்று மகா மண்டலேசுவரர் பக்கமாகத் திரும்பி ஒரு கேள்வியைக் கேட்டார் கழற்கால் மாறனார்.

மகா மண்டலேசுவரர் அந்தக் கேள்விக்குப் பதில் சொல்வதற்கு முன்பே, மற்றவர்களும் அவரிடம் சரமாரியாகக் கேள்விகளைத் தொடுக்க ஆரம்பித்தனர்.

''இளைய சக்கரவர்த்தியை உடனே அழைத்துவர ஏற்பாடு செய்ய வேண்டாமா?'' என்று கேட்டார் ஒருவர்.

''மகாராணியாரின் கவலைகள் குறைந்து நிம்மதியும், அமைதியும் உண்டாக வேண்டுமானால் குமாரபாண்டியர் எங்கிருந்தாலும் தேடிக் கொண்டு வந்து முடி சூட்டி விடுவதே முறை'' என்றார் மற்றொருவர்.



''எல்லோரும் சற்று அமைதியாக இருங்கள். என்னுடைய கருத்தை விரிவாகச் சொல்லி விடுகிறேன். இது வரை இந்த எண்ணங்கள் எல்லாம் எனக்குத் தோன்றாமல் போய் விடவில்லை. அல்லது தோன்றியும் எவற்றையும் செயல்படுத்தக் கூடாது என்பதற்காக நான் பேசாமல் இருக்கவில்லை. ஒவ்வொரு தயக்கத்துக்கும் ஒரு முக்கியமான காரணம் இருக்கும். இளவரசர் எங்கேயிருக்கிறார் என்று தேடுவதோ, தேடிக் கண்டுபிடிப்பதோ எனக்குக் கடினமான காரியமில்லை. நினைத்தால் இப்போதே கொண்டுவந்து நிறுத்திவிட முடியும் என்றால். ஆனால் நான் சூழ்நிலையைப் பற்றிச் சிந்திக்கிறேன். தென்பாண்டி நாட்டு அரசியலில் ஒழுங்கையும் அமைதி.யையும் ஏற்படுத்திவிட்டால் நமக்கு இருக்கும் புறப்பகைகள் நீங்கும். அதன்பின் குமார பாண்டியருக்கு முடி சூட்டலாமென்பது என் எண்ணம்'' என்று அவர் கூறிய சமாதானத்தைக் கேட்டபோது மற்றவர்களுக்கு அவரை எதிர்த்து என்ன சொல்வதென்றே தெரியவில்லை. முகத்தில் ஈயாடாமல் உட்கார்ந்திருந்தார்கள்.

''அலை ஓய்ந்து நீராட முடியாது. பகைவர்களை எண்ணிக் கொண்டே எவ்வளவு நாட்களுக்குப் பேசாமல் இருக்க முடியும்? தவிர முடிசூட்டுவதற்கும், இளவரசரைத் தேடிக் கண்டுபிடித்து இங்கே அழைத்து வருவதற்கும் என்ன சம்பந்தம்? முடி சூட்டுவதைப் பின்னால் வைத்துக் கொண்டாலும், இளவரசர் இங்கு வந்து இருக்கலாமே. அவ்வாறு இருப்பது மகாராணியாருக்கும் ஆறுதல் அளிக்கும் என்று எனக்குத் தோன்றுகிறது'' என்று துணிந்து இடையாற்று மங்கலம் நம்பியை நோக்கி நேருக்கு நேர் கூறினார், அதுவரை ஒன்றும் பேசாமல் அமைதியாக வீற்றிருந்த அதங்கோட்டாசிரியர்.

"வடதிசை மன்னர்களின் படையெடுப்பு இந்தச் சமயத்தில் நேரலாமென்று மகா மண்டலேசுவரர் எதிர்பார்க்கிறார் போலிருக்கிறது. குமார பாண்டியர் இங்கு வந்திருந்தால் படையெடுப்பைச் சமாளிக்க நமக்கு நல்ல உதவி கிடைக்கும். குமாரபாண்டியரின் தாய்வழி மாமன்மார்களும், மகாராணியாரின் பிறந்த வீட்டுச் சோதரரும் ஆகிய சேரர் படை உதவியை நாம் பெறலாம். சேர வேந்தரிடம் அவர் படை உதவி மறுக்க இயலாதபடி அவருடைய மருகராகிய குமாரபாண்டியரையே தூதனுப்பலாம். இதையெல்லாம் மகாமண்டலேசுவரர் நன்றாகச் சிந்தித்திருந்தால் இளவரசரைத் தேடி உடனே இங்கு அழைத்து வர ஏற்பாடு செய்திருக்கலாமே!" என்று பவழக்கனி வாயரும் அதங்கோட்டாசிரியரோடு சேர்ந்து கொண்டார்.

சிறிது நேரம் கழித்துப் பேசுவதற்கு அஞ்சி உட்கார்ந்திருந்த கூற்றத் தலைவர்களும் ஒவ்வொருவராக அதே கருத்தை ஆதரித்துப் பேசத் தலைப்பட்டனர். மகாராணியாரின் விருப்பமும் அதுவாகத்தான் இருக்கும் என்பதை இடையாற்று மங்கலம் நம்பி குறிப்பாகப் புரிந்து கொண்டார். பல்லாண்டுகளாக நிமிர்ந்து நின்று பிடிவாதத்தாலும், அறிவுத் திறனாலும், தம் எண்ணமே எல்லோருடைய எண்ணமாகவும், தம் சொல்லே எல்லோருடைய சொல்லாகவும், தம் செயலே எல்லோருடைய செயலாகவும், — வெற்றி பெற்றுவந்த அவருடைய அரசியல் வாழ்வில் முதல் முதலாக ஒரு வளைவு ஏற்பட்டது. மற்றவர்களை மாற்றி அவர்களைத் தம் வழிக்குக் கட்டுப்படுத்தும் சாமர்த்தியமான கலையில் தொடர்ந்து வெற்றி பெற்று வந்த அவர் முதன் முதலாக மற்றவர்களுக்காக மாறிக் கட்டுப்படும் நிலையை அடைந்தார். எதற்கும் எவராலும் அசைந்து விட முடியாமல் கல்லாய் முற்றிப் போயிருந்த அந்த உள்ளத்தில் சற்றே தளர்ச்சி உண்டாயிற்று. ஆனால் அந்தத் தளர்ச்சி வெளிப்பட்டு விடாமல் மிகத் தந்திரமாக மறைத்துக் கொண்டார் அவர். ஒரு நளினமான சிரிப்பினால் மட்டுமே அதை அவரால் மறைக்க முடிந்தது.

"நல்லது! இன்றைய தினம் உங்கள் எல்லோருடைய கருத்தையும் குறிப்பாகவும், வெளிப்படையாகவும் தெளிவாக மறைக்காமல் என்னிடம் கூறிவிட்டீர்கள். நான் ஒப்புக் கொள்கிறேன். இன்னும் நான்கு நாட்களுக்குள் குமாரபாண்டியரை இங்கே கொண்டு வந்து சேர்க்கும் பொறுப்பையும் நானே ஏற்றுக் கொள்கிறேன்."

மகாமண்டலேசுவரருடைய இந்தப் பேச்சில் அதங்கோட்டாசிரியர் மறுபடியும் குறுக்கிட்டார்.

"மகாமண்டலேசுவரரை யாரும் வற்புறுத்தவோ, அவசரப்படுத்தவோ விரும்பவில்லை. நான்கு நாட்களில் தேடிக் கொண்டு வர வேண்டுமென்று அவசரப்பட்டுத் துன்பமுற வேண்டாம். வேண்டிய நாட்களை எடுத்துக் கொண்டு பதறாமல் தேடிப் பார்க்கலாமே!" — என்றார் ஆசிரியர்பிரான்.

"தேவையில்லை! நான்கு நாட்களே அதிகம். விரும்பினால் நான்கு நாழிகைக்குள் இளவரசரை இங்கே அழைத்துவர முடியும்."—என்று முகத்தில் அடித்தாற் போல அதங்கோட்டாசிரியருக்குப் பதில் சொல்லி விட்டார் இடையாற்று மங்கலம் நம்பி.

"முடிந்தால் செய்யுங்கள்!" என்று படித்தவருக்கே உரிய அடக்கத்தோடு பேச்சை முடித்து விட்டார் ஆசிரியர். 'ஏனடா, இந்த மனிதரிடம் பேச்சுக் கொடுத்தோம்' என்று ஆகிவிட்டது அவருக்கு. தம் மேல் மகாமண்டலேசுவரருக்கு உள்ளூறச் சிறிது கோபம் ஏற்பட்டிருக்கிறது என்பதை அவருடைய பேச்சிலிருந்தே அதங்கோட்டாசிரியர் புரிந்து கொண்டார்.

இளவரசர் அரண்மனைக்கு அழைத்துக் கொண்டு வரப்பட்டதும் மற்றோர் கூற்றத் தலைவர் கூட்டம் நடத்துவதென்றும், அதில் மற்ற விஷயங்களைப் பேசி முடிவு செய்து கொள்ளுவதென்றும் தீர்மானித்த பின் அன்றையக் கூட்டம் அதோடு முடிந்து விட்டது.

முதலில் மந்திராலோசனை மண்டபத்தில் கூட்டம் நடந்து கொண்டிருந்த போது நாராயணன் சேந்தன் வந்ததும், மகாமண்டலேசுவரர் அவனை இரகசியமாக நிலவறைக்கு அனுப்பியதும் நேயர்களுக்கு நினைவிருக்கலாம். கூட்டம் முடிந்ததும் எல்லோரும் அவரவர்கள் தங்கியிருந்த விருந்தினர் விடுதிகளுக்குச் சென்று விட்டனர். மகாமண்டலேசுவரர் மட்டும் நிலவறைக்கு அனுப்பியிருந்த சேந்தன் திரும்பி வருவானென்று எதிர்பார்த்துச் சிறிது நேரம் அங்கே தாமதித்தார். இடையே மற்றொரு காரியத்தையும் அங்கிருந்தவாறே முடித்துக் கொண்டார். அவர் அங்கே சேந்தனுக்காகத் தாமதித்துக் கொண்டு நின்ற போது அந்தப் பட்டி மண்டபத்தின் மேலே இருந்த அந்தப்புரத்து மாடத்தில் புவனமோகினி என்ற வண்ண மகளின் உருவம் தெரிந்தது. புவன

மோகினி அந்த அரண்மனையில் வண்ண மகளாகப் பணி புரிபவள். வண்ணமகளின் வேலை அந்தப்புரத்திலும், கன்னி மாடத்திலும் உள்ள அரச குடும்பத்துப் பெண்களுக்கு அலங்காரம் செய்வதாகும். மற்றவர்களுக்கெல்லாம் அவள் அலங்காரம் செய்து விட்டால்தான் அழகு பிறக்கும். ஆனால் அவளுக்கோ யாரும் அலங்காரம் செய்யாமலே அபூர்வமான அழகும் இளமையும் வாய்த்திருந்தன. உண்மையில் புவனமோகினி என்ற பெயருக்கு அவள் பொருத்தமானவள்தான். பின்னிவிட்ட சடை அசையப் பிறைமதி போல் மல்லிகைச் செண்டு சூடி நடந்தாளானால் பார்க்கிறவர்களின் உள்ளமெல்லாம் பறி போக வேண்டியதுதான்.

கீழே நின்று கொண்டிருந்த மகா மண்டலேசுவரர் புவனமோகினியைக் கைதட்டிக் கூப்பிட்டார். மதிப்புக்குரிய மகா மண்டலேசுவரருடைய அழைப்புக்குப் பணிந்து கீழே இறங்கி ஓடோடி வந்தாள் புவனமோகினி.

"பெண்ணே! எனக்கு உன்னால் ஒரு காரியம் ஆகவேண்டும். இதோ இந்த ஆசனத்தில் இந்தப் பட்டுத் துணியைப் போட்டு விட்டுப் போகிறேன். இன்னும் சிறிது நேரத்துக்குள் இதை எடுத்துச் செல்ல வரும் மனிதனை நீ மேலேயிருந்து கவனித்து வைத்துக் கொள். அப்புறம் வந்து என்னிடம் சொல்" என்று கூறி விட்டுத் தம் இடுப்பிலிருந்து ஒரு சிறு பட்டுத் துணியை எடுத்துத் தாம் உட்கார்ந்திருந்த ஆசனத்தில் போட்டு விட்டுச் சென்றார் மகாமண்டலேசுவரர். புவனமோகினி அவர் கூறியபடியே செய்ய ஒப்புக்கொண்டு மாடத்தில் போய் நின்று கீழே கவனித்தாள். இதே சமயத்தில் விலாசினி, பகவதி முதலியவர்கள் மந்திராலோசனை மண்டபத்துப் பக்கமாகச் சதுரங்கம் விளையாடச் சென்று விட்டதனால் புவனமோகினி அந்தப்புரத்தில் தனியாகவே இருந்தாள். அதனால் அவர் தன்னிடம் ஒப்புவித்துச் சென்றிருந்த உளவறியும் வேலையை அவள் சரியாகச் செய்ய முடிந்தது. கூடியவரையில் தான் அங்கே நின்று கண்காணிப்பது, கண்காணிக்கப்படுகிறவருக்குத் தெரியாமல் இருக்க வேண்டுமென்று அவள் நினைத்திருந்தாள். ஆனால் அவள் குனிந்து பார்த்தபோது அவளுடைய தலையில் அணிந்திருந்த சூடை மல்லிகைப் பூக்கள் அவளைக் காட்டிக் கொடுத்து விட்டன: அந்தப் பாழாய்ப் போன பூக்கள் கீழே உதிர்ந்து அவள் எண்ணத்தில் கலக்கத்தை உண்டாக்காமல் இருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்?

புவனமோகினி உடனே ஓடிப் போய் இடையாற்று மங்கலம் நம்பியிடம் செய்தியைத் தெரிவித்து விட்டு வந்திருந்தாலும் அவள் மனத்தில் பயம் ஏற்பட்டது. ஆபத்துதவிகள் தலைவனின் நெருப்புப் போன்ற விழிகளும், குரூரமான முகமும் அடிக்கடி தோன்றி அவளைப் பயமுறுத்தின. "மகரநெடுங்குழைக்காதன் தன்னைப் பார்த்திருப்பானோ?" என்ற பயத்தினால் அன்றிரவு தூக்கமே அவளை அணுகுவதற்கு மறுத்தது. பழி பாவத்துக்கு அஞ்சாதவன், ஈரமற்றவன், கல்மனமுடையவன் என்று ஆபத்துதவிகள் தலைவனைப் பற்றி அவள் கேள்விப்பட்டிருந்த செய்திகள்



ஒவ்வொன்றாக நினைவுக்கு வந்து அவளை மிரட்டிக் கொண்டிருந்தன.

• • •

'புவனமோகினி' — ஆபத்துதவிகள் தலைவனை எண்ணி நடுங்கி உறக்கமின்றித் தவித்துக் கொண்டிருந்த அதே நேரத்தில் நாராயணன் சேந்தன் தளபதி வல்லாளதேவனை எண்ணி உறக்கமின்றித் தவித்துக் கொண்டிருந்தான்.

"ஐயோ! நான் தளபதியிடம் சிக்கி அடிபடவேண்டுமென்றுதான் என் தலையில் எழுதியிருக்கிறது போலும். இவ்வளவு தூரம் ஏமாற்றித் திருநந்திக் கரை வரையில் இழுத்தடித்தும் எவன் குதிரையிலோ இரவல் இடம் பிடித்து அரண்மனைக்கு வந்து விட்டானே. அவனோடு போகாமல் யாரோ ஒரு தூதனையும் அல்லவா அழைத்துக் கொண்டு வந்திருக்கிறான்? என்ன ஆகப் போகிறதோ?" என்று கவலை கொண்டு தூக்கம் இழந்தான் சேந்தன்.

“அந்தப்புரத்து மேல்மாடத்திலிருந்து தன் மேல் உதிர்ந்த பூக்களை வைத்துக் கொண்டு தன்னைக் கண்காணித்த பெண் புலி யாரென்று தூக்கமுமில்லாமல் மண்டையைக் குழப்பிக் கொண்டிருந்தான் குழைக்காதன். “முதல் முதலாகக் கூற்றத் தலைவர் கூட்டத்தில் என் பேச்சு எடுபடாமல் தோற்றுப் போய்விட்டதே!” என்று மனம் புழுங்கிக்கொண்டிருந்தார் மகாமண்டலேசுவரர். அன்று நள்ளிரவு வரையில் இவர்கள் நால்வரும் உறங்கவே இல்லை.

அத்தியாயம் 31

கொள்ளையோ, கொள்ளை!

இராசசிம்மன் அப்படி நடந்து கொண்டது குழல்மொழிக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. “அக்கரையிலிருந்து படகில் வருபவர் யாராக இருந்தால்தான் என்ன? எவ்வளவு அவசரமாக இருந்தால்தான் என்ன? அதற்காக ஒருபெண்ணிடம் தனிமையில் மனம் விட்டுப் பேசிக் கொண்டிருந்தவர் இப்படியா முகத்தை முறித்துக் கொண்டு போவது போல் திடீரென்று போவார்?” என்று எண்ணி நொந்து கொண்டாள். வந்தவரோடு விரைவில் பேசி முடித்து அனுப்பி விட்டுத் திரும்பி வந்து விடுவார் என்று நிலா முற்றத்துத் திறந்த வெளியிலேயே இராசசிம்மனுக்காகக் காத்துக்கொண்டிருந்தாள். நீண்ட நேரமாகியும் அவன் திரும்பி வராமற் போகவே அவளுக்கு ஏமாற்றமாக இருந்தது. கீழே இறங்கி வந்து விட்டாள்.

அவள் கீழே இறங்கி வந்த சமயத்தில் படகோட்டி அம்பலவன் வேளான் இன்னும் யாரோ இரண்டு மூன்று பேர்களைப் படகிலிருந்து இறக்கி வசந்த மண்டபத்துப் பக்கமாக அழைத்துப் போய்க் கொண்டிருந்தான். முதலில் தனியே படகில் வந்த ஆளை அழைத்துக்கொண்டு இராசசிம்மன் முன்பே வசந்த மண்டபத்தில் தான் தங்கியிருந்த இடத்துக்குப் போயிருக்க வேண்டுமென்று குழல்மொழி அனுமானித்து உணர்ந்து கொண்டாள்.

“அவர்களைக் கொண்டுபோய் விட்டு விட்டு வேளான் திரும்பி வருவானல்லவா? ‘வந்திருப்பவர்கள் யார்? என்ன காரியத்துக்காக வந்திருக்கிறார்கள்?’ என்று அவனிடம் கேட்கலாம்” என்று எண்ணி வேளான் திரும்பி வருவதை எதிர்பார்த்து நின்றாள்.

சிறிதுநேரத்தில் வசந்த மண்டபத்திலிருந்து மாளிகைக்கு வரும் ஒற்றையடிப் பாதையில் வேளான் வருவது தெரிந்தது. அவன், தான் நின்றுகொண்டிருக்கிற இடத்துக்கு வந்து சேர்கிற வரை ஆவலை அடக்கிக் கொள்ளும் பொறுமை கூட அவளுக்கு இல்லை. மான் துள்ளி ஓடுவதுபோல வேகமாக ஓடிச் சென்று, “வேளான்! வந்திருப்பவர்கள் யார்? எதற்காக இவ்வளவு அவசரமாய் அடிகளைச் சந்திக்க வந்திருக்கிறார்கள்?” என்று அவனை நடுவழியிலேயே மறித்துக் கொண்டு கேட்டாள். வேளான் சிறிது தயங்கி நின்று விட்டுப் பின்பு கூறலானான்: “அம்மா! அவர்கள் இன்னாரென்பதைப் பற்றி எனக்கு ஒன்றுமே தெரியாது. அவர்கள் அக்கரையிலிருந்து வசந்த மண்டபம் வரை என்னுடன் வந்தார்கள் என்று பெயரே ஒழிய, என்னிடம் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. ‘இந்தத் தீவில் மகாமண்டலேசுவரரின் விருந்தினராக ஒரு துறவி வசந்த மண்டபத்தில் தங்கியிருக்கிறாரே; அவரை நாங்கள் சந்திக்க வேண்டும்’ என்று சுருக்கமாக என்னிடம் கேட்டார்கள். ஆனால் வந்திருப்பவர்களுடைய பேச்சையும், நடையுடை பாவனைகளையும் கூர்ந்து கவனித்தால் நம்முடைய முத்தமிழ் நாட்டின் எந்தப் பகுதியையும் சேர்ந்தவர்களாகத் தெரியவே இல்லை. துறவிக்கு அவர்கள் மிகவும் வேண்டியவர்கள் போலிருக்கிறது. எல்லோருடனும் வசந்த மண்டபத்தில் உட்கார்ந்து ஏதோ இரகசியமாகப் பேசிக் கொண்டிருக்கிறார். வேறு யாரையும் தப்பித் தவறிக்கூட அந்தப் பக்கம் விட்டுவிடக் கூடாதென்று எனக்குக் கடுமையான உத்தரவு போட்டிருக்கிறார்.

வேளானுடைய பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த குழல்மொழி, “என்னைக் கூடவா விடக்கூடாதென்று உத்தரவு?” என்று சிரித்துக் கொண்டே வேடிக்கையாகக் கேட்டாள். “ஆம்! உங்களையும் தான் விடக்கூடாதென்றிருக்கிறார்” என்று வேளான் பதில் சொல்லியதும், அவளுக்கு உச்சந்தலையில் ஓங்கி அடித்த மாதிரி இருந்தது. ஏதோ விளையாட்டுத்தனமாகக் கேட்டாளே யன்றி அந்தப் பதிலை எதிர்பார்த்துக் கேட்கவில்லை அவள். அந்தப் பதிலை அவனிடமிருந்து கேட்டதும் அவள் கண்களில் சினம்

கொண்ட சாயல் ஒளிர்ந்தது. புருவங்கள் நெளிந்து வளைந்தன. "பரவாயில்லையே! அடிகளுக்கு வந்து ஒருநாள் கழிவதற்குள் இவ்வளவு அதிகாரம் செய்யும் உரிமை வந்துவிட்டதா?" என்று வெடுக்கென்று ஆத்திரத்தோடு சொல்லிவிட்டுத் திரும்பிச் சென்றாள் அவள். அவ்வளவு கோபத்திலும் இராசசிம்மன் தான் அடிகளாக நடிக்கிறான் என்ற உண்மையைப் படகோட்டியிடம் கூறத் துணிவு வரவில்லை அவளுக்கு. 'நான்கூட வரக்கூடாதாமே? அப்படி என்னதான் இரகசியம் பேசுகிறார்களோ? வரட்டும்; சொல்கிறேன்' என்று இராசசிம்மன் மேல் ஊடல், பொய்க்கோபம் கொண்டு அரண்மனைக்குச் சென்று விட்டாள் குழல்மொழி. இராசசிம்மன் வசந்த மண்டபத்துக்கு வரக்கூடாதென்று சொல்லிவிட்டதனால் இடையாற்றுமங்கலம் அரண்மனையில் போவதற்கு இடமோ, பேசுவதற்குத் தோழிகளோ, இல்லாமலா போய் விட்டார்கள்?

அதன்பின் அன்று அவர் வசந்த மண்டபத்துப் பக்கம் வரவே இல்லை. துறவியும் அவரைச் சந்திக்க வந்திருந்தவர்களும் கூட வசந்த மண்டபத்தை விட்டு வெளியேறவில்லை. படகோட்டி அம்பலவன் வேளான் யாரையும் உள்ளே விட்டு விடாமல் பாதுகாப்பாக வசந்த மண்டபத்துப் பாதை தொடங்கும் இடத்தில் காவலுக்கு உட்கார்ந்து கொண்டான்.

இருட்டியதும் வழக்கமாகத் துறவியை உணவுக்கு அழைத்துக் கொண்டுபோக வருவாள் குழல்மொழி. அன்று அதற்காகவும் அவள் வரவில்லை. "நீ போய் அவர்களைச் சாப்பிட அழைத்துக் கொண்டு வா!" என்று ஒரு தோழியை வசந்த மண்டபத்துக்கு அனுப்பினாள். அந்தத் தோழி அடிகளைத் தேடிக் கொண்டு வசந்த மண்டபத்துக்குச் செல்லும் போது இருட்டி நான்கைந்து நாழிகைகள் ஆகியிருக்கும். துறவியும் அவரைத்தேடிப் புதிதாகவந்திருப்பவர்களும் கூடியிருப்பதால் தீபாலங்காரங்களினால் ஒளி மயமாகவும், பலருடைய பேச்சுக் குரல்களால் கலகலப்பாகவும் இருக்குமென்று நினைத்துக் கொண்டு வசந்த மண்டபத்துக்கு வந்த தோழி அங்கிருந்த நிலைமையைக் கண்டு திகைத்துப் போனாள். வசந்த மண்டபம் இருண்டு கிடந்தது. அங்கே எவருடைய பேச்சுக் குரலும் கேட்கவில்லை. இருளும், தனிமையும் ஆட்சி புரிந்த அந்த இடத்தில் நிற்பதற்கே பயமாக இருந்தது தோழிக்கு. அவள் வசந்த மண்டபத்தின் எல்லாப் பகுதிகளையும் நன்றாகச் சுற்றிப் பார்க்காமல் முகப்பிலேயே பயந்து கொண்டு திரும்பி விட்டாள். வசந்த மண்டபத்தின் பின்புறமிருந்த தோட்டத்துக்குள் சென்று பார்த்திருந்தால் ஒரு சிறிய தீப்பந்தத்தின் வெளிச்சத்தில் துறவியும், அவரைத் தேடி வந்தவர்களும், ஏதோ சதிக் கூட்டம் நடத்துகிறவர்களைப் போல் அந்தரங்கமாக உட்கார்ந்து பேசிக் கொண்டிருப்பதை அவள் பார்த்திருக்கலாம். ஆனால் அந்தத் தோழிக்குத்தான் அவ்வளவுக்குப் பொறுமையில்லாமல் போய் விட்டதே!

"அம்மா! துறவியையும் அவரோடு வந்திருந்தவர்களையும் வசந்த மண்டபத்தில் காணவில்லை" என்று குழல்மொழியிடம்திரும்பி வந்து சொல்லிவிட்டாள் அந்தத் தோழி.

"வசந்த மண்டபத்துக்குப் போகிற பாதையின் தொடக்கத்தில் அம்பலவன்



வேளான் காவலுக்கு உட்கார்ந்திருப்பானே? அவனைக் கூடவா காணவில்லை?"

"ஆம்! அவனையும் காணவில்லை!"

"சரிதான். படகில் அக்கரைக்குப் போயிருப்பார்கள். அடிகளுக்குத் திடீரென்று சுசீந்திரத்துக்குப்* போய்த் தாணுமாலய விண்ணகரத்தில் தரிசனம் செய்ய வேண்டுமென்று ஆசை உண்டாகியிருக்கும். நமக்கென்ன வந்தது? எக்கேடாவது கெட்டுப் போகட்டும். நாம் தூங்கலாம்" என்று சுவாரஸ்யமில்லாமல் பேசினாள் குழல்மொழி.

அதன் பின் அடிகள் உணவு கொள்ள வரவில்லையே என்று அங்கு யாரும் அவருக்காகக் காத்துக் கொண்டிருக்கவில்லை. இரவு பத்துப் பதினொரு நாழிகைக்கெல்லாம் இடையாற்று மங்கலம் மாளிகையில் பூரண அமைதி நிலவியது.

இரவின் நாழிகைகள் ஒவ்வொன்றாக வளர்ந்து கொண்டிருந்தன. நடுச் சாமத்தை எட்டிப் பிடித்து விட்ட போது, வானமும், நட்சத்திரங்களும் சோகை பிடித்த மாதிரி வெளுத்து ஒளி மங்கிக் கொண்டு வந்தன. மாளிகை யில் அங்கங்கே அவசியமான இடங்களில் காவல் வைக்கப்பட்டிருந்த வீரர்க ளெல்லாம் கூடச் சோர்ந்து கண் மயங் கும் நேரம் அது.

அந்த நேரத்தில் வசந்த மண்டபத் தின் பின்புறத்துத் தோட்டத்திலிருந்து அடிகளும், மற்ற மூவரும் புறப்பட்டனர். மாளிகையின் பிரதான வாசலில் கொண்டு போய் விடும் ஒற்றையடிப் பாதையில் வந்து படகோட்டியின் குடிசையருகே தயங்கி நின்றனர். அன்று



குளிர் அதிகமாக இருந்ததனால் பட கோட்டி அம்பலவன் வேளான் குடிசைக் குள்ளேயே படுத்திருந்தான்.

வசந்த மண்டபத்திலிருந்து வந்து நின்றவர்களில் ஒருவன் படகோட்டியின் குடிசைக் கதவருகே வந்தான். ஓசைப் படாமல் கதவை வெளிப்பக்கமாக இழுத் துத் தாழிட்டான்.

"அடே! படகை அவிழ்த்து வைத் துக் கொண்டு புறப்படுவதற்குத் தயா ராக நீ துறையிலேயே இரு. நாங்கள் விரைவில் காரியத்தை முடித்துக் கொண்டு வந்து விடுவோம்" என்று மற்றவர்கள் அவனைத் துறையில் இருக் கச் செய்து விட்டு மாளிகையை நோக்கி விரைந்தனர். குரல்தான் கேட்டதே ஒழிய இருளில் அவர்கள் முகங்கள் சரி யாகத் தெரியவில்லை. அதன் பின் அன் றிரவு நடுச் சாமத்துக்கு மேல் இடை யாற்று மங்கலம் மாளிகையில் என்ன நடந்ததென்று எவருக்கும் தெரியாது.


* * *

பொழுது விடிந்தபோது அலறிப் புடைத்துக் கொண்டு குழல்மொழியின் கன்னிமாடத்து வாசலில் வந்து கூக்குர லிட்டனர் பவனக் காவல் வீரர்கள். அரண்மனை முழுதும் கூச்சலும் ஓலமு மாக ஒரே குழப்பமாக இருந்தது. அந்தக் குழப்பங்களாலும், கூப்பாடுக ளாலும் தூக்கம் கலைந்த குழல்மொழி எழுந்திருந்ததுடன் அந்த பவனக் காவல் வீரர்களின் முகத்தில்தான் விழித்தாள். அவர்கள் ஒன்றும் விளக்கிச் சொல்லத் தோன்றாமல் 'ஓ'வென்று வீறிட்டு அலறி அழத் தொடங்கினர்.

"ஏன் அழுகிறீர்கள்? விடிந்ததும் விடியாததுமாக இப்போது என்ன நடந்து விட்டது? விவரத்தைச் சொல் லுங்கள். இதென்ன? மாளிகை முழு வதும் கூச்சலும் குழப்பமுமாக இருக் கிறதே!" என்று பதறிப் போய் அதிர்ச்சி யடைந்து கேட்டாள் குழல்மொழி. அதே சமயம் மாளிகையின் எதிர்ப்புறம் பறளியாற்றுப் படகுத் துறையில் 'தடால்' 'தடால்' என்று ஏதோ இடி படும் ஓசை கேட்டது. நாலைந்து வீரர் கள் என்ன வென்று பார்ப்பதற்காக அங்கே ஓடினார்கள். போய்ப் பார்த்த போது அம்பலவன் வேளான் தன் குடி சைக் குள்ளிருந்து வெளிப்புறமாகத் தாழிட்டிருந்த கதவைப் போட்டு உடைத்துக் கொண்டிருந்தான். இந்த ஓசையைக் கேட்டு அங்கே போன வீரர்களில் ஒருவன் கதவைத் திறந்து விட்டான். இல்லையானால் கதவு பிழைத் திருக்காது. வேளான் வெளியே வந்து பார்த்தபோது துறையில் கட்டியிருந்த படகைக் காணவில்லை. "ஐயோ! பட கைக் காணவில்லையே?" என்று கூச்ச லிட்டான் அவன்.

"போ, ஐயா! உன் ஓட்டைப் படகு போனதனால் ஒன்றும் குடிமுழுகி விடாது. கொள்ளை போகக்கூடாத மாபெரும் நிதியம் நேற்றிரவு இந்த மாளிகையிலிருந்து கொள்ளை போய் விட்டது. மகாமண்டலேசுவரர் கண் ணுக்குக் கண்ணாக வைத்துப் பாது காத்து வந்த பாண்டிய மரபின் சுந்தர முடியும், வீர வாளும், பொற் சிம்மா சனமும் காணாமல் போய் விட்டனவே!" என்று வேளானின் வாய்க் கூச்சலை அடக் கினான் ஒருவன். (தொடரும்)







பட்டு ரவிக்கை

"பூசான்"

அன்று இரவும் சிங்காரம் வெறுங் கையுடன்தான் உள்ளே நுழைந்தான். அப்படி அவனைக் கண்டதும் பொன்னிக்குக் கோபம் வரத்தான் செய்தது.

'உம்...தீவுளிக்கு இன்னும் ஒரு நாள் தானிருக்கு இடையிலே; இன்னும் கட்டிக் கொண்ட பெண்சாதியின் ரவிக்கையைக் கூடத் தைக்க முடியவில்லே !''

"பொன்னி! நாளேக்கு இந்நேரத்துக்குப் பாரேன்; ரவிக்கையைத் தைத்துக் கொண்டு வராவிட்டால் கேளு !...''

"நான் ஏன் இனிமேல் உங்களைக் கேட்கிறேன்? நீங்கள் தைச்சுக் கொடுத்தால் கொடுங்க; இல்லா விட்டால் போங்க !''

"உனக்குக் கோபம்தான் மூக்குக்கு மேலே வருது ! கடையிலே வந்து பார்த்தால் தெரியும் ! நானே ராவுக்குள் எவ்வளவு துணி தைத்து ஆக வேணும்னு தெரியும் !''

"ஊராரு துணியையெல்லாம் முதலில் தைச்சுக் கொடுங்க ! எனக்கு என்ன அவசரம் வந்திருக்கு ?''—மிகவும் நிஷ்டூரமாகச் சொன்னுள் பொன்னி.

"பின்னே, அவங்க இடத்திலே நாம் கூலி வாங்கவில்லே ?''

"காசுதானே லட்சியம் ! அதுக்கு என்னை ஏன் கட்டிக் கொள்ள வேணுமாம் ?'' பொன்னிக்குக் கோபமும் ஆத்திரமும் பற்றிக் கொண்டு வந்ததில் ஒரு குறை அழுது விடுவாள் போல் தோன்றியது.

அன்று பகல் முழுதும் அவள் வயதை யொத்த தெருப் பெண்கள் யாவரும் அவள் வீட்டுக்கு வந்து ரகளை பண்ணி விட்டுப் போயிருந்தார்கள். 'உன் புருஷன்தான் தையல்காரர் ஆச்சே ! உனக்கு அருமையாகத் தைத்துக் கொடுத்திருக்கிற ரவிக்கையைக் காட்டினுல்தான் போவோம்' என்று அடம் பிடித்தது பொன்னிக்குத்தானே தெரியும்! இன்னும்சிங்காரம் தனக்கு ஒன்றுமே தைத்துக் கொண்டு வரவில்லே என்ருல் அவர்கள் கேட்கிருர்களா, என்ன ?

"இதா, நானு உன்னை வலுவில் வரிந்து கட்டிக் கொண்டேன் ? நீதானே மெள்ள வலையை வீசி, என் வெள்ளை மனத்தைக் கலைத்து...''



"'பேச்சைப் பாரு. நயவஞ்சகமாக ஆசை காட்டி, பெண் உள்ளத்தை ஏமாத்தினது யாருன்னு, அந்த முச்சந்தி காளியாத்தாளுக்குக் கூடத் தெரியும்!''

'' சும்மா, சும்மா சாமி பேரையெல்லாம் இங்கே இழுக்காதே, பொன்னி! நாளைக்கு உன் ரவிக்கையை நானே தைத்துக் கொண்டு வரேனு, இல்லையான்னு, பாரேன்!...''

இப்படி இருவரும் உரையாடிக் கொண்டிருந்தாலும் இரு உள்ளங்களிலும் சென்ற வருஷத்து நிகழ்ச்சிகள் ஊற்றில் இருந்து ஊறும்பும் நீர்க் குமிழிகளைப் போல மேல் நோக்கி வரத் தொடங்கின!

* * *

சிங்காரம் அந்த முச்சந்தியில் ஒரு கடை வைக்க வேண்டும் என்று எத்தனையோ நாட்களாகத் திட்டம் போட்டிருந்தான். கூப்பிடு தூரத்தில் கூகூர்; அரை மைல் கல்லில் அம்பலப்பட்டி; ஒரு கல் தூரத்தில் புதூர். இந்த மூன்று ஊர்க்காரர்களுக்கும் 'உப்பில் இருந்து கற்பூரம்' வரை எந்தச் சாமான் வேண்டியிருந்தாலும் அந்த முச்சந்திக்குத் தான் வர வேண்டும்! அங்கே தனிக்காட்டு ராசாவாக ஒரு தையல் இயந்திரத்தை வாங்கிப்போட்டால் என்ன? அவன் உள்ளத்தில் பொங்கிப் பெருகி வந்த மகிழ்ச்சிக்கு ஈடே இருந்தது கிடையாது! அந்த மனத் துணிச்சலினால்தான் அவன் டவுனில் நாள் ஒன்றுக்கு மூன்று ரூபாய்க்குக் கூலிக்குத் தைத்துக்கொண்டிருந்த வேலையை, முதலாளியின் ஒரு 'சின்ன வார்த்தைக்காக' உதறி விட்டதாக வெளிக்குக் காட்டிவிட்டு இங்கே வந்து சொந்தத்தில் ஒரு கடை போட்டான்!

வைத்த புதிதில் அவன் எதிர்பார்த்த படியே பெரிய கிராக்கிகளாக ஒன்றும் வரவில்லை. பெரும்பாலும் பழைய துணிகளை ஒட்டுப் போடுவதில்தான் அவன் பொழுது கழிந்தது. மிஞ்சி மிஞ்சி வந்தால், குழந்தைச் சட்டைகள் ஒன்றிரண்டு வரும்; ரவிக்கைகள் நாலைந்து வரும்! அவற்றைத் தவிர வேறு ஒன்றும் வருவதில்லை.

நாலைந்து மாதங்களுக்குப் பிறகுகூட இதே நிலைமை நீடித்தபோது அவன் பொறுமை ஓரளவு குலைய ஆரம்பித்தது! தன் கையில் இருந்த பணத்தை இப்படிக் கரைத்தது தவறோ என்று நினைக்கத் தொடங்கினான்.

அன்று விளக்கு வைக்கும் நேரம்: சிம்னி விளக்கு ஏற்றக்கூட அன்று அவனிடம் காசு சேரவில்லை. உள்ளம் மிகச் சோம்பி உட்கார்ந்திருந்தான்.

''இந்தாங்க, இதைக் கொஞ்சம் தைத்துக் கொடுக்கிறீங்களா?..''

உணர்வு வந்து, குரல் வந்த திக்கை நோக்கினான். ஒரு பெண் பழைய ரவிக்கை ஒன்றைக் கையில் வைத்திருந்தாள்.

''விளக்கு வைக்கும் நேரமாகிவிட்டதே! இப்பொழுது கொண்டு வருகிறீர்களே?'' என்றான்.

அந்த வேளையில் பழைய துணியை ஒட்டுப் போட அவனுக்கு விருப்பமில்லை. ஆனால் தைக்க முடியாது என்று கூறவும் மனமில்லை.

''இன்னும் விளக்குத்தான் வைக்கவில்லையே! அதுக்குள் ஒரு 'அடி' அடித்துக் கொடுக்கக் கூடாதுங்களா?'' குரலில் இருந்த கொஞ்சலும் நெகிழ்வும் சிங்காரத்தை அந்தப் பெண்ணைத் திரும்ப நோக்கச் செய்தது.

பதினெட்டு வயது குமரிப் பெண் அவள்; மாநிற மேனியில் ஒரு நிகுநிகுப்பு; மூக்கும் விழியும் தெறித்து விழுந்துவிடும் போல் அச்சாக அமைந்திருந்தன. செப்புச் சிலைக் கணக்காக, கண்டவர் மனத்தைக் கிறுகிறுக்கச் செய்யும் அழகு உடம்பு; எங்கோ பழைய கோவில் தூணில் இருந்த ஒரு தெய்விகக் கற்சிலைதான் சிற்றடி எடுத்து வைத்துப் பெயர்ந்து வந்திருக்கிறதோ என்று நினைத்தான். அந்தக் கண்களுக்கு மை எதற்கு? அந்த இதழ்களுக்குத்தான் சாயம் எதற்கு?

சிங்காரம் எழுந்து, '' எதைத் தைக்க வேணும்?'' என்று கேட்டான்.

''இதோ, இந்த முதுகில் ஒரு சிறு கிழிசல் இருக்கிறது. அதைத் தைத்துக் கொடுக்க வேணும்!''என்று, தான் கொண்டு வந்திருந்த பழைய ரவிக்கையை அவனிடம் நீட்டினாள்.

வாங்கிக் கொள்ளலாமா, வேண்டாமா என்ற சந்தேகத்துடன் தயங்கி நின்றான் ஒரு நிமிஷம்.

''இந்தாங்க, துட்டுவேணும்னு முன்னடியே கொடுத்து விடுகிறேன். கடன் கிடன் சொல்வேன் என்று பயப்படாதீங்க......!'' என்று பொன்னி சேலைத் தலைப்பில் முடிந்திருந்த முடிப்பை அவிழ்த்தாள்.

சீமை வெண்ணெய்க்காவது ஆகும் என்று நினைத்துக் கொண்டு, இயந்திரத்தை முடுக்கித் தைத்துக் கொடுத்தான்.

'' என்ன கொடுக்கணுங்க?...''

''இஷ்டப்பட்டதைக் கொடு!''

ஒரு அணாவை எடுத்துக்கொடுத்தாள் அவள்; அதை வாங்கி இயந்திரத்தில் பொருத்தப்பட்டிருந்த பணப் பெட்டியில் போட்டான்.

''நான் வரேனுங்க!'' என்று சொல்லிவிட்டு ஒரு துள்ளலுடன் ஓடிவிட்டாள் அந்தப்பெண். சிங்காரம் அவள் போன திக்கையே கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவள் போனதும் சிறிது தூரத்தில் இருந்த கடைக்குச் சென்று மண்ணெண்ணெய் வாங்கி வந்து விளக்கை ஏற்றி வைத்துக் கும்பிட்டான். விளக்கின் ஒளியில் இருட்டு விலகிச் சென்றதைப்போல, அந்தப் பெண்ணின் சிறிது நேரப் புன்னகையில் அவன் சென்ற சில மாதங்களாக அனுபவித்து வந்த ஏமாற்றமும் கவலையும் மறைந்துவிட்டன. அவள் பெயரையும், இருப்பிடத்தையும் கேட்டு வைத்துக் கொள்ளாமல் போய் விட்டோமே என்று நினைத்துக் கொண்டான்.

ஐந்து நிமிஷங்கள் கழிந்திருக்கும்; இரண்டு புதிய சட்டைகள் தைக்கும் ஒரு கிராக்கி வந்தது. இன்னும் பத்து நிமிஷத்தில் மற்றொரு கிராக்கி வந்தது. அடுத்த நாள் முழுதும் அவனுக்கு வேலை இருந்தது. அந்த அழகியினுடைய கைராசிதான் இவ்வளவும் என்று உள்ளத்தில் ஓர் இனிமையான எண்ணம் மிதந்தது.

* *

மறுநாள் காலை ஒன்பது மணி இருக்கும்; அதற்குள் அவனுக்கு மேலும் இரண்டு மூன்று 'கிராக்கிகள்' வந்திருந்தன. தையல் இயந்

திரம் 'ட்ற்ற்...' என்ற ஒலியுடன் வேகமாகச் சுழன்று கொண்டிருந்தது.

அதே பெண் வேகமாக வந்து, ''என்னுங்க தையல்காரரே! நேற்றைக்கு ஏமாத்திட்டீர் களே! இதோ பாருங்க, ஒரு பக்கம் மிஷிசிலத் தைக்கவே இல்லையே?'' என்று முதல் நாள் தைத்ததைக் கொடுத்தாள்.

''அடடே, தையல் தப்பிவிட்டது; கோபித் துக் கொள்ளாதே'' என்று தன் கையில் இருக்கும் புதிய துணிகளைக் கீழே வைத்து விட்டு, அவளுடைய ரவிக்கையைச் சீர்ப் படுத்த முனைந்தான்.

''உம்!...உன் பேரைச் சொல்லவில்லையே?''

''பொன்னிங்க!''

''நல்லபேரு! குணமும் அப்படித்தான் இருக் கும்!'' என்று சிரித்துக் கொண்டே கூறினான். அவள் நாணத்தினால் தலைகுனிந்து நின்றாள்.



''எங்கே குடி இருக் கிறாய்?''

''அம்பலப்பட்டிபிள்ளை யார் கோவில்தெருவிலே! ...எதுக்குங்க?''

''இல்லே, சும்மா கேட் டேன். நேற்று வந்து விட்டுப் போனதும் நாலைந்து புது கிராக்கிகள் வந்து விட்டன!''

''அதனாலென்னங்க?''

''இல்லே...... உன் கைராசிதான்னு நினைத் துக் கொண்டேன்!'' என்று அவளைப் பார்த் துக் கொண்டே சொன் ஞன் சிங்காரம்.

''போங்க, கேலி யெல் லாம் செய்யாதீங்க! உங் களுக்கு என்னுங்க? வேண் டிய பேரு துணி தைக்க வருவாங்க!''

இப்படித்தான் முதலில் இருவருக்கும் சிநேகம் ஏற்பட்டது. பிறகு ஒரு வாரம் பத்து நாட்களுக்கு ஒரு முறை எதையாவது கிழிந்ததை எடுத்து வந்து கொடுத்துத் தைத்து வாங்கிக் கொண்டு போவாள். ஒவ்வொரு தடவையும் அவள் ஏன் பழைய துணிகளையே எடுத்துக் கொண்டு வருகிறாள் என்று கேட்க அவனுக்கு ஆவலாக இருந்தது. ஆனால் அதைக் கேட்டு, மகிழ்ச்சி பொங்கும் அந்த முகத்தில்-ஏன் சோகத் திரையைப் போர்த்த வேண்டும் என்று அஞ்சினான்.

கடைசியில் ஒரு நாள் துணிந்து அவன் கேட்டு விட்டான். அன்றுதான் பொன்னி தன் ஏழைமை குடிகொண்ட வாழ்வை அவ னிடம் கூறினாள். அவள் தாய் தீராத நோயால் படுத்த படுக்கையாகக் கிடப்பதாக வும், அவள் அம்பலப்பட்டியில் நான்கு வீடு களைக் கூட்டி வேலை செய்து வாழ்க்கை நடத்துவதாகவும் கூறினாள். அந்த வீட் டார்கள் உபயோகித்த பழைய ஆடைகளை அவர்கள் அவ்வப்போது பொன்னிக்கு அளிக் கிறார்கள் என்றும், அவற்றையே அவள் சிங்காரத்தினிடம் கொடுத்துத் தைத்துக் கொள்வதாகவும் கூறினாள்.

'' வீட்டில் ஆண் துணையே இல்லையா ?''

'' எங்க மாமன் இருக்குது !''

'' அப்படிச் சொல்லு! முறை மாமன் காத்துக்கொண்டு இருக்கிறானு ?''

'' அதுக்குக் கல்யாணமாகி, சம்சாரம்கூடத் தவறிவிட்டது. அதுக்கு நாற்பது வயசுக்கு மேலே இருக்கும்!''

'நாற்பது வயது ஆகி இருந்தால் இன்னொரு கல்யாணம் செய்து கொள்ளக் கூடாதா, என்ன ?'' என்றான்.

'' எங்க அம்மா அதற்கு ஒத்துக்காதுங்க!... நான் வரேன் !...''

அதற்குப் பிறகு பொன்னி நாள்தோறும் காலையிலோ மாலையிலோ வந்து சிங்காரத் தைச் சந்தித்துச் சிறிது நேரமாவது பேசாமல் போனதில்லை.

★

திடீரென்று பதி னைந்து நாட்களாகப் பொன்னியைக் காண வில்லை. சிங்காரத்துக்குக் கடையில் இருப்பே கொள்ளவில்லை. யாருக்கு என்ன உடம்போ என்ற கவலை அவனை வாட்டிக் கொண்டிருந்தது.

ஒரு நாள் காலையில் கிருதா மீசையுடன் ஒரு முரட்டு மனிதன் சிங் காரத்தின் கடைக்கு வந்து, ''என்ன, தம்பி! இந்த ரவிக்கையைத் தைத்துக் கொடுக்க வேணும். கல்யாணப் பெண்ணுக்குப் போவுது! நல்லா தைத்துக் கொடுக் கணும், தெரியுமா?'' என்று கூறிவிட்டு ஒரு பட்டுத் துண்டை எடுத் துச் சிங்காரத்தின் கையில் கொடுத்தான்.

''நன்றாகத் தைத்துக் கொடுக்கிறேனுங்க. அளவு வேணுமே!''

'' இதோ அளவு ரவிக்கை இருக்குது!'' என்று மடியில் இருந்த பழைய ரவிக்கை ஒன்றை எடுத்துக் கொடுத்தான். அதைக் கையில் வாங்கியதுமே சிங்காரத்துக்குக் கையில் தேள் கொட்டினது போல் சுரீரென் றது. அது பொன்னியின் ரவிக்கை என்று தெரிந்து விட்டது.

'' என்னப்பா, அப்படிப் பார்க்கிறே?''

'' இந்த அளவுக்குப் புதுத்துணி போதுமா என்று பார்க்கிறேன். உம், போதும் போலத் தான் தோணுது. என்றைக்குக் கொடுக்க வேணும்?'' என்று கேட்டான் சிங்காரம்.

'' வெள்ளிக்கிழமை இரவு முகூர்த்தம்; புதன்கிழமையே கொடுத்திடணும், தம்பி!''

'' வாங்கின வேலையே அதிகமாக இருக் குதுங்க!'' என்றான் தையல்காரச் சிங்காரம்.



சிறந்தோர்
அணியும்
பாத அணிகள்
• சௌகரியத்தன்மை
• இயற்கையான மிதி அடி
• அழகு
• நீடித்த உழைப்பு
ஆகிய காரணங்களுக்காக
அரசினர் பாத அணி
நிலையம்,
பெரம்பூர், மதராஸ்
கிடைக்குமிடம்:
தொழில் இலாகா விற்பனை நிலையம்
166-A. மவுண்ட் ரோடு
சென்னை - 2
Sista's MF-4

"இருக்கட்டும், அப்பா! நீ சின்னப்பிள்ளை. மேலும் இரண்டு மணி தையல் இயந்திரத்திலே உட்கார்ந்தால் எல்லாத் துணியும் தைத்து ஆவுது! மறக்காமல் கொடுத்து விடு. தம்பி! கல்யாண விஷயம் பார்!" மீசையை முறுக்கி விட்டுக் கொண்டான் அவன்.


"சரிங்க!" என்றான்.

அந்த ஆள் போன பிறகு அவனால் ஒரு வேலையும் செய்ய இயலவில்லை. அந்தப் புதிய பட்டுத் துணியையும் பழைய ரவிக்கையையுமே வெறிக்க வெறிக்கப் பார்த்துக்கொண்டிருந்தான் சிங்காரம்.

அன்று மாலை விளக்கு வைக்கும் நேரம். இருள் கவிந்து வந்தது. பொன்னி அவன் முன் வந்து நின்றாள்.

அவளை ஒரு தடவை பார்த்தான். அவள் அழுது புலம்பி யிருப்பது, அவள் கண்கள் வீங்கி இருந்ததனால் தெரிந்தது.

"என்ன சமாசாரம்? ஏன் இத்தனை நாட்களாக இந்தப் பக்கம் காணோம்?"



கல்கி துணை ஆசிரியர் ஸ்ரீ ஜெயமணி ஸ. சுப்பிரமணியம் அவர்களின் புதல்வி சௌபாக்கியவதி ராஜலக்ஷ்மிக்கும், துரிவனம் மிராசுதார் ஸ்ரீ ஜி. கிருஷ்ணமூர்த்தி அய்யர் அவர்களின் புதல்வர் சிரஞ்சீவி கே. ராமமூர்த்திக்கும் சென்னையில் அதி விமரிசையாகத் திருமணம் நடந்தேறியது. திருமணத்துக்கு உறவினர்களும், நண்பர்களும், கல்கி காரியாலயத்தினரும் வந்திருந்து சிறப்பித்தனர். வாழ்க மணமக்கள்!

அவள் உடனே பதில் சொல்லவில்லை. கண்கள் கலங்கிக் குளமாயின.

"உனக்குக் கல்யாணம் என்று எனக்குக் கூடத் தெரியுமே...!"

"என்ன, உங்களுக்குக்கூடத் தெரியுமா?"

பட்டு ரவிக்கைத் துணியை எடுத்துக் காட்டி, கொண்டு வந்து கொடுத்த ஆளின் அடையாளத்தையும் சிங்காரம் கூறினான்.

"அதுதான் என் மாமன்! அவருக்குத்தான் என்னை..."

"அவருக்கா நீ வாழ்க்கைப்படப் போகிறாய்?" என்று கேட்டான் வியப்புடன்.

"என் இஷ்டம் என்ன இருக்கு? அம்மா சாகக் கிடக்கிறாள். எவர் கையிலாவது என்னை ஒப்படைத்து விட்டுக் கண்ணை மூட வேண்டும் என்கிறாள்!"

"நீ உன் இஷ்டத்தை உன் அம்மாவிடத்தில் சொல்லுவதுதானே!"

"அம்மாவால் என்ன செய்ய முடியும்? என் மாமனுக்கு விரோதமாகப் பேசுகிறவர்களின் தலை தப்புவது அருமை!"

"முரட்டு ஆள் போல இருக்கு!"

"ரொம்ப முரடுங்க! அதோட 'வஸ்தாது' வேறே! கழியைக் கையிலே எடுத்தால் நூறு பேராயிருந்தாலும் ஒரே ஆளாக நின்று அடிப்பாரு!"

"உம்...!" சிங்காரம் ஒரு மூச்சுவிட்டான்.

"பெருமூச்சுத்தான் உங்களால் விட முடியும்! வேறு என்ன செய்வீங்க?"

"பொன்னி! உனக்காக உயிரை வேணுமானாலும் விடத் தயாராக இருக்கிறேன். நீ சந்தோஷமாக இருப்பதற்கு......"

"நீங்க உயிரை விட்ட பிறகு, நான் எப்படி சந்தோஷமாக இருக்க முடியுமாம்? பேச்சைப் பாரு!" என்றாள் பொன்னி.

சிங்காரம் அவளைப் பார்த்தபடியே ஒரு நிமிஷம் நின்றான்.

"சரி, இன்றைக்கு என்ன ஞாயிற்றுக் கிழமைதானே! இன்னும் நாலு நாட்கள் இருக்கின்றன! அதற்குள் ஏதாவது செய்யலாமா என்று பார்க்கிறேன்!" என்றான்.

பொன்னி தயங்கித் தயங்கி நின்று விட்டுப் போனாள்; மறுநாள் அதே வேளைக்கு அங்கு வந்து சேர்ந்தாள்.

"என்ன செய்யப் போறீங்க?"

"இந்தப் பட்டு ரவிக்கையைத் தைத்துக் கொடுக்கா விட்டால் கல்யாணம் எப்படி நடக்கும்?" என்றான் சிங்காரம் சிரித்தபடியே.

அதைக் கேட்டுவிட்டு, பொன்னி அவ்வளவு வருத்தத்திலும் குழந்தை மாதிரி சிரித்தாள்.

"அழகுதான்! 'சீப்பை எடுத்து ஒளித்து வைத்துக் கொண்டால் கல்யாணம் நின்று விடுமா?' என்று கேட்பார்களே, அம்மாதிரி இருக்கிறது உங்க வார்த்தை!"

"எனக்கு ஒன்றுமே தோன்றவில்லை, பொன்னி!"

"அப்படியானால் இருக்கவே இருக்கு, என் தலையெழுத்தைப் போல...."

"இன்னும் ஒரு நாள் 'கெடு' கொடு பொன்னி! நாளைக்குச் சொல்லுகிறேன், என்ன செய்யலாம் என்று!"

பொன்னி மறுநாள் வந்தபோது சிங்காரம் கன்னத்தில் கையை வைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்தான்.

பொன்னி ஒரு களைப்பு களைத்து விட்டு அவன் அருகே வந்து நின்றாள்.

"பொன்னி, நாம் இருவரும் எங்கேயாவது ஓடிப்போய் விட்டால் என்ன?"

"தயாராக இருக்கிறேன்; ஆனால் நீங்கள் தான் மூணாரோ, நாலாரோ போட்டுத்தையல்

இயந்திரம் வாங்கி வைத்திருக்கீங்க. அதை யெல்லாம் விட்டு விட்டு எப்படி வர முடியும்?''

'' ஆமாம்! உங்க மாமனுக்குப் பயந்து கொண்டு நாம் எப்படிச் சுகமா வாழ முடியும்? நாளைக்கு முடிவாகச் சொல்லிவிடுகிறேன், பொன்னி!''

'' வெள்ளிக்கிழமை வந்துவிடும்!... .. சாக்கிரதை!'' என்று கூறிவிட்டுப் போனாள்.

மூன்றும் நாள், புதன் கிழமை. அன்றும் பொன்னி வந்திருந்தாள்.

'' எனக்காக நீங்கள் வீண் பிரயாசைப் பட வேண்டாம்!''

'' ஏன், பொன்னி?... ...உன்னுடைய மனம் மாறி விட்டதா?''

'' எனக்காக நீங்கள் எதற்கு உங்கள் வாழ்க்கையைச் சிதற அடித்துக் கொள்ள வேண்டும்? நாளை இரவு நான் இந்த உலகத்திலிருந்தே ஒரேயடியாக மறைந்து விடுவதற்குத் துணிந்து விட்டேன்!''

''பொன்னி, நீ நிரம்பத் தைரியமுள்ள பெண் என்று நினைத்திருந்தேன். இவ்வளவு தானா?'' என்றான்.

''தைரியம் இருந்து என்ன செய்வது?''

'' நான் உன்னை அப்படி விட்டுவிடுவேனா?''

சிங்காரம் தன் எண்ணத்தைக் கூறினான்:

மறுநாள் மத்தியானம் இரண்டு மணிக்குப் பொன்னி சிங்காரம் கடைக்கு வர வேண்டும். வாசலில் குதிரை வண்டி தயாராக இருக்கும். இருவரும் அதில் ஏறிக் கொண்டு பத்து மைலுக்கு அப்பால் உள்ள செட்டி குளத்துக்குப் போய், அன்று இரவு முருகன் சன்னதியில் மணம் செய்து கொள்ள வேண்டும். பொன்னிக்கு மகிழ்ச்சி பொங்கியது.

''மாமனுக்குத் தெரிந்து பின்தொடர்ந்து விட்டால்.........?'' என்று கேட்டாள்.

'' அதற்குத்தான் இரண்டு நாட்களாக, நம் கல்யாணத்துக்கு வேண்டிய பாதுகாப்பு களைச் செய்ய வேண்டியிருந்தது. உங்கள் மாமாவைவிடப் பெரிய வஸ்தாது ஒருவனைப் பணம் கொடுத்து ஏற்பாடு செய்யச் சொல்லி இருக்கிறேன். அவன் நமக்காகக் கோவில் வாசலில் காவல் இருப்பான். என் வீட்டு ஜனங்களும் நண்பர்களுமாக நாற்பது ஐம்பது பேர்கள் இருப்பார்கள். நீ எதற்கும் அஞ்ச வேண்டாம்!'' என்றான்.

அடுத்த நிமிஷம் பொன்னி, அவன் கையைப் பிடித்து ஒரு உலுக்கு உலுக்கிவிட்டு, ''இப்பத்தான் ஆண்பிள்ளை சிங்கம்னு தோணுது!'' என்று கூறினாள்.

✱

அதே மாதிரி வியாழக்கிழமை இரவு. முருகன் சன்னிதியில் பொன்னிக்குச் சிங்காரம் தாலி கட்டிவிட்டான். தாலி கட்டின பிறகு



புது தில்லி திட்டக் கமிஷன் காரியாலயத்தைச் சேர்ந்த திரு வி. கல்யாணசுந்தரம் எம். ஏ. உலோகப் பொருளாதாரத்தில் பயிற்சி பெற அமெரிக்காவுக்குச் சென்றிருக்கிறார்.

கூட ஒரு குழப்பமும் இல்லாமல் இருக்கவே, வாசலில் தடியும் கையுமாகக் காத்திருந்த வஸ்தாது உள்ளே வந்து, 'என்னங்க, ஒரு நாயைக்கூடக் காண வில்லையே! உங்களுக்கு ஐம்பது ரூபாய் வீண் செலவு தான்!'' என்று கூறினான்.

''ஏதோ உங்க புண்ணியத்திலே கல்யாணம் நடந்து விட்டது. மணமக்களை ஆசீர்வாதம் செய்ய வாருங்கள்!'' என்று சிங்காரத்தின் தகப்பனார் அவரை அழைத்துக் கொண்டு வந்தார்.

சிங்காரமும், பொன்னியும் அவரைக் கும்பிட வந்தவர்கள் அவரைப் பார்த்ததும் அரண்டு, அப்படியே நின்று விட்டார்கள்

'' நீங்களா!'' என்றான் சிங்காரம் குழறியபடி.

'' நீதானா?'' என்றாள் பொன்னி நடுங்கியபடி.

சிங்காரத்தின் கல்யாணத்தைக் காத்து நின்றவர் பொன்னியின் மாமனேதான்!

'' மாமா! என்னை மன்னிச்சுடு!'' என்று விழுந்து கும்பிட்டாள் பொன்னி.

அந்த வஸ்தாத்துதான் பொன்னியை மறுதாரமாகக் கட்டிக்க இருந்தவர் என்றறிந்ததும் அங்கு கூடியிருந்த யாவருக்கும் ஒரே ஆச்சரியமாகப் போய் விட்டது.

'' ஏதோ சிறுசுகள்! நாம் அவர்களுடைய இன்ப வாழ்க்கைக்கு இடையூறாக இருக்கிறோம் என்று தவறாக நினைக்கிறார்கள். மன்னித்து விடுங்கள்!'' என்றார் கும்பலில் இருந்த ஒருவர்.

பொன்னியின் மாமன் சமாளித்துக் கொண்டு. '' பொன்னி! என்னிடத்தில் ஒரு வார்த்தை சொல்லி இருந்தால்...நம்ம ஊரிலேயே பாண்டிச்சேரி பாண்டு வாத்தியம் முழங்க உனக்குக் கல்யாணம் செய்து வைத்திருப்பேன்'' என்றான்.

'' மன்னிச்சிடு, மாமா! எனக்கு அந்த புத்தி தோணவில்லே!'' என்றாள் பொன்னி.

இப்படி ஒருவர் கையை மற்றவர் பிடித்த கதை இருவர் மனத்திலும் சுழன்று கொண்டிருந்தது.

இடீரென்று சிங்காரம் சிரித்தான்.

'' சிரிப்புக்கு என்னவாம்? நாளைக்கு நாளைக்கு என்று ஏமாத்திடலாம்னுதானே?''


'' இல்லே! உன் மாமன் இன்று கடைக்கு வந்து எனக்கு ஒரு சில்க் சட்டைக்குத் துணி எடுத்துக் கொடுத்தார். 'உனக்கு ஒன்றும் இல்லையா?' என்று கேட்டேன். அவன்தான் கலியாணத்தின்போதே வாங்கிக் கொண்டு விட்டானே என்றார்.''

'' சரி, இரண்டும் தைத்து எப்ப வரும்?''

'' நாளைக்கு, நாளைக்கு, நாளைக்கு, எத்தனை தடவை சொல்வது?'' என்று கூறி அவள் கன்னத்தில் அன்புடன் தட்டினான்.


அவ்வளவு சிக்கனம்! ஒரு முறை தேய்த்தால்
கால்கேட் டெண்டல் கிரீம்
85% கிருமிகளை ஒழிக்கிறது
சொத்தையும் மற்றும் துர்நாற்றமும் ஏற்படுத்தும் கிருமிகள் அவை
COLGATE
COLGATE
DENTAL CREAM
மிகச் சிறந்த பலனுக்கு எப்பொழுதும் உபயோகியுங்கள்!
கால்கேட் டூத் பிரஷ்


மிக அழகிய.
அடர்ந்த நீண்ட ஒளியுள்ள கூந்தல்!
பிரதிதினமும் கால்கேட் பெர்பியூம்டு காஸ்டர் ஹேர் ஆயில் தடவி வந்தால், கூந்தலானது அடர்த்தியாகவும், நீளமாகவும் வளருவதுடன் இளமையின் ஒளியுடனும், அற்புத ஜ்வலிப்புடன் விளங்குவதைக் கண்டு நீங்கள் பரவசமடைவீர்கள். அது உங்கள் கூந்தலின் இயற்கை அழகை எடுத்துக்காட்டி எல்லோரையும் பிரமிக்கச்செய்யும்.
மகிழ்ச்சியூட்டும் நறுமணம்—
உங்கள் குடும்பம்
முழுவதும் விரும்புவது!
COLGATE
HAIR OIL
கால்கேட்
பெர்பியூம்டு
காஸ்டர்
ஹேர் ஆயில்
எக்கானமி சைஸை வாங்கி பணத்தை மிச்சப்படுத்துங்கள்!


பெர்க்லி முந்துகிறது !
பெர்க்லி



ரமணி எழுதிக் கொண்டே இருந்தான். ஒரு இடத்தில் அவன் பேனாவிலிருந்து 'மசி' அதிகமாகக் கொட்டிப் பரவ ஆரம்பித்தது. 'மை'யை ஒற்றப் 'பிளாட்டிங்' பேப்பர் இல்லை. பேனாவில் மை தீர்ந்து விட்டது என்பதன் அடையாளம்தான் இப்படி ஏரேயடியாக மை கொட்டுவது என்று ரமணிக்குத் தெரியாது. "சனியன் பிடித்த பேனா" என்று ஆத்திரப்பட்டான். கடகட வென்ற சிரிப்பொலி கேட்டது. சுற்றுமுற்றும் பார்த்தான். யாரையும் காணவில்லை. காகிதத்திலே காயாமல் தேங்கி நின்ற நீல நிற மை ஜ்வலிப்புடன் கூறியது. "நான்தான் ரமணி பேசுகிறேன். என்னை ஒற்றி உலர்த்தப் 'பிளாட்டிங்' பேப்பரைத் தேடுகிறாயா? முன் காலத்தில் செய்த முறையைப் பின்பற்றேன்" என்று கூறியது.

"அது என்ன முறை?" என்றான் ரமணி.

"ஆதியிலே மனிதர்கள் நீ எழுதும் இந்தப் பேனாவினால்தான் எழுதினார்களா? அல்லது அதோ பட்டை இட்டிய பாட்டிலிலே பலவித வர்ணங்களில் வைத்திருக்கிறாயே, அது போன்ற மையைத்தான் அவர்கள் உபயோகித்தார்களா? எங்களையும் எங்கள் வரலாற்றையும் கேட்டால் நீ ஆச்சரியப்படுவாய்" என்றது மைப் பொட்டு.

"அதைத்தான் சொல்லேன்" என்று பேனாவை மூடி வைத்து விட்டுக் கதை கேட்கத் தயாரானான் ரமணி. கதை என்றதும் எங்கோ விளையாடிக் கொண்டிருந்த ரமணியின் தங்கை உஷாவும் ஓடோடி வந்தாள்.

"அந்தக் காலத்திலே அதாவது உன் தாத்தாவுக்குத் தாத்தாவின் காலத்திலே பறவைகளின் இறகினால்தான் எழுதி வந்தார்கள்.



உன்னிடமுள்ள கத்திக்கு ஆங்கிலத்தில் என்ன பெயர்? "பென் நைப்" என்றுதானே! அப்படி என்றால் 'பேனாக்கத்தி' என்று பொருள் இல்லையா? ஆனால் நீ, அந்த உன் கத்தியினால் பேனாவைச் சீவுகிறாயா? இல்லையே! பென்சிலைத் தானே சீவுகிறாய். அதற்குப் "பென்சில் கத்தி" ('பென்சில் நைப்') என்றுதானே பெயர் இருக்க வேண்டும். அதன் ரகசியம் என்ன, தெரியுமா? முன் காலத்தில் பேனாவாக உபயோகப்பட்ட இறகுகளைச் சீவித் தயாரிக்கக் கத்திகள் பயன்பட்டதால் அதற்கு அந்தப் பெயர் உண்டாயிற்று.

"முற்காலத்தில் பயன்பட்ட இறகு பேனாவின் தத்துவத்தின்படிதான் இக்கக் காலத்தில் பேனா 'நிப்பு' தயாரிக்கிறார்கள். நிப்பின் நடுவே இரண்டாகப் பிளந்திருப்பதின் தத்துவம் வளைந்த பாகத்தில் தங்கி உள்ள 'மை' பேனாவை எழுத அழுத்தும்போது, பிளவு விலகிக் கொள்ள, அதன் வழியே 'இங்க்' முனைக்கு ஒழுகி வரும். பேனாவை ரொம்ப அழுத்தினால் அதிகமான 'இங்க்' முனைக்கு வந்து விடும்.

"மை காகிதத்திலே சிந்தி விட்டாலோ, அல்லது எழுதிய எழுத்துக்களில் 'மசி' காயாமல் தங்கி விட்டாலோ அதற்கு இப்போது நீ 'மையொற்றிக் காகிதத்தை'த் தேடுகிறாயல்லவா? முன் காலத்தில் இதற்கு எழுதும் மேஜையின்மீது 'மைக் கூட்டி'ன் அருகே நைசாகச் சலித்த மணல் நிறைந்த பாத்திரம் ஒன்று வைக்கப்பட்டிருக்கும். இப்போது நீ முகத்துக்குப் பவுடர் பூசிக் கொள்ளும் டப்பாவின் மூடி எப்படி, பல துவாரங்களுடையதாக, ஏரே சமயத்தில் அதிகப் பவுடர் கொட்டாமலிருக்க அமைக்கப் பட்டிருக்கிறதோ, அப்படி அந்த மணல் பாத்திரத்தின் மூடியும் இருக்கும். இந்த மணலை எழுதிய காகிதத்தின் மீது தூவுவார்கள். மணல் அதிகமான 'மசியை' உறிஞ்சிவிடும். பேப்பரைத் தட்டினால் மணல் உதிர்ந்துவிடும்.

"அது போகட்டும். முற்காலத்திலே இப்போது நீ உபயோகிப்பது போன்ற மசியையா உபயோகித்தார்கள்? இல்லை. உன் தாத்தா கூடச் சொல்லி இருப்பாரே 'அந்தக் காலத்திலே நாங்க ளெல்லாம் கடுக்காய் இங்கியிலே தான் எழுதினோம்' என்று. கடுக்காய் இங்கி எழுத்து எழுதும்போது மங்கலாக 'டீ' கஷாயத்தால் எழுதியது போல் இருக்கும். காயக் காய நல்ல கறுப்பாகி விடும். அந்தக் காலத்தில், இப்போதைப்



போல் விதம் விதமான வர்ணங்களில் 'மை' கிடையாது. கடுக்காயினால் ஆன கறுப்பு மை ஒன்றுதான் அப்போது.

"நம் நாட்டிலே கடுக்காயைப் போல் மேல் நாட்டிலே 'ஓக்' என்ற மரத்தின் இலைகளிலே முடிச்சைப்போல் வளரும் ஒருவகை காய்களிலிருந்து 'இங்க்' தயாரித்தார்கள். இந்தக் காய்கள் விஷம் உள்ளவை.

"கடுக்காயை நீரிலே ஊறவைத்து உலையில் வைத்துக் காய்ச்சுவார்கள். அத்துடன் நீரில் கரையக் கூடிய பளபளக்கும் பசுமையான ஸ்படிகம் போன்ற மயில் துத்தம்—அல்லது "அயர்ன் ஸல்பேட்" என்ற ஒருவித ரஸாயனப் பொருளைச் சேர்த்ததும் கடுக்காய் நீர் உடனே கறுப்பாக மாறிவிடும். இதுதான் அந்தக்காலத்துக் கடுக்காய் இங்க். இந்த இங்க் ரொம்ப நீர்க்க இல்லாமல், எழுதினால் காகிதத்தில் பரவாமல் இருக்க இத்துடன் கோந்தையும் கலப்பார்கள்.

"நவீன முறையிலே இங்க் தயாரிப்பது மிக மிகச் சுலபமாகி விட்டது. கடுக்காயைத் தேடிக் கஷ்டப்பட வேண்டாம். எந்தவிதமான வர்ணமுள்ள 'இங்க்' வேண்டுமானாலும் அதற்கு 'டை' இருக்கிறது. 'டை' என்பதுஒரு ரஸாயனப் பொருள். அதாவது சாயக்கட்டி. இந்தச் சாயத்தைத் தூளாகச் செய்து நீரிலே கலந்தால் அந்தந்தச் சாயக் கட்டிக்கு ஏற்ற வர்ணக் குழம்பு கிடைக்கும். இந்த'டை' நீரில் கரையக் கூடியது. இந்தக் குழம்பு நீர்த்துப் போகாதிருக்க இத்துடன் கோந்து கலக்கிறார்கள். கட்டி தட்டிப் போகாதிருக்க 'அஸிடிக் ஆஸிட்' என்ற ஒரு அமிலத்தையும் இத்துடன் கலக்கிறார்கள்.

"இந்த 'டை'யை எதிலிருந்து செய்கிறார்கள் என்று கேட்கிறாயா? நிலக்கரியிலிருந்து. என்ன கன்னங் கரேலென்ற நிலக்கரியிலிருந்தா மரகதப் பச்சையும், ரத்தினச் சிவப்பும் பொன்னிற மஞ்சளும், வானத்தின் நீலநிறமுமான 'இங்க்'குகள் செய்யும் 'டை' கிடைக்கிறது?" என்று வியப்பும் திகைப்பும் அடைகிறாயல்லவா?

"ஆச்சரியந்தான்! ரமணி, விஞ்ஞானத்தின் எத்தனையோ விந்தைகளில் இதுவும் ஒன்று. நிலக்கரியிலிருந்து தார் காய்ச்சும்போது நிறமில்லாத நீர் போன்ற ஒரு பொருள் கிடைக்கிறது. இதுதான் இத்தனை வித வர்ணஜாலங்களுள்ள மை தயாரிப்பதற்கும் மூலப் பொருளாக இருக்கிறது.

"பறவையின் இறகு எழுதுகோலாக இருந்த காலம் மாறி இரும்பினாலான 'நிப்பு' வந்து விட்டது. பிஸ்கட் போன்ற உருக்குத் தகட்டிலே ஒரு யந்திரம் 'நிப்பு'களை வெட்டி எடுக்கும். இப்படி நிப்புபோல வெட்டி எடுத்த எஃகுத் துண்டினால் எழுத முடியாது. இது தட்டையாக அல்லவா இருக்கும். இதில் மை நிற்காதே. ஆகவே இதைக் குழிவாக வளைப்பார்கள். நடுவிலே ஒரு துவாரம். முனையிலிருந்து அந்தத் துவாரம் வரை ஒரு பிளவு. இப்போதுதான் இதில் 'மை' நிற்கும். அது மட்டும் போதுமா? 'நிப்பு' உறுதியாக இருக்க வேண்டாமா? ஆகவே இதைப் பழுக்கக் காய்ச்சிச் சட்டென்று நீருக்குள்ளோ அல்லது எண்ணெயிலோ முக்கிக் குளிர வைப்பார்கள். இதன்மீது 'நிக்கல்' என்ற உலோகத்தினால் பூச்சுப் பூசி, துருப் பிடிக்காதபடி செய்வார்கள். இப்போது அது பளபள வென்று காட்சியளிக்கும். அதன் மீது அது பிறந்த இடத்தையும் தன்மையையும் முத்திரை குத்திப் பொறிப்பார்கள்.


"என்னைப் பற்றிச் சொல்லவில்லையே என்று குதிக்கிறது 'ரப்பர்'. உனக்குத் தேவையான பொருள்களில் அதுவும் ஒன்றல்லவா? இப்போது ரப்பர்மரம் இல்லாமலே கூட ரப்பர் தயாரிக்கப்படுகிறது. எப்படித் தெரியுமா? மரத்தூளிலிருந்து 'மரச் சாராயம்' என்ற ஒருவித எண்ணெயைத் தயார் செய்கிறார்கள். இந்த மரச் சாராயத்திலிருந்துதான் செயற்கை முறையில் இந்த அழகான விதவிதமான ரப்பர் தயாரிக்கப் படுகிறது.

"பழைய காலத்துப் பையனொருவன் உன் டிராயரைப் பார்த்தால் ஆச்சரியப்பட்டுப் போவான். பறவையின் இறகினாலாகாத பேனாவையும், சிலேட்டுக் குச்சிக்குப் பதிலாக கிராபைட்டினாலான காகிதத்தில் எழுதும் காகிதப் பென்சிலையும், சிலேட்டுக்குப் பதில் வெள்ளைத் தாளினால் ஆன நோட்டுப் புத்தகத்தையும், மணல் நிறைந்த பாத்திரத்துக்குப் பதில் "பிளாட்டிங் பேப்பரையும். நிலக்கரியிலிருந்து தயாரித்த விதம் விதமான வர்ண மசியையும், மரத்தூளிலிருந்து தயாரித்த ரப்பரையும் கண்டால் அவனுக்கு ஆச்சரியமாக இருக்காதோ? நீயே சொல்லு" என்று கேட்டது நீல வர்ண மைப் பொட்டு.

"உங்களை எல்லாம் பெற்ற தாங்களே பாக்கியசாலிகள்!" என்று மகிழ்ந்து போனார்கள் ரமணியும், உஷாவும்.

கண்டுபிடி !

இங்குள்ள படத்தில் உங்களுக்குப் பழக்கமான சில பொருள்கள் தரப்பட்டிருக்கின்றன. இவை என்னென்ன என்று கண்டு பிடியுங்கள் பார்க்கலாம்! [விடை அடுத்த இதழில்]



மூன்று நண்பர்கள்

10. தீயின் நடுவே சேகர்

"உங்கள் டிரைவர் பயர் எஞ்சினுக்குப் போன் செய்யப் போயிருக்கிறாரா ?" என்று கேட்டார் ஒரு போலீஸ்காரர். சேகர், 'ஆம்!' என்று தலையசைத்தார். புலித்தேவன் பங்களா பயங்கரமான தோற்றத்துடன் கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருந்தது. அந்தப் பிராந்தியம் முழுதும் ஒரே சிவப்பு ஒளி; 'ஹோ' என்ற தீ ஜுவாலையின் ஓசை: 'படீர் படீர்' என்றுகட்டடத்தின் சுவர்கள் வெடித்துச்சிதறும் ஒலி.

"எப்படி இவ்வளவு சீக்கிரத்தில் இவ்வளவு பெரிய வீட்டில் தீ பரவியது?" என்று கேட்டார் ஒரு போலீஸ்காரர்.


"மோட்டாரின் பெட்ரோல் டாங்கி உடைந்து அதிலுள்ள பெட்ரோல் சிதறித் தீப்பிடித்துப் பரவி விட்டது. அப்பா !" என்றார் மற்றொரு போலீஸ்காரர்.

ஆனால் சேகருக்கு அப்படி நடந்திருக்குமென்று தோன்றவில்லை. சதிகாரர்கள் தங்கள் ரகசிய இருப்பிடம் பிறருக்குத் தெரிந்து விட்டது என்பதினால் இந்தப் பாழடைந்த பங்களாவுக்குத் தாங்களே தீமூட்டி இருக்க வேண்டும். அதற்காகத் தான் அவர்கள் மறுபடியும் புலித்தேவன் பங்களாவுக்கு வந்திருக்கிறார்கள். அவர்கள் மூட்டிய தீ பரவுவதற்கும் இவர்கள் வருவதற்கும் சரியாக இருந்திருக்கிறது. ஆனால்...

மணி எதையோ அவர்கள் காரின் மீது வீசினானே, அது என்ன? அவன் எங்கே? அவன் வீசிய பொருள் வெடித்ததினால் தான் அவர்கள் கார் அப்படித் தலை குப்புறக் கவிழ்ந்து விழுந்ததோ ?

சேகரின் மூளை குழம்பலாயிற்று. அவர் தேடி வந்த மனிதர் பாதாளச் சிறையில் இல்லை. அப்படியானால் சதிகாரர்கள் அவரை அப்புறப்படுத்தி விட்டார்களா? அல்லது அவர் சதிகாரர்களிடமிருந்து தப்புவதற்காக, இட்டுவும் பட்டுவும் வருவதற்குள், சுரங்கப்பாதையிலிருந்து வெளியேறிக் கட்டடத்துக்குள் போய் மறைந்திருப்பாரோ ? அப்படியானால் காயம்பட்டுள்ள அவரால் தீப்பிடித்துக் கொண்டு எரியும் இந்த வீட்டிலிருந்து வெளியேறித் தப்பித்துக் கொள்ள முடியாதே!

சேகருக்கு என்ன செய்வது, என்ன முடிவுக்கு வருவது என்றே புரியவில்லை. போலீஸாரில் இருவர் உருண்டு கிடந்த மோட்டாரிலிருந்த மனிதர்களை வெளியேற்றுவதில் ஈடுபட்டிருந்தனர். மற்றொருவர் நெருப்பணைக்கும் படையை எதிர் பார்த்துச் சாலையை நோக்கியபடி நின்று கொண்டிருந்தார். சேகர் சட்டென்று ஒரு முடிவுக்கு வந்தவராக எரிந்து கொண்டிருக்கும் புலித்தேவன் பங்களாவை நோக்கி ஓடினார். அடுத்தவிநாடி பயங்கரமான அந்தத் தீ ஜுவாலையில் புகுந்து, கட்டடத்தின் வாசல் கதவைத் தன் கால்களால் உதைத்துத் திறந்து கொண்டு உள்ளே புகுந்து விட்டார். ஒரு வேளை, தான் தேடி வந்த நபர் அந்தக் கட்டடத்துக்குள்ளிருந்து வெளியேற முடியாமல் தவித்துக் கொண்டிருப்பாரானால் அவரைக் காப்பாற்ற வேண்டும் என்ற ஒரே நோக்கம்தான் சேகருக்கு. "ரமேஷ்...ரமேஷ்..." என்று கூப்



வாண்டுமாமா

பிட்டபடி உள்ளே இங்கும் அங்கும் ஓடினார். ஆனால் எங்கும் ஒரே புகை. வழி தெரியவில்லை. மூச்சுவிட முடியாமல் புகை குமைந்தது. இக்குமுக்காடி இருமினார். யாரைத்தேடி உள்ளே வந்தாரோ அவர் அங்கு இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் வெளியேறும் பாதையில், சுவரும் உத்திரமும் விழுந்து அடைபட்டு விட்டது.

அந்தக் கட்டடத்திலிருந்து வெளியேற இனி ஒரே ஒரு வழிதான் உண்டு. மாடிக்குப் போகும் வழியைக் கண்டு பிடித்து அதன் வழியாக மேலே ஏறி, மாடியிலுள்ள ஏதாவதொரு ஜன்னல் வழியே கீழே குதிக்க வேண்டும். கண்ணைத் திறந்து பார்க்க முடியாத புகை—மூச்சு விட முடியாமல் திணற லவர்தது. கீழே படுண்டியிட்டுக் குனிந்து முகத்தைத் தரையிலே பதித்து மூச்சை இழுத்துச் சுவாசித்தார். நல்ல காற்றைப் புகை கீழே அழுத்திக் கொண்டிருந்த தால் இந்த முறையில் சுவாசிக்கச் சுலபமாக இருந்தது. ஆனால் உள்ளே இருக்கும் ஒவ்வொரு நிமிஷமும் அபாயம் அவரை நெருங்கிக் கொண்டிருந்தது. காரைகள் பெயர்ந்து விழ ஆரம்பித்தன. வீட்டின் பல பாகங்களிலும் உத்திரம் பெயர்ந்து விழும் 'தடால்' 'தடால்' என்ற ஓசை சேகரிடம் பரபரப்பை உண்டாக்கியது.

தட்டுத் தடுமாறியபடி தீ ஜுவாலைகளில் புகுந்து தாண்டிக் குதித்து எப்படியோ மாடிப்படிகளைக் கண்டு பிடித்தார். அடிக்கடி 'ரமேஷ்! ரமேஷ்!' என்று கூப்பிட்டுக் கொண்டிருந்தார். ஆனால் எவ்விதப் பதிலுமில்லை. நிமிஷத்துக்கு நிமிஷம் நெருப்பின் உக்கிரம் உச்ச நிலையை அடைந்து கொண்டிருந்தது. சேகர் மாடியை அடைந்த அதே விநாடி, மாடிப்படி தடதடவென்று இடிந்து கீழே விழுந்து விட்டது. இனி அவரால் கீழே இறங்கவும் முடியாது. ஸ்தம்பித்துப் போய் நின்று கொண்டிருந்த அவரை நோக்கி, மேலிருந்து ஒரு பெரிய உத்திரம் பிரும்மாண்டமான தீவட்டியைப் போல் தனத்தைப் பெயர்த்துக் கொண்டு தகதகவென்று எரிந்தபடி கீழே விழுந்தது. சேகர் குபீரென்று தாவிச் சுவரோடு ஒண்டிக் கொண்டிரா விட்டால் அந்தப் பெரிய உத்திரம் அவர் உயிரைக் குடித்திருக்கும்.

தரை சுட்டது. சுவர்கள் நெருப்பாகக் கொதித்தன. சுற்றுப் புறமெங்கும் தகித்தது. தப்ப வழி தேடித் தவித்தார் சேகர். தூரத்திலே ஒரு ஜன்னல் தெரிந்தது. அதை நோக்கி ஓடினார். வழியிலே எரிந்து கொண்டு கிடந்த நெருப்புக் கோளங்களைத் தாண்டியும், காலால் உதைத்துத் தள்ளிக் கொண்டும் போனார். ஜன்னல் இறுகிக் கிடந்தது. அதில் இன்னும் தீப்பிடிக்க வில்லை. ஆனால் அதைத் தொட முடியவில்லை. தம் பலம் கொண்ட மட்டும் காலால் உதைத்தார். ஜன்னல் கலகலத்தது; கைகளால் பிடித்து கெம்பினார் 'படீர்' என்று ஜன்னல் திறந்து கொண்டது.


சேகர் சிரமப்பட்டுத் திறந்த ஜன்னலுக்கு நல்ல வேளையாகக் கம்பிகள் இல்லை. தவிப்புடன் தலையை வெளியே நீட்டிப் புகையில்லாத காற்றை ஆழ்ந்து சுவாசித்தார். அப்போது அவர் காதுகளில் இனிமையான ஒரு ஒலி கேட்டது. நெருப்பணைக்கும் யந்திரங்களின் மணியோசை தான் அது. இத்தனை நேரம் புகையோடும் அனல் காற்றோடும் போராடிய சேகருக்குத் தலை சுற்றியது. மயக்கம் வரும் போலிருந்தது. ஜன்னல் வழியே உடலை நீட்டிக் கைகளை அசைத்து உதவிக்கு அழைத்தார். இவர் இருந்த ஜன்னலுக்கு நேரே ஒரு மோட்டார் வந்து நின்றது. அதிலிருந்து ஒரு ஏணி சேகர் இருந்த ஜன்னலை நோக்கி நீண்டு கொண்டே வந்தது. அதன் மீது நெருப்பணைக்கும் படையைச் சேர்ந்த ஒருவர் நின்று கொண்டிருந்தார். சில நிமிஷங்களில் சேகரை அந்த மனிதர் தம் தோளில் சுமந்தபடி ஏணி வழியே கீழே இறங்கிக் கொண்டிருந்தார். சேகர் மறுபடியும் கண் விழித்தபோது தாம் சமதரையில் உட்கார்ந்திருப்பதையும், நெருப்பணைக்கும் படையினர் தங்கள் கையிலுள்ள குழாய்களின் மூலம் நீரைக் கட்டடத்தின் மீது பாய்ச்சிக் கொண்டிருப்பதையும் கண்டார்.

சேகர் தரையிலிருந்து எழுந்திருந்தார். சுற்றும் முற்றும் பார்த்தார். தூரத்திலே தெரிந்த நிலவறை மூடியின் மரக் கதவு மெள்ள மெள்ள உயர்ந்தது. அடுத்த விநாடி பலகை ஒரு பக்கமாக நகர்ந்து விழ, அதனுள்ளிருந்து ஒரு தலை மெதுவாக எட்டிப் பார்த்தது. உடனே இரண்டு போலீஸ்காரர்கள் நிலவறைக்குள்ளிருந்து எட்டிப் பார்த்த அந்த உருவத்தை ஓடிப் போய்ப் பிடித்து வெளியே தூக்கினார்கள். அந்த உருவத்தைக் கண்ட சேகரின் முகம் ஆச்சரியத்தினால் மலர்ந்தது. (தொடரும்)

சென்ற இதழ் கணக்குக்கு விடை :- குடியானவனுக்கு மூன்றாவது தடவையாக இரட்டிப்பானது குளத்துக்காரனுக்குக் கொடுத்தது ரூ 1.20. ஆகவே மூன்றாவது தடவை வைத்தது 60 காசு. 2வது தடவை குளத்தானுக்குக் கொடுத்தது 1.20 ஆக 2வது தடவை இரட்டிப்பான தொகை 1.20+60=1.80 அப்படியானால் 2வது தடவை இரட்டிப்பதற்கு முன் 90 காசு இருந்திருக்க வேண்டும். இது முதல் தடவை குளத்தானுக்குக் கொடுத்தது போக மீதி. ஆகவே 1.20+90=2.10 இந்த 2.10 முதல் தடவை இரட்டிப்பானது. ஆனால் யானையின் வாரிசின் கைக்கு முன்பு குடியானவனிடம் இருந்தது ரூபாய் 1.05.


என் மனைவி மிகுந்த
அவாவுடன் உண்ணும்
சிற்றுண்டிகளைச்
செய்கிறாள் !
Tushar
துஷார்
வைடமின் நிறைந்த வனஸ்பதி
துஷார் வனஸ்பதி சமையலுக்கு ஏற்ற சாதனம் மட்டுமல்ல. இதில் ஏ. டி. வைடமின் சத்துக்கள் நிறைந்து, சமையலின் ருசியையும் வாசனையை ஊட்டமளிக்கும் சக்தியையும் அதிகரிக்கச் செய்கின்றன
துங்கபத்ரா இண்டஸ்ட்ரீஸ் லிட், கர்நூல்

பாஸ்கெட்பால் வீரர்கள்



"ஏன்டா! பனைமரம் மாதிரி வளர்ந்திருக்கே, உன்னாலே என்ன பிரயோசனம்?" என்று படிக்காத தம் பிள்ளையைக் கோபித்துக் கொண்டார் தகப்பனார்.

"அப்பா! அப்படிச் சொல்லாதீர்கள்" என்று கூறி நாலைந்து வெள்ளிக் கோப்பைகளை அவர் முன்னால் கொண்டு வந்து வைத்தான் பையன். "இப்படிப் பனைமரம் மாதிரி உயர்ந்திருக்கிறதினாலேதான் பாஸ்கெட்பால் விளையாட்டில் எனக்கு வெற்றி கிடைத்து இத்தனை வெள்ளிக் கோப்பைகளும் பரிசாகக் கிடைத்தன!" என்றான் பையன். தகப்பனாரின் கோபம் இருந்த இடம் தெரியாமல் மறைந்தது. பையனைப் பெருமையுடன் தட்டிக் கொடுத்தார் தகப்பனார்.

பாஸ்கெட்பால் விளையாட்டுக்கு நல்ல உயரமும், பந்தெறியும் வன்மையும், ஓட்டத் திறமையும் அவசியம் தேவை. இவை யெல்லாம் பூரணமாகப் பெற்றவர் திரு ரத்னாகர் ஆல்வா. அவரது ஆட்டத் திறமையும், அவரது கோஷ்டியிலுள்ள திரு ராஜேந்திரன், திரு சுவாமிநாதன், திரு கணேச ராஜா, திரு பாபு பிரசாத் ஆகியவர்களின் விளையாட்டுத் திறமையுமே சென்னை விளையாட்டுக் குழுவினருக்கு இரண்டாவது அகில இந்திய ஒய். எம். ஸி. ஏ. பாஸ்கெட்பால் விளையாட்டுப் போட்டியில் வெற்றி தேடித் தந்தன.

பாஸ்கெட்பால் முதலில் அமெரிக்காவில் ஸ்பிரிங்பீல்ட் ஒய். எம். ஸி. ஏ. கல்லூரி ஆசிரியர் ஜேம்ஸ் நெய்ஸ்மித்தால் மாணவர் குளிர்காலங்களில் விளையாடுவதற்காகக் கண்டு பிடிக்கப்பட்ட விளையாட்டு. இன்று அகில உலகமும் இந்த விளையாட்டு பரவி, விளையாட்டுக் கலைஞர்களின் உள்ளங்களைப் பெரிதும் கவர்ந்துள்ளது.

சென்னை சைதாப்பேட்டை ஒய்.எம்.ஸி.ஏ. விளையாட்டு மைதானத்தில் அக்டோபர் 1-ந் தேதியிலிருந்து 4-ந் தேதிவரை நடந்த பாஸ்கெட்பால் விளையாட்டுப் போட்டியில் கல்கத்தா, இலங்கை, பம்பாய், சிக்கந்திராபாத், ஹைதராபாத், நாகர்கோயில் முதலிய இடங்களிலிருந்து வந்த ஒய். எம். ஸி. ஏ. விளையாட்டுக் குழுவினர்கள் கலந்து கொண்டனர். இறுதி விளையாட்டில் சென்னை ஒய்.எம்.ஸி.ஏ. குழுவினரும், சிக்கந்திராபாத் ஒய்.எம்.ஸி.ஏ. கோஷ்டியினரும் போட்டியிட்டனர்.

சென்னை கோஷ்டியினர் விறுவிறுவென்று வளையத்தில் பந்தை லாகவமாகப் போட்டு, நிறைய எண்ணிக்கைகள் எடுத்தனர். எதிர்க் கட்சியினர் பந்துடன் முன்னேற விடாமல் தடுத்துத் தங்கள் வெற்றியை நிலைநிறுத்தினர்.

சென்னைக் கோஷ்டிக்குத் தலைமை வகித்த திரு ரத்னாகர் ஆல்வா மங்களூரில் 5-11-1932ம் வருஷம் பிறந்தவர். சென்னை சட்டக் கல்லூரியில் பயின்று பட்டதாரியாகி, வக்கீல் தொழிலில் அவர் பயிற்சி பெற்று வருகிறார். இந்தியாவிலேயே தலை சிறந்த பாஸ்கெட்பால் விளையாட்டுக்காரர்களில் அவருக்கு ஐந்தாவது ஸ்தானம் கிடைத்திருக்கிறது. தற்பொழுது தூரகிழக்கு நாடுகளில் விளையாடுவதற்காகச் செல்லும் பாஸ்கெட்பால் விளையாட்டுக் குழுவினரில் திரு ரத்னாகர் ஆல்வாவும் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்.

சென்னை விளையாட்டுக் குழுவில் ஆடிய திரு கணேசராஜாவும், பாபு பிரசாத்தும் சட்டக் கல்லூரியில் பயின்று வருகிறார்கள். திரு ராஜேந்திரன் சென்னை வைத்தியக் கல்லூரியில் மாணவர். 'பாஸ்கெட்பால் விளையாட்டுக்கு உயரம் தேவையில்லை. ஆட்டத் திறமை யிருந்தாலே வெற்றி கிட்டும்' என்பதை நிரூபித்துக் காட்டியவர் திரு ராஜேந்திரன். விளையாட்டு மைதானத்தில் துருதுருவென்றிருப்பதையும், எதிரியைப் பந்துடன் ஏமாற்றிச் சென்று அபாரமாக வளையத்துக்குள் பந்தை விழச் செய்யும் அற்புதத்தையும் கண்டு அவருக்கு வெள்ளிக் கோப்பை வழங்கினர்.

சென்னை ராஜ்யம் பாஸ்கெட்பால் விளையாட்டில் முன்னேறி வருகிறது என்பது ஒய். எம். ஸி. ஏ. விளையாட்டுப் போட்டியின் வெற்றியிலிருந்து நிதர்சனமாகத் தெரிந்தது.

—குண்டுமணி



உட்கார்ந்திருப்பவர்கள்: ராஜேந்திரன், ஜான், மயனல், சுவாமிநாதன்.
நிற்பவர்கள்: பார்த்தசாரதி, கணேசராஜா, ஆர். ஆல்வா (காப்டன்), பத்மநாபன் (மானேஜர்), பாபுபிரசாத், ஜாகப்.



பின்னியின் காட்ஸ்வால்

உங்கள் சருமத்திற்கு சமசீதோஷ்ண நிலையளிக்கும் அதிசயத் துணி!

"கண்மணிகளே, நீங்கள் மென்மையும் அழகும் கலந்த
காட்ஸ்வால் அணிந்திருப்பதால்
எவ்வளவு அழகாயிருக்கிறீர்கள்!"





காட்ஸ்வால் விசேஷ மதிப்புடையது!

அது உயர்ந்த ரகக் கம்பளியும் பருத்தியும் கலந்து அதி ஜாக்கிரதையுடன் விஞ்ஞான முறையில் தயாரிக்கப்பட்டது.

நீடித்து உழைப்பதுடன் என்றும் மென்மையாக இருக்கிறது.

அது எல்லா குழந்தைகளுக்கும் ஏற்றது. மிக்க மென்மையான சருமத்தைக்கூட உறுத்தாது.


சீதோஷ்ண நிலையில் ஏற்படும் திடீர் மாறுதல்களிலிருந்து பாதுகாக்கிறது.

அது எப்போதும் பார்க்க நேர்த்தியாக இருக்கும். எந்த பருவகாலத்துக்கும் ஏற்றது.

காட்ஸ்வால் சுருங்காதென உத்தரவாதம். காட்ஸ்வால் துணியை வீட்டிலேயே சலவை செய்யலாம்.

பலவித கலர்களிலும் டிசைன்களிலும் கிடைப்பதால் உங்களுக்கு வேண்டிய ரகத்தைத் தேர்ந்தெடுக்கலாம்.

காட்ஸ்வாலுக்கு ஈடு எதுவும் இல்லை! அதிகக் குளிரிலிருந்து பாதுகாக்க பின்னியின் அங்கோலாவை அணியுங்கள்.



உங்கள் அபிமானம் பெற்ற காட்ஸ்வால் விற்பனையாளரிடம் இலவச 'மாதிரி போல்டர்' கேளுங்கள்.

பங்களூர் உல்லன், காட்டன் & ஸில்க் மில்ஸ் லிட்.

மானேஜிங் ஏஜெண்டுகள்: பின்னி & கம்பெனி (மதராஸ்) லிட்.

ஸ்ரீ தியாகராஜ சங்கீத வித்யாலயா

20-10-58 விஜயதசமி தினத்தன்று - புது வகுப்பு ஆரம்பம்

சாஸ்திரிய முறையில் கர்நாடக சங்கீதத்தைப் பயிற்றுவிக்கும் முதன்மையான வித்யாலயம்

திறமையான பயிற்சி. குறைந்த சம்பளம். ஆதரவைக் கோருகிறோம்

விவரங்களுக்கு


கௌரவக் காரியதரிசி: ஸ்ரீ தியாகராஜ சபா (ரிஜிஸ்டர்டு)

141, மகாவீர் பில்டிங்

பந்தர்க்கார் ரோடு :: மாதுங்கா :: பம்பாய்-19

B. I. S. N. கம்பெனி லிமிடெட்

சென்னை - நாகப்பட்டினம் - பினாங்கு - சிங்கப்பூர்



S. S. ரஜுலா

மேற்படி கப்பல் கீழ்க்கண்ட தேதி வாக்கில் புறப்படும்

சென்னையிலிருந்து	நாகப்பட்டினத்திலிருந்து
1958 அக்டோபர் 27	**1958 அக்டோபர் 28**

பிரயாணத்திற்குரிய தஸ்தாவேஜுகளைக் காண்பித்து "பங்க்" வசதியுள்ள டிக்கட்டுகளையும் "பர்த்" வசதியற்ற டிக்கட்டுகளையும் ("சாப்பாட்டுடனோ" அல்லது "சாப்பாடின்றியோ") எங்கள் கம்பெனியின் ஏஜெண்டிடமிருந்து நேரடியாகப் பெற்றுக் கொள்ளலாம்.

பினாங், போர்ட் ஸ்வெட்டன்ஹாம், சிங்கப்பூர் முதலிய இடங்களுக்கு நேரடியாக ஏற்றிச் செல்லவும், சிங்கப்பூரில் கப்பல் மாற்றி பாங்காக்கிற்கு சரக்குகள் அனுப்பவும் ஏற்றுக் கொள்ளப்படும்.

பிரயாணிகள் மற்றும் சாமான்கள் ஏற்றுமதி விவரங்களுக்குத் தயவுசெய்து எழுதவும்

பின்னி & கோ., (மதராஸ்) லிமிடெட் 7, அரமனைக்காரத் தெரு, சென்னை-1	மதுரா கம்பெனி பிரைவேட் லிமிடெட் முதல் லைன் பீச் ரோடு, நாகப்பட்டினம்



குடும்பக் கதையை மக்கள் பெரிதும் விரும்பி வரவேற்கிறார்கள் என்ற விஷயம் எப்படியோ தமது படாதிபதிகளுக்குத் தெரிந்து விட்டது. இப்போதெல்லாம் குடும்ப நிகழ்ச்சிகளையெல்லாம் தேடிப் பிடித்துத் தொகுத்துப் படங்களில் புகுத்த முயன்று வருகிறார்கள்.

சமீபத்தில் நான் பார்த்த ஒரு படத்தில் (குடும்பப் படம்தான்!) கதாநாயகன் குமிட்டி அடுப்பில் வெந்நீர் தயாரிக்க முயன்று காலில் அதைக் கொட்டிக்கொண்டு கதறுகிறான். பிறகு தோசைக்கு மாவு அரைக்கிறான்.

இன்னும் சில படங்களில், சமையலறை, சாப்பிடும் கூடம் முதலியவைகளெல்லாம் அடிக்கடி காட்டப்பட்டிருக்கின்றன. குடும்பம் என்றால் சமையலும், சாப்பாடும் மாத்திரம் அல்ல. எல்லோரும் அறிந்து கொள்ள வேண்டிய குடும்பப் பண்புகள் எவ்வளவோ இருக்கின்றன. அவைகளையெல்லாம் கதாபாத்திரங்களின் வாயிலாக நல்ல முறையில் பரப்ப வேண்டும். குடும்ப வாழ்வைக் குறையில்லாமல் நடத்துவதற்கு வேண்டிய வழிகளையெல்லாம் படத்தில் அழகாகக் காட்டலாம். ஆனால் படாதிபதிகள் மனம் வைத்தாலன்றி இந்த அபிவிருத்திகளை எதிர்பார்க்கமுடியாது.

ராயல் பிலிம்ஸின் தயாரிப்பான "நீலாவுக்கு நெறஞ்ச மனசு" என்ற படம் குடும்பப் பிரமுகர்களைத் திருப்திப்படுத்துவதில் இன்னும் ஒரு படி மேலே போய் விட்டது. அதாவது 'நிறைந்த' என்னும் வார்த்தையைக்கூட, குடும்பத்தினர் பாணியை அநுசரித்து 'நெறஞ்ச' என்று மாற்றியிருக்கிறார்கள். இந்த மாதிரி கொச்சை பாஷையாக மாற்றிக் கொண்டே போனால், தமிழ் மொழிக்கே இழுக்கு ஏற்பட்டுவிடும்.

இந்தப் படத்தில் வி. கே. ராமசாமி குடும்பத் தலைவன் முத்துக்குமாரசாமியாக, நாலு பெண்களுக்குத் தந்தையாக நடிக்கிறார். மிகவும் இயல்பாக நடித்துப் படத்துக்கு உயிர் கொடுக்கிறார்.

நிறைந்த மனமுள்ள நீலாவாக நடிக்கும் பண்டரிபாய், பள்ளிக்கூடச் சம்பளம் கட்ட முடியாமல் தவிக்கும் ஏழைப்பெண் சரசுவுக்கு அடிக்கடி பண உதவி செய்து தம் நிறைந்த மனத்தை நிரூபணம் செய்கிறார். தம் சகோதரி கலா, மாலா, பாலா முதலிய மூவருக்கும் விவாகம் செய்துவிட வேண்டும் என்று துடித்ததையும், அடிக்கடி தங்கைமார்களையும் தகப்பனாரையும் சாப்பாட்டுக்கு அழைத்துப் பரிமாறியதையும் தவிர நீலாவின் நிறைந்த மனத்தைக் காட்டுவதற்குப் படத்தில் வேறொன்றும் இல்லை.

மாலா, பள்ளி உபாத்தியாயினி; பாலா சங்கீதத்திலும் நடனத்திலும் தேர்ந்து நடன உபாத்தியாயினியாகப் பணி புரிகிறாள். கலா 'டைப்ரைட்டிங்' பயிலுகிறாள்.

கிரிக்கெட் மட்டையுடன் மாடிக் கைப்பிடிச்சுவரில் ஏறிக் குதிக்கும் மைனர் ஒருவனுக்கும் கலாவுக்கும் இடையே சந்திப்பு வளர்கிறது. பாலாவிடம் சங்கீதம் பயிலும் 'அசட்டு'ப் பரமசிவத்தை, பாலா அடிக்கடி சந்திக்க நேருகிறது. பள்ளி உபாத்தியாயினி மாலாவுக்கும், சந்தர்ப்ப வசத்தினால் முடிச்சுமாறித் திருடனாக மாறிவிட்ட மணிக்கும் அடிக்கடி சந்திப்பு வளர்கிறது.

திரைக்கதையில் பிடிப்பு எதுவும் இல்லாமல் அதுபாட்டுக்குச் சென்று கொண்டிருக்கிறது.

பாலுக்குச் சர்க்கரை, பாட்டுக்குச் சுருதி, வீட்டுக்கு விளக்கு—அதுபோலப் படத்துக்கு வில்லன் இன்றியமையாத அம்சம்!

இந்தப் படத்தின் வில்லன் மோகன்-முத்துக் குமாரசாமி மானேஜர் வேலை பார்க்கும் நகைக் கடையின் முதலாளி; மாலாவைத் தெருவில் அடிக்கடி சந்தித்து வந்தவன். மாலாவின் மேல் இவன் கொண்ட ஆசை நிறைவேறாத காரணத்தால் முத்துக்குமாரசாமிக்கு வேலை போகிறது; நீலாவுக்கு மண்டையில் அடிபடுகிறது; சரசுவின் அண்ணாவுக்குக் கண் பார்வை போகிறது; மோகன் சிறைச்சாலைக்குப் போகிறான். இதைத் தவிர இவனுக்குப் படத்தில் வேறு ஒரு வேலையும் இல்லை. வில்லன் ஒரு படத்தில் இருந்து தீர வேண்டும் என்பதற்காக அந்தப் பாத்திரத்தைச் சேர்த்து அதை வீரப்பாவிடம் ஒப்படைத்திருக்கிறார்கள்! அன்போ, ஆத்திரமோ, சோகமோ, காதலோ எதுவுமே இந்தப் படத்தில் அழுத்தமாக யாரையும் பிடித்துக் கொள்ளவில்லை. ஆனால், படம் முழுவதும் சம்பாஷணைகளில் நிறைய ஹாஸ்யம் கலந்து படத்துக்கு ரஸம் ஊட்டுகிறது. குழந்தையென்ற வேலைக்காரனாக வரும் பி. டி. சம்பந்தம் மிகவும் திறமையோடு நடித்து ஹாஸ்ய விருந்தளிக்கிறார்.

மாலாவாக எம். என். ராஜம் வருகிறார். இயல்பாகப் பேசி அழகாக நடிக்கிறார். உபாத்

நியாயினியாக இருந்து பள்ளிக்கூடத்தில் வகுப்பை நடத்தும்போது அவர் நடிப்பு மிகவும் நன்றாயிருக்கிறது.

ராகினி பாலாவாக நடித்திருப்பதுடன், நடனமும் அழகாக ஆடியிருக்கிறார். நவரஸங்களுக்கும் அற்புதமாக அபிநயம் பிடித்திருக்கிறார். நடன நிகழ்ச்சியில் பாடப்படும் ''கண்ணைக் கவரும் கலை—பரதக் கலை—இதைக் கண்டாலே மறந்தோடும் மனக் கவலை'' என்னும் பாட்டும் நன்றாயிருக்கிறது. மருதகாசி இயற்றிய அந்தப் பாட்டைச் சூலமங்கலம் ராஜலக்ஷ்மி நன்றாகப் பாடியிருக்கிறார். இந்த ஒரு பாட்டைத் தவிர மற்றப் பாட்டுக்களையெல்லாம் ரஸிக்க முடியவில்லை. நல்ல வேளையாக இந்தப் படத்தில் ஆறு பாட்டுக்கள் தான் இருக்கின்றன!

கலாவாக நடிப்பவர் டி. பி. முத்துலட்சுமி. கிரிக்கெட் மைனராக நடிக்கும் ஹாஸ்ய நடிகர் தங்கவேலுவுடன் ஜோடி சேர்ப்பதற்காக அவரைப் போட்டிருக்கிறார்கள் போலும்! படத்துடன் சேராத துண்டு ஹாஸ்யங்களிலேயே நடித்து வரும் முத்துலட்சுமியைக் கதாபாத்திரங்களோடு கலந்தது அவ்வளவு பொருத்தமாயில்லை. ஒன்றிலும் விருப்பமில்லாத ஒரு சோம்பேறி மாதிரி அவரை உருவகப்படுத்திவிட்டுப் பிறகு, பாலாவும் மாலாவும் பாடும்போது மிருதங்கம் வாசிப்பதாகக் காட்டியிருப்பதும் சரியல்ல

பாட்டு கற்க விரும்பும் அசட்டுப் பரமசிவமாக வரும் டி. ஆர். ராமச்சந்திரனின் நடிப்பில் விசேஷமாகக் கூறுவதற்கு ஒன்றும் இல்லை. ஆனால் அந்தப் 'பித்துக்குளி'யை மணக்கப் பாலா இசைந்து விட்டதாகக் காட்டுவது பொருத்தமாயில்லை. அக்காளிடம் அன்பு எவ்வளவு இருந்தாலும், நாகரிகம் முதிர்ந்த ஒரு பெண், அவள் சொன்னாள் என்பதற்காக ஒரு சர்வ அசட்டுக்கு மாலையிட மனந்துணிய மாட்டாள்!

சந்தர்ப்ப வசத்தால் மூடிச்கமாறியாகி விட்ட அநாதை மணியை மாலா மணக்க இசைவதும் விநோதமாகத்தான் இருக்கிறது!


கிரிக்கெட் சாம்பியனாக வரும் தங்கவேலு ஆங்கில நடனம் ஒன்று ஆடுகிறார்; மிகவும் திறமையாக ஆடுகிறார்.

சரகவின் அண்ணு மோகனிடம் அடிபட்டுக் கண் பார்வை இழந்ததும் ஒரு காரியத்துக்கு நல்லதாயிற்று. நிறைந்த மனமுள்ள நீலாவின் கரம் பற்றும் பாக்கியம் கண் பார்வை மட்டும் இருந்திருந்தால் கிடைத்திருக்காது! அந்தப் பாத்திரமாக நடிக்கும் ஸ்ரீராம் மைனர் மாதிரி ஜோரான மேக்கப்புடன் வருகிறார்! ஆனால் அவர் உடைகளில் போட்டிருக்கும் ஒட்டுக்கள் ஏழை யென்பதை எடுத்துக் கூற முயல்கின்றன!

இந்தப் படத்தின் கதை, வசனம் எழுதியவர் ஏ. பி. நாகராஜன். படத்தை டைரக்ட் செய்தவர் கே. சோமு.

ஹெலன் கைகளையும் கால்களையும் ஆட்டிக் கொண்டு குதிப்பதை நடனத்தில் சேர்த்து, போதாக்குறைக்கு அதை 'கேவா கலர்'ல் வேறு படமாக்கியிருப்பது இந்தப் படத்தில் ஒரு வேதனைக் காட்சியாயிருக்கிறது. யாருமே அதற்காக வருந்த வேண்டியதுதான்.

ஸ்டாக் கார்
என்ட்யூரன்ஸ் ரிகார்டுகள்





இந்த டயர் <u>அபாயமின்றி</u> செல்லக் கூடியதென நிரூபித்துள்ளன

அமெரிக்காவின் அற்புதமான ஸ்டாக் கார் என்ட்யூரன்ஸ் ரிகார்டு - சராசரி மணிக்கு 108 மைல்கள் வீதம் 50,000 மைல்கள் செல்லுதல், ஒரு டயர் கூட சேதமடையாமல் பயர்ஸ்டோன் டயர்கள் உபயோகித்து ஏற்பட்டுள்ளது. அந்த டயர்களை இணையற்ற உறுதியுடன் வைப்பதற்கேற்ற அதே உற்பத்தித் திறனும், உன்னத தரக் கண்காணிப்புமே, உங்கள் காரில் பொருத்தப்பட்டுள்ள பயர்ஸ்டோன் டயர்களின் நிச்சயமான பாதுகாப்புத் தன்மைக்கும், நம்பகத் தன்மைக்கும் உத்திரவாதம் அளிக்கின்றன.

Firestone

பயர்ஸ்டோன்

நியூ டிலெக்ஸ் சாம்பியன் - டியூப்லெஸ் அல்லது டியூபுள்ளது

மன நிம்மதியுடன் பிரயாணம் செய்வதற்கென்றே தயாரித்த டயர்

வாழ்க்கைப் பெருநிலவு

இருபத்துநான்காம் அத்தியாயம்

மணிசேகரனின் சபதம்

உதகமண்டலத்தில் மல்லிகா சேகருடன் படகில் வார்த்தைகளால் போராடிக் கொண்டிருந்த போது சென்னையில் பொன்னம்மாள் தன் மகன் நடராஜனைப் பற்றிய நினைவுகளால் உண்டான உள்ளப் போராட்டத்தை மணிசேகரனுடன் விவாதித்துக் கொண்டிருந்தாள்.

நடராஜன் தன் அறைக்கு வந்து விமலாவை மல்லிகாவிடம் செல்லுமாறு தூண்டி விட்டதாகக் குற்றம் சாட்டிக் கோபித்துக் கொண்டு இரைந்த பிறகு மணி அவன் வீட்டுக்குப் போவதை நிறுத்தி வைத்திருந்தான். நடராஜனுடைய குணாதிசயங்கள் அவனுக்கு நன்கு தெரிந்திருந்தன. அவனிடம்தான் சந்தேகப்பிராணி குடிகொண் டிருந்தாலும் அந்தப் பிராணிக்குத் தான் இரையாக வேண்டாம் என்பதால் தான் உண்டு தன் வேலை உண்டு என்று இருந்து வந்தான்.

ஆனால் இரண்டு வாரங்களுக்கு மேல் அவனால் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை. விமலாவின் நல்வாழ்வில் அவன் கொண்டிருந்த அக்கறை அவனை உந்தித் தள்ளியது.

அவன் போனபோது தாழ்வாரத்தில் பொன்னம்மாளும் விமலாவுமாகப் பூ தொடுத்துக் கொண் டிருந்தார்கள். பொன்னம்மாள் இரண்டு இரண்டு அரும்புகளாக அடுக்கி வைக்க, விமலா அவற்றை எடுத்து நாரில் தொடுத்துக் கொண்டிருந்தாள்.

"இத்தனை வேகம் எங்கேயிருந்துதான் வருகிறதோ உன்விரல்களுக்கு? அடுக்குவதற்கு முன்னால் தொடுத்து விடுகிறாயே?" என்று கேட்ட பொன்னம்மாள் மணி வருவதைப் பார்த்து விட்டு, "வாடா, அப்பா மணி! ஏது அத்தி பூத்தாற் போல் உன்னைக் காண்பதே அபூர்வமாக இருக்கிறதே?" என்றாள்.

மாமியின் உண்மையான வருத்தம் மணிசேகரனுக்குப் புரிந்தது. ஆனால் மணி அடிக்கடி வராமல் இருந்தது மாமிக்குப் புரியவேயில்லை.

"ரொம்ப வேலையாக இருந்து விட்டேன், மாமி! ஓய்வே கிடையாது."

"என்ன வேலையாக இருந்தால் என்ன? மாமியைத் தினம் ஐந்து நிமிஷமாவது பார்த்து விசாரித்து விட்டுப் போக வேண்டாமா?" என்று வாத்சல்யத்துடன் கேட்டாள் பொன்னம்மாள்.

"இனிமேல் தினமும் வருகிறேன்."

"விமலா! பூ தொடுத்தது போதும், பாக்கி அரும்புகளை சுவாமிக்குப் போட்டு விட்டு, மணிக்குக் காப்பி கொண்டு வா" என்றாள் பொன்னம்மாள்.

தனிமையில் மாமி மணியுடன் பேச விரும்புகிறாள் என்பதை விமலா புரிந்து கொண்டாள். இல்லாவிட்டால் பூவை முழுவதும் தொடுக்காமல் விட மனம் வராது மாமிக்கு. சுவாமிக்குக்கூட மாலையாகப் போடுவதுதான் வழக்கம். உடனே எழுந்து உள்ளே போய் விட்டாள் விமலா.

அவள் போவதைப் பார்த்துக் கொண்டிருந்த பொன்னம்மாள், "ஹூம், இந்தப் பெண்ணுக்கு எப்போது காலம் வரப் போகிறதோ?" என்று கேட்டுப் பெருமூச்செறிந்தாள்.

"எல்லாம் சீக்கிரமாக முடிந்துவிடும், மாமி! 'ஜாம் ஜா'மென்று கல்யாணம் கனஜோராக நடந்துவிடும் பாருங்கள்! விமலாவே அதைப் பற்றிக் கவலைப் படுவதாகக் காணோம். நீங்கள் ஏன் சிரமப்படுகிறீர்கள்?" என்று கேட்டு வைத்தான் அவன்.

"உனக்கு என்ன தெரியும்? அவள் ரொம்பக் கெட்டிக்காரப் பெண். வெளியிலே காண்பித்துக் கொள்வதில்லை. ஆனால் மனத்தைச் செல்லாக அரித்துக் கொண்டிருக்கிறது. திருமணமாகாத துயரம். நான் சொல்கிறேன். தெரிந்து கொள்" என்றாள் பொன்னம்மாள்.

"துயரப்படுவானேன்? மாப்பிள்ளை பக்கத்திலேயே இருக்கிறான். நடத்தி வைக்க நாமெல்லோரும் இருக்கிறோம்."

"மணி!" என்று சற்றுக் கடுமையாக அழைத்தாள் பொன்னம்மாள். "எனக்கு ஆறுதல் சொல்வதாக நினைத்துப் பேசுகிறாயா? அல்லது மாமியை ஒன்றும் அறியாத அசடு என்று நினைத்துக் கொண்டிருக்கிறாயா? இல்லை, உனக்குத் தான் ஒன்றும் தெரியவில்லையா?

"மணி! இந்த வீட்டில் நான் மனம் விட்டுப் பேசக்கூடியவர்கள் உன்னைத் தவிர வேறு ஒருவருமே இல்லை. இருந்த ஒரே ஒருவரும் குடும்பத்தைப் பற்றிய எல்லாப் பாரத்தையும் என் தலையின் மேல் சுமத்தி விட்டுப் போய்விட்டார்."

''மாமி!'' என்று ஏதோ ஆதரவாகச் சொல்ல ஆரம்பித்தான் மணிசேகரன்.

''சற்று நான் சொல்வதைக் கேள், மணி! நான் கண் கலங்கவில்லை. விமலாவிடமோ அவள் தாயாரிடமோ என்னுடைய குறைகளைப் பற்றிச் சொல்லிக் கொள்ள முடியாது. என் குறைகளில் முக்கியமானது நடராஜனைப் பற்றித்தான். மகனைப் பற்றி அவனுடைய மனைவியாகப் போகிறவளிடம் என்ன பேச முடியும்? அல்லது சம்பந்தியிடம் குற்றம் கூற முடியுமா?

'' நடராஜனும் அப்படியே வளர்ந்து விட்டான், ஆதரவாக என்னிடம் பேசவோ குடும்பக்காரியங்களில் அக்கறை காட்டவோ அவனுக்குத் தெரியாது. அவனிடம் எதிர்பார்க்கவும் முடியாது. அதிகமான படிப்பும் அறிவும்தான் அதற்குக் காரணம். அவனுடைய முழுக் கவனத்தையும் வைத்தியத் தொழில் கவர்ந்து விடுகிறது. அதனால் தான் கேட்கிறேன், நீயாவது சிறிது நேரம் வந்து பேசிக் கொண்டிருக்கக் கூடாதா என்று

''பேசுவது என்றால் சற்று முன்னால் சொன்னாயே 'ஜாம் ஜாம் என்று கல்யாணம் நடந்து விடும்' என்று, அந்தமாதிரியான விளையாட்டுப் பேச்சு இல்லை. உண்மைகளை மறைக்காமல் தைரியமாகப் பார்த்துப் பேச வேண்டும். அதுதான் எனக்கு ஆறுதலளிக்கும் மணி.''

தலையாட்டிப் பொம்மை போல மாமி கூறிய எல்லாவற்றுக்கும் தலையசைத்து வைத்தான் மணிசேகரன்

மாமியுடைய ஆழமான உள்ளத்தில் பாதி தூரம் இறங்கிப் பார்த்தாகி விட்டது. அங்கே அவன் கண்டறிந்த விஷயங்கள் இன்னும் கடைசி வரையில் இறங்கிப் பார்க்கத் தூண்டின.

''இந்தக் கல்யாணம் நிஜமாகவே நடக்கும் என்று நம்புகிறாயா?'' என்று ஒரு கேள்வியைத் தூக்கிப் போட்டாள் பொன்னம்மாள்.

மணியின் இருதயம் ஒரு துடிப்பை விட்டு விட்டு அடுத்த துடிப்புக்குத் தாவியது. சற்று



முன்னால் மாமியின் உபதேசங்களைக் கேட்காமல் இருந்திருந்தால், "அதற்கு என்ன மாமி! ஊரே பிரமிக்கும்படி பிரமாதமாக நடக்கும்" என்று சொல்லி யிருப்பான். இப்போது அப்படிச் சொன்னால் மாமி ரசிக்க மாட்டாள். சிறிது யோசிப்பது போல் பாவனை செய்தால் மாமிக்குக் கொஞ்சத்துக்குக் கொஞ்சமாவது திருப்தியாக இருக்கும்.

"கல்யாணம் நடக்காமல் இருக்க எனக்கு ஒரு காரணமும் தெரியவில்லையே, மாமி!" என்றான்.

"நீ சொல்வது போல் 'ஜாம் ஜாம்' என்று நடக்க வேண்டுமென்பதுதான் என்னுடைய பிரார்த்தனை. கல்யாணம் நல்லபடியாக நடக்கவேண்டுமென்று ஏழுமலையானுக்கும் பிரார்த்தனை செய்து கொண்டிருக்கிறேன். ஆனால் அப்படியெல்லாம் சுலபமாக நடந்து விடுவதற்கான சூசகங்களைக் காணோமே? முன்பு ஒரு முறை தேதி நிச்சயமாயிற்று. நடராஜனுடைய அப்பா நம்மையெல்லாம் கதற விட்டு விட்டுப் போய் விட்டார். கல்யாணமும் நின்று விட்டது. மறுபடியும் தேதி நிச்சயம் செய்தேன். நடராஜன் 'ஹா ஹூ' என்று கத்தினான். எதற்கு என்று தெரியவில்லை. மறுபடியும் இதைப்பற்றிப் பேச்செடுக்கவே பயமாக இருக்கிறது. உனக்கு ஏதாவது தெரியுமா?"

"தெரியவில்லையே, மாமி!" என்றான் மணி மிகவும் சிரமப்பட்டு முகத்தைத் தெளிவாக வைத்துக் கொண்டு.

"விமலாவை அவன் வெறுக்கக் காரணமில்லை. ஆனால் அவன் மனம் யாரையோ அல்லது எதையோ நினைத்துத் தடுமாறுகிறது என்று நினைக்கிறேன். எனக்கும் நிச்சயமாகத் தெரியவில்லையே!"



'நிச்சயமாகத் தெரிந்தாலும் சொல்ல மாட்டீர்கள்' என்று தனக்குள் நினைத்துக் கொண்டான் மணி. குக்கிராமத்தில் குடிசையில் வசிக்கும் குடியானவனை நியூயார்க் நகரத்தில் இடுதிப்பென்று கொண்டுவிட்டதுபோல் மணி மாமியின் திறந்த மனத்தைப் பார்த்துப் பிரமித்துக் கொண்டிருந்தான். எவ்வளவு விஷயங்களைத் தெரிந்து வைத்துக் கொண்டு அமைதியாக இருக்கிறார்?

மாமி தொடர்ந்தாள் :

"எனக்குச் சந்தேகமாகத்தான் இருக்கிறது. இந்தக் கல்யாணம் நடக்குமா என்று. அதனால்தான் இத்தனை நாட்களாகத் தயங்கித் தயங்கி இன்று உன்னிடம் இந்தப் பேச்சை ஆரம்பித்தேன். நான் சொன்னபடி கேட்பாயா?"

"நீங்கள் ஏதாவது சொல்லி நான் கேட்காமல் இருந்திருக்கிறேனா, மாமி?"

"அப்படியானால் விமலாவை நீ கல்யாணம் செய்து கொள்!"

"என்ன சொன்னீர்கள்?" என்று கேட்டுக் கொண்டே எழுந்தான் மணி.

"சரி என்றுசொல்லு, மணி!" என்றாள் பொன்னம்மாள் நிதானமாக.

"முடியவே முடியாது, மாமி!"

"ஏன் முடியாது! எதற்கு என்னிடம் மறைக்கிறாய்? நீ சென்னைக்குத் திரும்பிய சில நாட்களில் விமலா 'திரும்பிப் போய் விடு!' என்று உன்னிடம் இரைய வில்லையா? அதற்குக் காரணம் அப்போது புரியவில்லை. நாட்களாக ஆக; யோசிக்க யோசிக்கத் தெரிந்து கொண்டேன். விமலாவைக் கண்டு நீ காதல் கொள்ள வில்லையா? அதைப் பற்றி அவளிடம் ஏதோ பேசப் போகத்தான் அப்படிக் கத்தினாள். இப்போது பெரிய தியாகியாக உன்னைப் பற்றி எண்ணிக் கொண்டிருக்கிறாய். விமலா, நடராஜன் இவர்களுடைய நல்வாழ்வுக்காக உன் காதலைத் தியாகம் செய்து விட்டதாக மனத்துக்குள் பெருமைப் படுகிறாய். ஆனால் உண்மையில் நீ தியாகம் செய்யவில்லை, மணி! விமலாவுக்குப் பெரிய தீங்கைத்தான் இழைத்திருக்கிறாய்!"

"மாமி! அப்படிச் சொல்லாதீர்கள். விமலாவுக்குக் கனவில்கூட நான் தீங்கு நினைக்கமாட்டேன். முன்பு எப்போதோ நான் அசட்டுத்தனமாக அவளிடம் நடந்து கொண்டதை அடியோடு மறந்து விட்டேன் நான். நீங்களும் தயவுசெய்து மறந்து விடுங்கள். அவள் நடராஜனைக் காதலிக்கிறாள் மாமி! அந்தக் காதல் கோலாகலத் திருமணத்தில் நிறைவு பெறப் போகிறது!"

"உண்மைதான், மணி! காதல் நிறைவு பெற நடராஜனைத்தான் அவள் மணக்க வேண்டும் என்பது எனக்குத் தெரியும். ஆனால் காதல் நிறைவு பெறாவிட்டால், நடராஜன் அவளை மணக்க மறுத்து விட்டால் அவள் உயிர் துறந்து விட முடியுமா? ஒருவருக்காக ஒருவர் காதலைத் தியாகம் செய்வதும், காதல் நிறைவேறா விட்டால் உயிரை மாய்த்துக் கொள்வதும் நாவல்களில் படிக்கலாம். உண்மையில் அசல்வாழ்க்கையில் அப்படி நடக்க முடியுமா மணி? விமலாவை நடராஜன் கைவிட்டால், அவளை என்ன செய்வது? கல்யாணமாகாமலேயே வீட்டில் வைத்திருப்பதா? யாரிடமாவது கரம் பிடித்துக் கொடுத்துத்தான் ஆக வேண்டும். அப்படி அவளைக் கரம் பிடிப்பவன் காதலை அளித்தாலும் நிச்சயமாக அவளால் அதை ஏற்றுக் கொள்ள முடியாது. காதலை விமலாவிடமிருந்து அவன் எதிர்பார்க்கவும் முடியாது. ஆனால் அவள் நிலையைப் புரிந்து கொண்டவன் அவளுக்குத் தூய நட்பினால் மன அமைதியைக் கொடுக்க முடியும். அப்படி நீ செய்ய வேண்டும் என்றுதான் கேட்டுக் கொள்கிறேன். உலகத்துக்காகக் காதலில்லாத கல்யாணம் செய்துகொண்டு நட்பினால் ஆறுதல் அளிக்க வேண்டும். செய்வாயா?"



மணி பதில் பேச வில்லை. எவ்வளவு

பயங்கரமான எண்ணங்கள்? கோரமான பிரதிக்ஞை யல்லவா செய்யச் சொல்கிறீர் மாமி!

"ஆனல் ஒன்று மணி! நாளடைவில், அதாவது பல வருஷங்களுக்குப் பிறகு ஒன்று, இரண்டு அல்ல, பத்து இருபது அல்லது முப்பது வருஷங்களுக்குப் பிறகு ஒருவேளை நீங்கள் மூப்பை அடைந்த பிறகு, விமலா உன்னிடம் கொண்ட நட்பு காதலாகவும் மாறலாம். அதையும் நிச்சயமாகச் சொல்ல முடியாது. உன்னைத் தவிர வேறு யாரும் அவளுக்கு உகந்தாற் போல இத்தகைய சூழ்நிலையை ஏற்படுத்தித் தர முடியாது.

"விமலாவின் அப்பா இறந்து போன போது அவளுக்கு நடராஜனைக் கல்யாணம் செய்து வைக்க வேண்டும் என்று என் கணவரிடம் வாக்குக் கேட்டார். அவரும் விமலாவுக்குக் கல்யாணம் செய்து வைப்பதாக வாக்குக் கொடுத்தார். ஆனல் நடராஜனுக்குக் கொடுப்பதாகச் சொல்லவில்லை. ஏன் சொல்லவில்லை என்பது இப்போதுதான் புரிகிறது. கடவுளுடைய கிருபைதான் அப்படி வாக்குக் கொடுக்காமல் காப்பாற்றியது, மணி! அதை நிறைவேற்றி வைப்பது எவ்வளவு கடினமாக இருந்திருக்கும், யோசித்துப் பார்!

"விமலாவுக்குக் கல்யாணம் செய்து வைப்பது கடினமில்லை. யார் தலையிலாவது கட்டி விடலாம். ஆனல் அவளுடைய இல்வாழ்க்கை நரகமாகாமல் அவள் மனதுக்குகந்த கணவனைத் தேடுவதுதான் கஷ்டம். அந்தக் குறையை நீதான் நிவர்த்திக்க வேண்டும், மணி!"

"மாமி! நடராஜனுக்கும் விமலாவுக்கும் கல்யாணம் நடக்காது என்ற தீர்மானத்தோடேயே பேசுகிறீர்களே!"

"நடந்தால் விமலாவை விட நான் பாக்கியசாலி என்று மகிழ்வேன், மணி! என் கணவரைச் சந்திக்கப் போகும் போது அவர் கடமையை நான் பூர்த்தி செய்துவிட்டேன் என்ற தைரியத்தோடு கவலையில்லாமல் போய்ச் சேருவேன். ஆனல் நாம் போட்ட திட்டத்தின்படி அவர்கள் திருமணம் நடக்கா விட்டால் நான் சொன்னபடி நீ செய்கிறாயா என்பதுதான் கேள்வி."

"செய்கிறேன், மாமி!" என்ருன் மணி.

"நடராஜனுக்குக் கல்யாணம் ஆகும் வரை, நீ கல்யாணம் செய்து கொள்வதில்லை என்று சத்தியம் செய். விமலாவைத் தவிர வேறு யாரையாவது அவன் கல்யாணம் செய்து கொண்டால் விமலாவை நீ கல்யாணம் செய்து கொள்வதாக வாக்குக் கொடு. அதன் பிறகு நான் முன்பு சொன்னது போல் அவள் மனத்தில் தானகவே காதல் பரிணமிக்கும் வரை சிநேக பாவத்துடன் நடந்து கொள்வதாகச் சபதம் செய்" என்ருள் பொன்னம்மாள்.

"அப்படியே செய்கிறேன், மாமி! சத்தியம்!" என்று பயங்கரச் சபதம் செய்தான் மணிசேகரன்.

இருபத்தைந்தாம் அத்தியாயம்

ஆசைத் துளிகள்!

கதிர்வேலனைச் சுற்றியிருந்த அந்தகாரம் சிறிது சிறிதாக அகல ஆரம்பித்தது. அவன் கண்ணெதிரே மங்கிய ஒளி படரத் தொடங்கியது. ஈரமான தரையில் தான் படுத்திருப்பதை உணர்ந்தான். ஈரமாக இருந்ததோடு அது உடலுடன் கோந்தைப் போல் ஒட்டிக் கொள்ளவும் ஆரம்பித்தது.

மெல்லக் கண்களைத் திறந்து பார்த்தான். நிலவொளியில் அவனைச் சுற்றிலும் கரிய தார் ரோட்டில் ரத்தம் குளமாகத் தேங்கி யிருப்பது தெளிவாகத் தெரிந்தது. கதிர்வேலனுடைய கால்கள் இரண்டும் ஒரு முறை பயத்தினல் எழும்பி விழுந்தன.

இது வழக்கமாக நான் காணும் பிரமையா? சிவப்பு நிறத்தைக் கண்டாலே குருதிச் சிவப்பு நினைவுக்கு வந்து உடலை உலுக்குவது போல் இப்போதும் பயப்படுகிறேனா? இல்லை; உண்மையிலேயே என்னைச் சுற்றிலும் ரத்தந்தான் தேங்கி நிற்கிறதா?

படுத்தபடியே சிந்திக்க முயன்ருன் கதிர்வேலன். மூளைக்கு வேலை கொடுப்பது ரொம்பக் கஷ்டமாக இருந்தது. தன்னை நோக்கி ஒரு மோட்டார் கார் வேகமாக வந்தது. பல ஆண்டுகளுக்கு முன்னல் எப்போதோ நடந்த ஒரு சம்பவத்தைப் போல் மங்கலாக நினைவுத் திரையில் படர்ந்தது.

அதற்கு மேல் சிந்தனை செய்தால் மறுபடியும் இருள் வந்து கவிந்து விடுமோ என்று பயந்தான் கதிர்வேலன். எழுந்திருக்க முயன்ருன். முடியவில்லை. தன் பலம் அத்தனையும் உபயோகப்படுத்தி மீண்டும் எழுந்திருக்க முயன்ருன். தோள்கள் இரண்டும் 'விண் விண்' என்று தெறித்தன. வேதனையைப்

பெண்மணிகளுக்கு ஒரு சொல்!



ஐந்திலும் சரி, ஐம்பதிலும் சரி; உங்கள் கூந்தலை கருகருவென்றும், அடர்த்தியாகவும் வைத்துக் கொள்ளலாம். இள வயதில் வரும் வழுக்கையைத் தடுத்து கேசத்தைக் காப்பாற்ற, கேசவர்த்தினியை இன்றே உபயோகியுங்கள்!

கேசவர்த்தினி ஷாம்புவினால், தலையை மணமாகவும், சுத்தமாகவும், வைத்துக் கொள்ளுங்கள்.

★

எங்கள் இதர தயாரிப்பு:
அஞ்சன கணமை

கேசவர்த்தினி பிராடக்ட்ஸ்

கோயமுத்தூர்-1

நவராத்திரி, தீபாவளி
இவை ஆடை, ஆபரண பண்டிகைகள்தான்!

ஆடை என்றவுடன் "சாஸ்திரி கடை"யின் நாணயம் ஞாபகத்திற்கு வருவது சகஜம். மேலும் மேற்படி சரக்குகள் தற்பொழுது உற்பத்தியிட விலைக்கே விற்கப்படுகின்றன.

★

A. சம்பூர்ண சாஸ்திரியார் & சன்ஸ்

மொத்த & சில்லறை உயர்தர ஜவுளி வியாபாரிகள்

28, வடக்கு மாட வீதி, மயிலாப்பூர், மதராஸ்-4

போன்: 71719 ஸ்தாபிதம்: 1902 தந்தி: "சம்பூர்ணம்"

முக்கிய அறிவிப்பு: எங்கள் சரக்குகளைக் கீழ்க்கண்ட இடங்களிலும் ஆதாய விலைக்கு வாங்கலாம்.

டெல்லி: 4/76, கிருஷ்ண மார்க்கெட், கரோல் பாக், புது டெல்லி-5
கல்கத்தா: 23, Lansdowne Terrace, Ballyganj, CALCUTTA-26
ஜெ. ஷெட்பூர்: ஸ்ரீ D. V. V. சாஸ்திரி வீடு, "M" ரோடு

தீபாவளி சலுகை!


ஸ்விட்சர்லாந்திலிருந்து இறக்குமதியான இந்த ஆன்டிமாக்னெட்டிக் லீவர் கெடிகாரங்களை வாங்குங்கள். ஒவ்வொன்றும் ஐந்து வருஷ உத்தரவாதமுள்ளது.



இனும்! ஏதாவது ஒரு கெடிகார ஆர்டருக்கு ஒரு பேனு செட்டும் ஒரே பாக்கிங்கில் ஏதாவது இரண்டு கெடிகார ஆர்டருக்கு ஒரு பாக்கெட் கடிகாரமும் இனுமாகப் பெறுங்கள். பாக்கிங் & தபால் செலவு ரூ. 2 தனி

மேற்கண்ட சலுகை தீபாவளி வரையிலும்தான்

NO 501 SIZE 9¾
ANTIMAGNETIC



டஸ்ட் புரூப், ஷோக்டன் ஸென்டர்

க்ரோம் ஸ்டீல்பேக் ஜுவல்ட்	ரூ. 42
ரோ. கோ. ஸ்டீல்பேக் ஜுவல்ட்	ரூ. 43
க்ரோம் ஸ்டீல்பேக் 15 ஜுவல்ஸ்	ரூ. 62
ரோ. கோ. ஸ்டீல்பேக் 15 ஜுவல்ஸ்	ரூ. 63
க்ரோம் ஸ்டீல்பேக் 17 ஜுவல்ஸ்	ரூ. 69

NO. 502 SIZE 10½
WATERPROOF



ஆல்புரூப், ரேடியம் டயல்

க்ரோம் ஸ்டீல்பேக் ஜுவல்ட்	ரூ. 47
க்ரோம் ஸ்டீல்பேக் 15 ஜுவல்ஸ்	ரூ. 65
ரோ. கோ. ஸ்டீல்பேக் 15 ஜுவல்ஸ்	ரூ. 72
க்ரோம் ஸ்டீல்பேக் 17 ஜுவல்ஸ்	ரூ. 79
ரோ. கோ. ஸ்டீல்பேக் 17 ஜுவல்ஸ்	ரூ. 81
க்ரோம் ஸ்டீல்பேக் 21 ஜுவல்ஸ்	ரூ. 81

NO 503 SIZE 10½
CALENDAR
WATERPROOF




ஆல்புரூப், ரேடியம் டயல்

க்ரோம் ஸ்டீல்பேக் 15 ஜுவல்ஸ்	ரூ. 70
ரோ. கோ. ஸ்டீல்பேக் 15 ஜுவல்ஸ்	ரூ. 72
க்ரோம் ஸ்டீல்பேக் 17 ஜுவல்ஸ்	ரூ. 77
ரோ. கோ. ஸ்டீல்பேக் 17 ஜுவல்ஸ்	ரூ. 79
க்ரோம் வாட்டர் புரூப் இன்காபிளக் ஜுவல்ட்	ரூ. 50

TIME MASTER
(INDIA) (KM)
163, NARAYAN DHRU ST., BOMBAY - 3

HVB



அதிகமாக
உறுதியாக
அழகழகாக
எழுதக் கூடியது

டிஸ்ட்ரிபியூட்டர்கள்
ராஜேந்திரகுமார் & கோ
238, அப்துல் ரஹ்மான்
தெரு, பம்பாய் - 3.

RITESHARP Pens
GHORUPDEV, BOMBAY 10

நவராத்திரி, தீபாவளி

பண்டிகைகளுக்காக பட்டு & நூல் ஜவுளிகளை ஏராளமாக ஸ்டாக் செய்துள்ளோம்

எங்கள் அசல் கோர்னேகாலம் பட்டுச் சேலைகள் தனிச் சிறப்பு வாய்ந்தவை

நியாயமான விலைகளுக்கும் கைராசிக்கும் நம்பிக்கையான இடம்

●★●

P. B. லக்ஷ்மணஸா & பிரதர்ஸ்

பட்டு ஜவுளி வியாபாரம்
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை - 2
போன்: 86966

●★●

குறிப்பு:—பம்பாய், மதுங்கா, லக்ஷ்மி நாப்பு ரோட், 307 லேபரில் உள்ள எங்கள் கடையில் வழக்கம்போல் வாங்கித் திருப்தி அடையுங்கள்.

பொறுக்க முடியாமல் பயங்கரமாகக் கத்திக்கொண்டே விழுந்தான் கதிர்வேலன். மார்பு நிறையக் காற்றை உள்ளுக்கு இழுத்து வெளியேற்றி மறுபடியும் தன்னைச் சூழ இருந்த இருளுக்கு இடம் கொடுக்காமல் சமாளித்தான்.

தன் கைகளை நகர்த்தித் தரையில் ஊன்றி எழுந்திருக்க முயன்றதால்தான் அந்த வலி உண்டாயிற்று என்றும் கரங்களை நகர்த்தவே தன்னால் முடியவில்லை என்பதையும் இப்பொழுது உணர்ந்துகொண்டான் அவன். குப்புற விழுந்து கிடந்த அவனுடைய தலைக்கு மேலே இரண்டு கைகளும் நீண்டு செயலற்றுக் கிடந்தன.

மார்பைத் தரையில் நன்றாக ஊன்றிக் கால்களை மடித்து எப்படியோ மண்டியிட்டு உட்கார்ந்து விட்டான். தாங்க முடியாத வலியினால் அப்போதும் அவனை அறியாமலே கூக்குரலிட்டான்.

மண்டியிட்டு உட்கார்ந்த பிறகு எழுந்து நிற்பது அவ்வளவு கஷ்டமாக இல்லை. சற்றுத் தூரத்தில் தான் நிறுத்தியிருந்த காரை நோக்கி மெதுவாக நடந்தான். இரு புறமும் அவனுடைய இரும்புக் கரங்கள் பஞ்சடைத்த பொம்மையின் கைகளாக உணர்வின்றித் தொங்கின. அவற்றிலிருந்து ரத்தம் சொட்டிக் கொண்டே வந்தது. காரின் முன் கதவு திறந்திருந்தது. அதை மூடுவதற்குள்தான் குருதிச் சிவப்பான அந்த இன்னொரு மோட்டார் அவனை ரத்த வெள்ளத்தில் கிடத்த வந்து விட்டதே.

முன் ஸீட்டில் உட்கார்ந்தான் கதிர்வேலன். இன்னொருவர் உதவியில்லாமல் தன்னால் ஒன்றுமே செய்ய முடியாது என்று நிதர்சனமாகத் தெரிந்தது.

நெற்றியைக் காரின் 'ஹாரன்' மீது வைத்து அழுத்தினான். இரவின் நிசப்தத்தைக் கலைத்துக்கொண்டு அது கோரமாக அலறியது.

எதிரேயும் பக்கத்திலும் இருந்த வீடுகளில் நடமாட்டம் காணப்பட்டது. ஐந்து நிமிஷங்களுக்குப் பிறகு ஒருவர் அருகே வந்து மிரட்டினார். "ஹாரன் அடிப்பதை உடனே நிறுத்துகிறீரா? அல்லது போலீசைக் கூப்பிடட்டுமா?"

கதிர்வேலன் தலையை மெதுவாக நகர்த்தினான். இதற்குள் இன்னும் நான்கைந்து பேர்கள் கூடி விட்டார்கள்.

"ஐயா! நான் சொல்வதைத் தயவு செய்து கேளுங்கள். எனக்கு நன்றாக அடிபட்டு விட்டது. எதிரே யிருக்கும் டைரக்டர் சுகுமாரனுடைய வீட்டுக்குள் போங்கள். அங்கிருந்து டெலிபோனில் ராஜன் நர்ஸிங் ஹோமைக் கூப்பிடுங்கள். நர்ஸ் நிர்மலாவிடம் கதிர்வேலனுக்கு அடிபட்டு விட்டது என்றும் இங்கு இருக்கிறேன் என்றும் சொல்லுங்கள்!" கதிர்வேலனை மீண்டும் இருள் சூழ்ந்து கொண்டது.

அந்த அபாயமான உடல் நிலையில் அத்தனை காரியங்களைச் செய்யக் கதிர்வேலனைத் தவிர வேறு யாரால் முடியும்?

* * *

கதிர்வேலனுக்கு அடிபட்டு விட்டது என்ற செய்தியை டெலிபோனில் கேட்டபோது ரொம்பத் தைரியமாகத்தான் இருந்தாள் நிர்மலா. துணிவை இழக்காமல் டாக்டர் நடராஜன் வீட்டுக்குச் சென்று அவனை எழுப்பி அழைத்துக் கொண்டு புறப்பட்டாள்.

ஆனால் காரின் முன்பக்கத்தில் விழுந்து கிடந்த கதிர்வேலனைக் கையிலி

ருந்த டார்ச் லைட்டின் ஒளியில் கண்டவுடனேயே அவனுடைய துணியெல்லாம் எங்கேயோ இருந்த இடம் தெரியாமல் மறைந்து விட்டது.

அவனுடைய கால்கள் உருகித் தண்ணீராக ஓட ஆரம்பித்தன. நிற்கும் சக்தியைக் கூட இழந்து விட்ட அவளை வியப்புடன் பார்த்தான் நடராஜன். டைரக்டருடைய காரில் மயங்கிக்கிடந்த கதிர்வேலனுக்கு அருகில் அவளைப் பிடித்து ஏற்றி உட்கார வைத்து விட்டு, அவனுடைய தலையை அவள் மடியில் மெல்லச் சாய்த்தான்.

தெருவில் நின்று கொண்டிருந்தவர்களில் ஒருவர் கதிர்வேலன் விழுந்த போது எகிறிய சாவிக் கொத்தையும் செருப்பையும் கொண்டு வந்தார். நிலை விழுந்து கிடந்த கதிர்வேலனை நகர்த்த விரும்பாமல் சுகுமாரனுடைய காரையே ஓட்டினான் நடராஜன்.

"நிர்மலா! நோயாளிகளை நீ பார்ப்பது இதுதானா முதல் தடவை? தைரியமாக இருக்க வேண்டிய சமயத்தில் இப்படி நடுநடுங்கினால் என்ன உபயோகம்?" என்று சற்று அதட்டலாகக் கேட்டான் நடராஜன்.

நிர்மலா ஏதோ சொல்ல நினைத்து வாயைத் திறந்தாள். ஆனால் அவள் வாயிலிருந்து வார்த்தைகள் வெளிப்படவில்லை. எப்படிப் பேச முடியும்? கதிரவனே இருண்டு போகும் நிலையில் இருக்கும்போது தாமரை தன் இதழ்களை விரித்துச் சிரிக்குமா? மலரிலிருந்து மணம் பிரிகையில் அதன் இதழ்களும் வாடி வதங்க வேண்டியதுதானே? வேலவனைப் பிரிய இருக்கும் மயில் வருந்தாமல் தோகை விரித்து ஆடவா செய்யும்? உயிர் பிரிகையில் உடல் பேசுமா?

கதிர்வேலனுடைய முகத்தைப் பார்த்தாள் நிர்மலா. அன்பு மொழிகளால் கொஞ்சி, காதல் கீதம் இசைத்து, விரல்கள் கரிய, அடர்ந்து சுருண்ட அவனுடைய கேசத்தை ஆசையோடு கோதிவிட மடியில் அமைதியான நித்திரையில் ஆழ்ந்திருக்க வேண்டிய அதே முகம்தானா இப்போது நீலநிறம் படர்ந்து உணர்ச்சியற்றுக் கிடக்கிறது?

நிர்மலாவின் இதயமாகிற வானில் எண்ணக் கருமேகங்கள் சூழ்ந்து கொண்டன. அங்கே சூறாவளிக் காற்று சுழன்று சுழன்று வீசியது; இடிஇடித்தது; மின்னல் மின்னியது; கண்கள் வழியே மழை கண்ணீராகப் பொழிந்தது.

அந்தக் கண்ணீருக்கிடையே கதிர்வேலனை மறுபடியும் பார்த்தாள் அவள். அங்கே ஒரு முகம் தோன்றவில்லை. இரண்டு, மூன்று இல்லை; நான்கைந்து முகங்கள் தோன்றின.

ஏன் இப்படித் தோன்றுகிறது? அவருடைய வடிவத்திலேயே சிறிது சிறிதாக உயிர் உடலை விட்டுப் பிரிந்து போகிறதோ? சீச்சீ! அப்படியெல்லாம் இராது! ஒரு வேளை அவர் இறந்து போய் விட்டால்?...இறந்து விட்டால்?


எப்படி இறக்க முடியும்? கதிரவன் நிரந்தரமாக மறைந்து விட்டால் உலகமே அழிய வேண்டியதுதானே? உலகில் உள்ள அத்தனை ஜீவராசிகளும் சூரியனை நம்பித்தானே வாழ்கின்றன? கோடிக்கணக்கான உயிர்கள் சாகாமல் இருக்கக் கதிரவனும் உயிருடன் இருக்க வேண்டும். அவனுக்குச் சாவே கிடையாது. உலகமே அழிந்து போகும் போதுதான் அவனுக்கு மரணம் ஏற்படக் கூடும்!

ஆனால் காலனுக்குக் கண்ணில்லை என்பார்களே? ஆம், அவன் ஈவிரக்கமற்றவன், கல் நெஞ்சன். பயங்கரத் தோற்றம் கொண்ட கொடுங்கோலன். காதலுக்கு ஜன்ம விரோதி. கண்களை உருட்டி விழிக்கும் சாவே! அழகை அழிப்பதில் உனக்கு ஏன் இத்தனை ஆர்வம்? மலரின் மென்மையும் மணமும் கொண்ட அந்த மூச்சைத் திருடுவதில் உனக்கு ஏன் இந்தக் குதூகலம்?


நினைத்த இடத்தில் உனது பாசக் கயிற்றை வீசுகிறாயா? அல்லது குறி தவறி விழக் கூடாத இடத்தில் அது விழுந்து விட்டதா? சற்று நேரம் அவருடன் நீ பேசியிருக்கக் கூடாதா? அப்படி உரையாடியிருந்தால் அவருடைய வார்த்தைகளின் இனிமையில் கட்டுண்டு, வந்த காரியத்தை மறந்து திரும்பியிருப்பாய். உன்னுடைய சக்தியையெல்லாம் இழந்திருப்பாய்.

உயிர்களை வாங்கி வாங்கி நீ களைத்துப் போனாயா? சோர்ந்து போனதால் தாகமெடுக்கிறதா? அந்தத் தாகத்தைத் தீர்த்துக் கொள்ளத்தான் என் கண்களிலிருந்து கண்ணீரைக் கொட்டச் செய்கிறாயா? அதற்காகத்தான் இவருடைய கண்களை மூடி வைத்திருக்கிறாயா? உன் தாகம் தணிந்ததும் அந்தக் கண்கள் திறந்து விடுமா? ஆனாலும் என்னுடைய நயனங்களுக்குள்ளே அடைக்கலமாகப் புகுந்துள்ள கண்களை, நான் அன்புடன் சிறைப்படுத்தி வைத்திருக்கும் அவருடைய விழிகளை நான் அறியாமலேயே நீ மூடச் செய்தது விந்தைதான். அதை எப்படி உன்னால் சாதிக்க முடிந்தது?

ஏன் இந்த அசட்டுத்தனமான எண்ணங்கள்? கதிர்வேலன் என்னை விட்டுப் பிரியப் போவதில்லை. சாவித்திரியைப் போல எமனுடன் போராடியாவது அவரை அழைத்து வந்து விடுவேன். நிர்மலாவுடைய அழுகை நிற்கவில்லை.


ஜோராட்
ரேடியோ
தயாரிப்பவர்கள்
ஜோராட எலக்ட்ரானிக் இண்டஸ்ட்ரீஸ்
மதராஸ்-3
கிடைக்குமிடம்
ஜே-ஓ-போன் கம்பெனி
13, தங்கசாலை வீதி, சென்னை-3


வியக்கத்தக்க
நீளமான
செழிப்பான
கூந்தல்
ரோமா
கூந்தல் வளர்க்கும் டானிக்
Roma
HAIR GROW
TONIC


IS:395
ISI
AMCOS
for ENDURANCE
ஐ. எஸ். ஐ. (I. S. I.) அத்
தாட்சி பெற்ற சாமான்கள்
மிகவும் நம்பகமானவை
விநியோகஸ்தர்கள்:
அடிஸன் & கோ. பிரைவேட் லிட்.
மதராஸ் - - பெங்களூர்
டிப்போ: கோயமுத்தூர்

ஸ்படிகக் கற்களைப் போல் கண்ணீர்த் துளிகள் மேலே மேலே தோன்றிக் கண்களின் ஓரத்திலே நின்று நிலவொளியில் மின்னின. கண்ணிமைகள் அணைகளாக மாறி அவற்றைத் தடுத்து நிறுத்த முயன்றபோதிலும் அந்த அணையைத் தகர்த்தெறிந்து விட்டுக் கண்ணீர் வெள்ளம் பெருக்கெடுத்துக் கன்னங்களை நனைத்தன. உஷ்ணமான பெருமூச்சுகள் வெளிறிப் போன அந்தக் கன்னங்களைக் காய வைக்க முயன்றன. ஆனால் அதில் வெற்றி பெறுவதற்கு முடியவில்லை.

நடராஜனுக்கு முதன்முதலாகத் தான் மல்லிகாவைச் சந்தித்த தினம் நினைவுக்கு வந்தது. கதிர்வேலன் அங்கு இருந்தான். நடராஜனைப் போலவே கடமையைச் சிறிது நேரம் மறந்திருந்தாள் நிர்மலா. மற்றுமொருநாள் போலீசார் கதிர்வேலனைத் தேடி நர்ஸிங் ஹோமுக்கு வந்தார்கள். நிர்மலா 'எனக்கு ஒன்றுமே தெரியாது' என்றாள். அந்த முகத்திலே களங்கமற்ற தன்மை தேவைக்குச் சற்று அதிகமாகவே இருந்தது அப்போது. இப்போது அடிபட்டிருக்கும் இவனைக் கண்டு கண்ணீர் விட்டு விம்முகிறாள். நடராஜன் அவள் அந்தரங்கத்தைப் புரிந்து கொண்டான்.

ஆப்பரேஷன் தியேட்டரில் கதிர்வேலனைக் கிடத்தினார்கள். பிரகாசமான வெளிச்சத்தில் அவனைப் பரிசோதித்தான் நடராஜன். அவனுடைய இரண்டு கரங்களின் மீதும் காரின் சக்கரங்கள் ஏறியிருந்தன. உடலின் மற்ற இடங்களில் அதிகமாக அடிபடவில்லை.

"நிர்மலா! அவனுடைய உயிருக்கு ஆபத்தில்லை, கவலைப்படாதே!"

கடலாகப் பொங்கிய நிர்மலாவின் கண்ணீர் அலைகள் இப்போது திசை மாறின. சாவைப் பழித்த அவள் இப்போது அதை வாழ்த்தினாள். இருண்டதாகத் தோன்றிய வாழ்வில் இப்போது புத்தொளி புகுந்தது. சூன்யமாகத் தோன்றிய உலகம் புத்துயிர் பெற்று இன்ப லோகமாகக் காட்சியளித்தது. பட்டுப் போனதாகத் தோன்றிய மரம், செடி, கொடிகள் தளிர்விட்டன.

அவர் மறைந்தாரானால் உலகத்தில் அழகே அழிந்து விட்டது, காதல் என்பதே இல்லாமல் நசுக்கப்பட்டு விட்டது என்றுதானே பொருள். அப்படி இருக்க அவர் எப்படிச் சாக முடியும்?

அழகும் காதலும் உலகில் இல்லாமல் செய்துவிட முடியுமா? அசட்டுத்தனமாகப் பயந்து போனேன்! பகலைக் கண்டு வெட்கப்பட்டது போல் நட்சத்திரமாக மின்னிய அவளுடைய கண்ணீர்த் துளிகள் மறைய ஆரம்பித்தன. ஆனால் எப்போதாவது ஒரு முறை ஒரு ஆனந்தக் கண்ணீர்த் துளி விழுந்து, முன்பு விழுந்த துயரக் கண்ணீரால் மாசு படிந்த பட்டுக் கன்னத்தைக் கழுவியது.

"நிர்மலா! காரின் சக்கரங்கள் ஏறிய இவனுடைய இரண்டு கரங்களும் வீணாகி விட்டன. இனி அவை உபயோகப்படாது. அந்தக் கரங்கள் கதிர்வேலனுக்குத் தேவைப்படாது. உபயோகப்படாத அவற்றைச் சீர்ப்படுத்தவும் முடியாது. அவன் உயிரைக் காப்பாற்றவேண்டுமானால் இரண்டு கைகளையும் வெட்டி எடுத்துவிட வேண்டியதுதான்" — மனத்தைக் கல்லாக்கிக் கொண்டு தான் கூற வந்ததைச் சொல்லி முடித்தான் நடராஜன்.

நிர்மலா ஆடாமல் அசையாமல் நின்றாள். அவளுடைய பெருமூச்சுகள் பறந்து போய் விட்டன. கண்களில் கண்ணீர் வற்றிவிட்டது. அவள் கண்கள் அனலாகச் சிவந்தன. இதயம் இரும்பாகிக் கனத்தது. கண்களில் இருந்த கனல் அந்த இரும்பைப் பழுக்கக் காய்ச்சி உருக்கியது. சிவந்து உருகிய இரும்பு ஆசை என்னும் துளிகளாக உள்ளத்தில் சொட்டிக் கொண்டிருந்தது. (தொடரும்)


பாண்ட்ஸ்
ட்ரீம்ப்ளவர் டால்க்
உபயோகித்தால்
நாள்முழுவதும் புத்துணர்ச்சி
யுடனும், நறுமணத்துடனும்
இருக்கலாம்
'விருந்த கவூட்டுவதும், நறுமணம் வாய்ந்ததுமான பாண்ட்ஸ் ட்ரீம்ப்ளவர் டால்கம் பவுடர் உபயோகித்தால், மிகக் கொடிய வெப்பத்திலும், புழுக்கமான நாட்களிலும்கூட இனிய உணர்ச்சியுடன் இருக்கலாம். மென்மையான இந்த டால்கம் பவுடரை உடம்பில் தூவிக்கொண்டால், எரிச்சலூட்டும் வியர்வைத் தொல்லை ஒழியும். நாள் முழுவதும் புது மலரைப் போல் இனிய புதுமையுடன் இருக்க பாண்ட்ஸ் ட்ரீம்ப்ளவர் டால்கம் பவுடர் உபயோகியுங்கள்.
சீஸ்ப்ரோ-பாண்ட்ஸ் இன்கார்ப்பரேட்டட்
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன்
யு.எஸ். அமெரிக்காவில் இணைக்கப்பெற்றது)
POND'S
DREAMFLOWER TALC
DREAMFLOWER TALC
இலவச புத்தகம் - "LOVELIER WITH POND'S" என்ற அழகு இலவச புத்தகத்தை வரவழையுங்கள். இதில் அழகு பராமரிப்பு பற்றி உபயோகமான குறிப்புகள் அடங்கியுள்ளன.
பி. ஒ. பாக்ஸ் 1013, டிபார்ட்மெண்ட் செ 38 T, பம்பாய்-1 என்ற விலாசத்திற்கு 25 பைசா ஸ்டாம்புடன் எழுதவும்.



போலித் துறவி

நான்கு நாட்களாக அவன் ஊரைச் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தான். அவனது அகத்தினுள்ளிருந்த வேட்கையும் துடிப்பும் விசித்திரமானவை!

குளிர் மிக்கதான கார்த்திகை மாதம். அதிலும், கங்கைக்கரை சமீபமாக இருந்த கஜுராஹம் பகற்காலத்திலேயே நடுக்கும் குளிரையளித்துக் கொண்டிருந்தது. அவன் கனமான சால்வையால் உடலைப் போர்த்தியிருந்தான். பின்புறத்துத் தோள்பட்டையின் மீது ஒரு சிறு மூட்டை. கையிலொரு பிரம்புத்தடி. கால் அடிச்சுவட்டுடன் ஒட்டினாற்போன்ற மர மிதியடிகள் — இவைதாம் இவனது புறத்தோற்றம்.

அதிகாலை நேரம். அரசமாளிகையின் முகப்பைக் கடந்து வந்து கொண்டிருந்த அவன் — சற்றே நிமிர்ந்து நோக்கினான். அழகு மிக்கதான புத்த விஹாரையின் ஸ்தூபி அவனை அங்கேயே சற்றுநேரம் நிற்க வைத்துவிட்டது. உட்புறத்தில் பேரலைகளின் நிரந்தர சுருதி போன்ற இன்னொலியின் முழக்கம் கேட்டது. அவனது செவிகள் ஊன்றிக் கேட்டன. ஹர்ஷ சக்கரவர்த்தியின் ஸுப்ரபாத ஸ்தோத்திரத்தைப் பலர் முறை வைத்துக் கொண்டிருந்தனர்.

அவனது உதடுகள் ,வெறுப்புடன் நெளிந்தன. 'ஆமாம்! காருண்யமூர்த்தியான போதிஸத்வரின் பெயரைக் கூறிக் கூறித்தான் தன் பெயரைப் பிரபலமாக்கிக் கொண்டுள்ளான்!' இவ்வாறாக அவன் இதயம் முணுமுணுத்தது. பெருமூச்சுவிட்டவாறே ஸ்தூபியின் சிகரத்தை உற்று நோக்கிச் சிரம் தாழ்த்தினான். பின்னர் பரபரப்புடன் நடந்தான், கங்கைக் கரையை நோக்கி.

அடர்ந்த காடாகத் தோன்றிய அப்பிரதேசம்தான் அவன் மனத்துக்கு மிக ஆறுதலாக இருந்தது. அருகே - தெள்ளிய ஸ்படிகமான நீரால் குமிழியிட்டோடும் நதியின் பரந்த தோற்றம் நான்கு தினங்களாக அவன் உள்ளத்தின், உடலின் வெப்பத்தைத் தணிப்பதாக இருந்தது.

மிடுக்காக வந்து கொண்டிருந்த அவன், சிந்தனையின் போக்கினால் அப்பொழுது வழி தவறி விட்டான் போலும்! சற்றே நின்று நாலாபுறங்களையும் நோக்கினான். வழக்கமாகச் செல்லும் பாதையாகத் தெரியவில்லை. சற்றுத் தூரத்துக்கப்பால் ஓர் பனையோலைக் குடிசை இருப்பதைக் கண்டதும் வியப்புடன் நின்றான். அப்போதுதான் அவனது விழிகளுக்கும், கருத்துக்கும் பேரதிர்ச்சியான காட்சியும் தென்பட்டது. மனிதச் சந்தடியேயிராது போன்று காணும் அவ்வனத்துக்குள்ளும் ஓர் வனிதை வரக்கண்டான்! வியப்பின் மிகுதியால் அவனது இதய உறுப்புக்களும் ஓர் விநாடிக் காலம் தடைபெற்று விட்டன. அவள் - அவள் யார்?

அவன் அங்கேயிருந்த பெரு மரத்துடன் ஒண்டியவாறு அவளது திசையை உன்னிப்பாக நோக்கினான். கட்டிளமையும், பூத்துச் சொரிந்த பேரழகும் கொண்ட அவ்வெழில் மடந்தை பரபரப்பாக நடந்து வந்தாள். அச்சிறு குடிலை நெருங்கியதும், சற்றே நின்று நாலாபுறங்களிலும் பார்வையை யோட்டினாள். பின்னர், குடிலுக்குள் மறைந்து விட்டாள் — கார்காலத்தில் பளிச்சிட்ட மின்னலென!

அவன் தன் கண்களைக் கசக்கிவிட்டுக் கொண்டான். உள்ளத்தில் - பெருவியப்பு குறுகுறுத்தது! கூடவே, சந்தேகமும் தொடர்ந்து வந்து சுரண்டித் துளைத்தது! அவளைப் பற்றிப் பலப் பலவிதமான கற்பனை.

வியப்புக்கும் சந்தேகத்துக்கும் ஓர் முடிவை ஏற்படுத்த விரும்பியவனாக அவன் நாலடி நடந்து சென்றான். கால்கள் முரண்டு கொடுத்தன. தயங்கியபடி நின்றான். அடுத்த கணம் அக் குடிசையிலிருந்தும் மருட்சி மிகுந்த வீறிட்ட ஓசை அவளது குரலின் மூலம் வெளியாயிற்று! அவன் திடுக்குற்றபடியே அசந்து விட்டான். மீண்டும் அப் பெண்ணின் குரல் ''ஐயோ! பாம்பு! பாம்பு! புத்த தேவா! உன் அருள் ஒளியால் என்னைக் காப்பாற்று!'' என்ற பயங்கரச் செய்தியை வெளியாக்கி அவன் இதயத்தைத் துளைத்தது. மறு கணம் அவன் அங்கே பறந்தான்!

குடிசையின் தட்டிக் கதவைச் சரேலென நீக்கிவிட்டு, உள்ளே கழுத்தை நீட்டினான். சுவருடன் ஒட்டிய உருவாக நின்ற அவளது தோற்றம் மிகப் பரிதாபமாக இருந்தது. அவளது பீதி நிறைந்த விழிகள் - எதிர்ப்புறச் சுவரோரம் வளையமிட்டுக் கொண்டிருந்த பயங்கர உருவையே இமையாது நோக்கிக் கொண்டிருந்தன. தைரியத்துடன் காலால் பெருவோசையிட்டபடியே உட்புறம் நுழைந்தான். அவளும் திடுக்குற்றாள். பாம்பும் மிரண்டு சீறிப் படமெடுத்தது! அவன், தன் கைப்பிரம்பைக் கரத்திடையே இடுக்கிக் கொண்டு, கைகளைக் கொட்டி முழக்கமிட்டான். அப் பயங்கரப் பிராணி, தன் தலையைப்

பூமியில் மும்முறை தட்டிவிட்டுப் பின்புறமாகத் திரும்பி, சரசரவென மறைந்தது.

அவன் முகத்தில் செருக்குப் புன்னகை அரும்பியது. ''பெண்ணே! நீ யார்?'' என்றான் மிடுக்குடன் அவளை நோக்கி.

வியர்வை கசிந்த அவளது முகத்தில் மருட்சி நீங்கியபாடில்லை. அவள் பெருமூச்செறிந்தவாறு வாய் எச்சிலைக் கூட்டி விழுங்கிக் கொண்டு நின்றாள்.

அவன் அவளது முகத்தை ஊடுருவிப் பார்த்தவாறு அசையாது நின்றான். மறு கணம் அவன் முகத்தில் எண்ணற்ற வியப்புக் குறிகளும் ஒன்றாக வடிந்தன. அவளை நோக்கிக் கரம் நீட்டியபடி, ''நீ .....நீ...... பெண்ணே! வேண்டாம்! வீணாக உன் செவ்விதழ்களை நீக்கி, நீ யாரென்பதைக் கூற வேண்டாம். ஆனால் இப்போது வந்து சென்ற அரவுக்கு உன்னிடம் எவ்வளவு பயமிருந்தது என்பது தெரியுமா வென்பதை மட்டிலும் அறிய விரும்புகிறேன்!'' என்றான் துடுக்கான நகைப்புடன்.

அப்போதுதான் அவனும் அந்த அறையின் ஒரு மூலையில் பார்வையைச் செலுத்தினான். அக்கணமே அவன் இதயம் அதிசயமான புது மாறுதலைக் கொண்டு விட்டது! அங்கே — ஈர மண்ணின் சிருஷ்டியாக உருப்பெற்றிருந்த புத்த தேவன் - அன்பும் கருணையும் பொலிவு கொண்ட முகத்தினனாக வீற்றிருந்தான்! ஆன்ம சக்தியின் வெற்றி ஒளி அவ்விழிகளில் பிரகாசித்துக் கொண்டிருந்தது!

அவன் பரபரப்பாக அவள் புறம் திரும்பி, ''எழிலரசி! இவ்வருள் தேவனின் வடிவை உருவாக்கியது யார்?'' என்று கேட்டான் கனிவான குரலில்.

''சுவாமி! சில தினங்களாக நான்தான் இம்முயற்சியில் ஈடுபட்டுள்ளேன். இதனை மிக இரகசியமாகவே தயாரித்து, உரிய காலத்தில் வெளியாக்க வேண்டுமென்ற கருத்தால்தான், இவ்வனப் பகுதியில் குடிசையை ஏற்படுத்திக் கொண்டேன்.''

அவன்— அவளது கூரிய விழிகளின் ஒளி.. .. திக்கித் தவித்தான்! அச்செவ்விய அதரங்களின் மெல்லிய அசைவையும், விசாலமான நெற்றியையும், தோள்புறத்தே அலையெனச் சுருண்டு புரண்ட குழற் கற்றையையும் கண்ட அவனது விழிகள் அவற்றினிடையே அசையாப் பொருளாக நிலைத்து விட்டன! அவள் கூறிய செய்திகளை அவனது செவிகள் உட்கொண்டனவே யன்றி, அதனை இதயத்துக்கு அறிவிக்கவில்லை. சிறிது விநாடிக்குப் பின்பே, அவன் இதயம், அவனை அவனுக்கு உணர்த்தியது! ''உம்.. என்ன, என்ன? உரிய காலத்தில் வெளியாக்கப் போகின்றனையா? அது எப்போது?'' என்றான் புத்துணர்வுடன்.

அவளது நாவுக்கும் அப்போதுதான் துணிவும் அதிகரித்தது போலும்! அவள் குறும்பான பார்வையுடன், ''சுவாமி! துறவிபோல் காணும் தாங்கள்...?'' என்ற கேள்வியைத் தொடங்கி, அதனை முடிக்காமலே குறிப்பாக அவனை நோக்கினாள்.

''ஏன்? நான், துறவியேதான்! இதனால் உன் செய்தியை வெளியிட ஏதாகிலும் தடையுண்டோ?'' என்றான் விரைவுடன்.



"தாங்கள் துறவியாகவே இருந்துவிடக் கூடுமாயின், என் செய்தியைக் கூறுவதிலும் தடையொன்றுமில்லை; ஆனால்..."

"ஏன்? நான் துறவியல்ல வென்பதைத் தான் நீ எவ்வாறு நிர்ணயிக்க இயலும்?"

"தாங்கள் உண்மையான துறவியாக இருந்தால், உள்ளத்தில் இரக்க உணர்ச்சி விருப்பதற்கு எதிராக, சொற்களில் துடுக்கு உதித்திராது! அத் துடுக்கும் இவ்வளவு நேரம் வரை உத்வேகத்துடன் நீடித்துமிராது! ஆகவே, துடுக்கான நாவும், மிடுக்கான பார்வையும் கொண்டுள்ள தாங்கள், உண்மைத் துறவியல்ல வென்பதையே அறிமுகமாக்குகின்றனை! அதுவன்றியும் தங்களது நெற்றிப் புறம்?" — வார்த்தையை முடிக்காது அவள் விஷமப் புன்னகையை உதிர்த்தாள்.

அவன் சட்டெனத் தன் நெற்றிப்புறத்தைக் கையால் வருடியவாறே, "ஏன்? எனது நெற்றிப்புறத்தில் என்ன?" என்று கேட்டான் பதைபதைப்புடன்.

அவள் எளனக் குமிழ்ச் சிரிப்பை உள்ளுக்கு இழுத்துக் கொண்டாள்! "ஒன்றுமில்லை, மகுடம் படிந்து படிந்து அங்கே நிரந்தரத் தழும்பை யேற்படுத்தியுள்ளதைத் தான் குறிப்பிட்டேன்!"

அவன் பெருத்த பரபரப்புக் கொண்டு, "இளவரசி! இளவரசி! நீ என்னை வென்று விட்டாய்!" என்றான் பெருங்கூச்சலாக.

அவள் தன் புருவங்களை நெறித்துப் பார்த்தவாறு, "இளவரசியா? அப்படி யார் கூறினார்கள்?" என்று கேட்டாள்.

"இளவரசி! இதனை நீயா கூற வேண்டும்? உனது முகத்தில் தான் என் வகை இலட்சணங்களும் பொருந்திய ஹர்ஷ சக்கரவர்த்தியின் முத்திரைகள் பதிந்துள்ளனவே?"

அவள் நிடுக்குற்றுத் தலை குனிந்தவாறு காலால் தரையில் கோலமிட்டாள்.

"அது போகட்டும், இளவரசி! உன் பெயரென்ன?" என்றான் அவன் கனிவாக.

"என் பெயர் தெரியத்தான் வேண்டுமோ?" என்று கேட்டாள் அவள் கொஞ்சுதலையும் மிடுக்கையும் பிணைத்து.

"ஆம்! பெயரும் தெரிய வேண்டும்; இரகசியமான முறையில் நடைபெற்று வரும் இந்தக் கலைப் பணியின் நோக்கமும் தெரிய வேண்டும்!"

"என் தாயிட்ட பெயர் ஸுபாஷிணி! தந்தையிட்ட பெயர் யசோமதி! பட்டபாணர் அழைக்கும் பெயர் — "

"ஆஹா! எத்தகைய பொருத்தமான பெயர்கள்; ஸுபாஷிணி! எனது மற்றொரு கேள்விக்கும் விடை கிடைக்கவில்லையே?" அவன் விழிகள் மூலைப்புறத்திலிருந்த அவ்வழகுப் படிமத்தை உறுத்து விழித்தன.

"ஓ அதுவா? இதனை வரப்போகும் ஐந்தாம் பிரயாகை மோட்ச விழா வன்று, சீனத் தூதருக்கு எனது பரிசாக அளிக்கப் போகிறேன்! அதுவரையில் இத்தேவன் இங்கேயே மறைந்து தானிருப்பான்—தாங்களும் வெளியிடா திருப்பின்!"

"சீனத் தூதருக்கும் பரிசாக அளிக்கப் போகின்றனையா? அவர் எப்போது இங்கு வருவார்?—" அவனது கேள்விகளில் ஆர்வம் மிகைப்பட்டிருந்தது.

"நாலந்தாவுக்குச் சென்றுள்ள எம் தந்தையார், இன்றுதான் அவரையும் அழைத்து வரப்போகிறார். இந்நேரம் ....."

அவன் பெருமூச்செறிந்தான்! பின்னர் நாலாபுறங்களையும் ஓர் தடவை பார்த்துக் கொண்டே, "ஸுபாஷிணி! உண்மையில் நீ என் இதயத்தைத் திருடி விட்டாய்! நான் நான்......" என்றான் தடுமாற்றத்துடன். எஞ்சிய வார்த்தைகள் அவனது நாவை விட்டு எழும்ப மறுத்துவிட்டன.

அடுத்த கணம் அவள் துடுக்குக்காரப் பெண்ணாகிவிட்டாள்! "பேஷ்! முன்பின் தெரியாத ஒரு துறவி—இல்லை, ஓர் போலித் துறவி, அகிலம் புகழும் ஹர்ஷ சக்கரவர்த்தியின் அருமை மகள்மீது ஆசை கொண்டு விட்டாரா? மிக மிகப் பொருத்தம்!" எனக் கூறிக் கொண்டே வெண்முத்துக்களான பற்களின் ஒளி தோன்ற நகைத்தாள். அவள் முகத்தில் விஷமக் களை கூத்தாடியது!

"ஸுபாஷிணி! இத்துறவி – முற்றிலும் துறந்த ஞானியல்ல. புத்ததேவனின் அருள் நோக்கத்துக்கும், பொன் மொழிகளுக்கும் சிரம் தாழ்த்தும் தொண்டன். கூடவே, கலையை உளமாரப் போற்றி, உயர்வாக ஆதரிக்கும் கலையடிமை!"

அவள் எங்கோ பார்த்தவாறு பெருமூச்செறிந்தாள். பின்னர் சட்டென்று, "இம் மாயத் துறவி யாரென்பதைக்கூட இது வரையில் கூறவில்லையே?" என்றாள் குரலில் எளனம் பிரதிபலிக்க.

"ஸுபாஷிணி! என்னை மன்னித்துவிடு. இத் துறவி யாரென்பதைத் தெரிவிக்கச் சிறிது காலம் அவகாசம் கொடு. அச் சிறிது காலமும் நான் உன் தந்தையாருடன் தானிருப்பேன்." இவ்வாறு பரிதாபம் மிகுந்த முகத்துடன் கூறினான் அவன்.

அவள் பரபரப்புடன் வெளிக் கிளம்பி விட்டாள். "சுவாமி! என்னை மன்னியுங்கள்! புத்ததேவனின் அருள் நோக்கம் எவ்வாறோ, அவ்வாறேதாம் யாவும் நடக்கும்–" இவ்வாறு கூறிக்கொண்டே மறுமொழியும் எதிர்பாராது, மின்னலாகவே மறைந்துவிட்டாள்!

அவன்—அவளது திசை நோக்கிப் பெருமூச்சைச் செலுத்தியபடி நின்றான். எத்தகைய சோதனை! ஹர்ஷசக்கரவர்த்தியைச் சோதனையிட வந்தவனாகிய அவனுக்கே ஒரு சோதனையல்லவா வந்துவிட்டது? துறவியாகவும், மூடியோனாகவும் வெளிச்சமிட்டுக் கொண்டிருந்த அவனது புறத்தோற்றத்தை, இளமையெனும் அகத்தின் சக்தியல்லவா குலைத்து ஏமாற்றிவிட்டது! அதுகாலை அப்படியெனில், ஒன்றரை ஆண்டுக்குமுன், அச்சீனத் தூதன் குறிப்பிட்டுக் கூறியதை—இவளும் சில விநாடிப் பழக்கங்களால் அறிந்து கூறிவிட்டனளே!

"தாங்கள் புத்ததேவனின் அருள் வாக்கில் அபார பக்தி கொண்டுள்ளீர்கள். ஆனால், தங்களது நாவின் இயற்கையான துடுக்குத் தனம் மாறாமலிருப்பதுதான் விசித்திரமாக இருக்கிறது. இக் குணம்–தங்களது உதிரத்துடனேயே கலந்துள்ளது போலும்!" இவ்


'அனாஸின்'
தலைவலி, ஜலதோஷம், ஜுரம்
மற்றும் தசைவலிகளிலிருந்து
நிவாரணமளிப்பதில் சிறந்தது
ஏனெனில் அதில் நான்கு மருந்துகள் சேர்ந்துள்ளன.
WILL NOT UPSET THE STOMACH
DOES NOT HARM THE HEART
ANACIN
TABLETS
வைத்திய விஞ்ஞானிகள், 'அனாஸின்' என்பது வலியை அகற்றும் தீவிர சக்திவாய்ந்த அநேக மருந்துகளின் சரியான விகிதாச்சார கலவை என்று கூறுகிறார்கள். அது வேறெந்த ஒரே மருந்து கலவையைவிட அதிதுரிதமாயும், அபாயமின்றியும், நிச்சயமாயும் நிவாரணமளிக்கிறது என்று ஞாபகத்தில் வையுங்கள்! 'அனாஸின்' ஒரு டாக்டரின் குறிப்பிற்கு ஒப்பான விஞ்ஞான முறையில் தயாரிக்கப்பட்ட நான்கு மருந்துகளின் கலவையாகும். ஆகவே 'அனாஸின்', தலைவலி, ஜலதோஷம், ஜுரம், பல்வலி மற்றும் தசைவலிகளிலிருந்து துரிதமாயும், முற்றிலும் குணமளிப்பதில் சிறந்தது. எப்பொழுதும் வீட்டில் 'அனாஸின்' வைத்திருங்கள்.
GEOFFREY MANNERS & CO. PRIVATE LTD. REGISTERED USER
K 67 (R) TAM.



சென்ற மாதம் பாபநாசம் சமூகநல வளர்ச்சித் திட்ட உதவி நிதிக்காகக் குமாரி ஜலஜாவின் பரதநாட்டியக் கச்சேரி சிறப்பாக நடைபெற்றது. இந்த வைபவத்துக்குத் தலைமை தாங்கிய மந்திரி திருமதி ஜூர்தம்மாள் சைமன் அவர்கள் நடனமாடிய குமாரி ஜலஜாவின் திறமையை வெகுவாகப் புகழ்ந்தார். இதுபோன்ற பொது ஸ்தாபனத்துக்கு தம் குமாரியின் கலையைப் பயன்படுத்திவரும் திரு ஜகதீசன் அவர்களின் நல்லநோக்கத்தைப் பாராட்டினார். படத்தில் குமாரி ஜலஜாவுக்கு மந்திரி வெள்ளிக்கோப்பை பரிசளிப்பதைக் காணலாம்.

வாறுதான் அச்சினன் அவனைப் பார்த்து, எச்சரிக்கை போன்று கூறியிருந்தான்!

இரண்டு தினங்களுக்குப் பின், அவன் துறவியாகவே, அதிலும் மௌனத் துறவியாகவே தன்னை அறிமுகமாக்கிக் கொண்டு, ஹர்ஷ சக்கரவர்த்தியின் நன்மதிப்பைப் பெற்று விட்டான். அவன் எண்ணி வந்த செயல் 'எண்ணற்ற உயிர்களைப் போர்க்களத்தில் கூசாமல் பலியிட்டொழித்து, வடபால் வேந்தர்களை அடிமைப்படுத்திக் கொண்டுள்ள ஹர்ஷ சக்கரவர்த்தி, தாம் புத்ததேவனின் அருள் மதத்தைப் பின்பற்றுபவராக—அவரது அஹிம்ஸா தத்துவங்களைப் பரப்பும் தொண்டராகப் பறைசாற்றிக் கொள்ளும் விசித்திரக் கூற்றை அம்பலப்படுத்த வேண்டும்!" என்பதோடு மன்னனை கொண்ட அவர், தம் சொந்த வாழ்விலாவதும், ததாகதரின் அருள் மார்க்கத்தில் பிறழாதிருக்கின்றனரா என்பதைக் கண்காணித்து, அச்சினனின் குறிப்பேட்டில் மாறுதல் செய்ய வேண்டும் என்பதுதான்.

ஏறக்குறைய பத்து தினங்கள் கழிந்து விட்டன. அவனும், ஹர்ஷரின் மெய்க் காப்பாளர்களில் ஒருவனே போன்று அவர் போகுமிடம், வருமிடம் யாவற்றிலும் தொடர்ந்து சென்று கண்காணிப்பதில் ஈடுபட்டான். முடிவாக, அவனது ஊடுருவிய ஆராய்ச்சிக் கருத்துக்குத் தோல்விதான் நேரிட்டது! ஹர்ஷர், தம் சொந்த வாழ்விலும் மறந்துங்கூட பரமஅணுவுக்கும், சிறு ஜந்துவுக்கும் இன்னல் புரியாது விட்டு வந்ததைக் கண்கூடாகக் கண்டான்.

அன்று—ஓர் சோதனை! புத்தவிஹாரைக் கட்டடத்தின் சிறப்பு மிக்க அமைப்பைச் சீனத் தூதருக்குச் சுட்டிக் காட்டியபடி வந்து கொண்டிருந்தார் அரசர். கூடவே துறவியாகவுள்ள அவனையும், மொழிபெயர்ப்பாளனையும் தவிர, அங்கு வேறெவரும் அனுமதிக்கப் படவில்லை. ஸ்தூபிப் படிக்கட்டுகளின் அருகில் வந்து கொண்டிருந்த சீனரின் உயிரையோ, அன்றி அப்பேரரசரின் ஆவியையோ உறிஞ்சி விடும் வேகத்துடன் ஓர் கொடுவாள் பறந்து வந்தது! அதை அவர்கள் அறியவில்லை. ஆனால், அப்போதைத் துறவியின் கூரிய விழிகள் கண்காணித்து விட்டன. ஓர் இமைப் பொழுதின் அவகாசத்துக்குள்ளாகவே அவன், மின்னலெனத் துள்ளிப் பாய்ந்து, கரத்தை வீசித் தட்டிவிட்டான் அதை! கொடுவாள் எட்டிப் போய் விழுந்த அதிர்ச்சியின் ஓசை கேட்டதும்தான், அவர்கள் திடுக்குற்றுத் திரும்பினர்.

அவன்—தன் நிலையையே மறந்துவிட்டுக் கூவினான்: "அதோ மேன்மாடத்திலிருந்து ஓடுகிறான் அப் பாதகன்! மதிப்பிலா மாணிக்கங்களின் உயிரை உறிஞ்ச எண்ணிய காதகன்!" என்று கூச்சலிட்டவாறே அவனும் கையை உதறியபடி ஓடிக் கொண்டிருந்தான். அவனது கரத்தினின்றும் பெருகி ஒழுகிய செங்குருதியையும் அவன் பொருட்படுத்தவில்லை. ஆனால், கொட்டும் உதிரம் கண்ட அவ்விருவருமோ, பேரதிர்ச்சியின் வசமாகி, 'ஆஹா' காரம் விடுத்தனர்.

பதுங்கியிருந்து கொடுவாளை வீசிய கொடியவன் சிறிது நேரத்துக்குள்ளாகவே, ஏவலரால் பிடிக்கப்பட்டுக் கொண்டு வரப்பட்டான். அவன், மதப்பித்தர்களால் ஏவப்பெற்ற கூலிக் கொலைகாரன் என்ற செய்தி வெளியாயிற்று. ஹர்ஷருக்கு வியப்பு ஓர் புறமும், சினம் ஓர் புறமுமாக இதயத்தில் சுழலிட்டது. கூடவே, பத்து தினங்களாகத் தம்முடன் இருந்து வரும் துறவியின் துணிகரமான வீரத்தை நெஞ்சமாரப் புகழத் தொடங்கி விட்டார். அவனை நோக்கி, "பெரியீர்! தங்க

''நான் போன தடவை அந்த ஊருக்கு வந்து விட்டுப் போன பிறகு, அந்த ஊர் ஏதேனும் முன்னேற்றம் அடைந்திருக்கிறதா?''



''நான் அந்த ஊரை விட்டுப் புறப்பட்டு ரொம்ப நாளாகிறது.''
''சரி! அதைத் தவிர வேறு ஏதேனும் முன்னேற்றம் உண்டா?''

ளது மகோன்னதச் செய்கைக்கு நான் எதை அர்ப்பணித்தாலும் நன்றிக்கடனாக மாட்டாது. ஆனால், தாங்கள் துறவியாகத் தெரிகின்றீர்களே யென்றுதான் வருந்துகிறேன்'' என்றார் சக்கரவர்த்தி.

அவன் அவரது முகத்தை ஏறிட்டு நோக்கினான். பின்னர், ''இத்துறவிக்கும் ஆசையுண்டு! தம் சொந்த வாழ்வில் எத்தகைய பரம அணுவுக்கும் இன்னலேற்படுத்த விரும்பாத ஹர்ஷ சக்கரவர்த்தியவர்கள், வாக்கு பிறழாமல், கேட்பதை யளிப்பதில் உறுதியுள்ளவராவென்பதை நான் அறிய வேண்டும்; நாடுமறிய வேண்டும்!'' என்றான்.

''துறவிக்கும் ஆவலா? அத்தகைய ஆவல், எத்தகையதாக இருப்பினும், ஈடேற்றத் தயாராக வுள்ளேன்! எனது வாக்கு—புத்த தேவனின்மீது ஆணையாக வெளிப்படுவதாகும்!''—இவ்வாறு பெருமிதத்துடன் கூறி நின்றார் சக்கரவர்த்தி.

''இத்துறவியின் மனக்கோயிலை ஆட்கொண்டுவிட்டவள்—சக்கரவர்த்தியவர்களின் திருக்குமரியான ஸுபாஷிணி! அந்த அழகுப் பிம்பத்தை எனக்கு நன்றிக் கடனாக அளிக்கச் சக்கரவர்த்தியின் இதயம் சம்மதிக்குமா?''

ஹர்ஷ சக்கரவர்த்தி பேரிடியைத் தம் தலையிலேயே தாங்கிவிட்டது போன்று ஓர் விநாடிக் காலம் திடுக்குற்று விழித்தபடி நின்றார்! அடுத்த விநாடியில், அவரது உதடுகளின் விளிம்பில் புன்னகையரும்பியது. இரு கைகளையும் மேலே உயர்த்தியவாறு, ''ததாஸ்து!'' என்றார்.

துறவியாக நின்ற அவன், அவரை நெஞ்சமாரத் தழுவிக் கொண்டான்!

இவையனைத்தையும் அருகில் நின்று பார்த்துக்கொண்டிருந்த சீனத் தூதுவர், குறும்பு நகையுடன் சக்கரவர்த்தியின் தோள்புறத்தைத்தட்டி, ''சக்கரவர்த்தி தம் வாக்குறுதியைக் காப்பாற்றி விட்டார் என்பது உண்மை! ஆனால், அவர் கருதுகிறபடி, யாரோவொரு நாடோடித் துறவி, இவ்வளவு துணிச்சலாக வந்து, அவரது அருமைப் புதல்வியைக் கேட்டுவிடவில்லையென்பதைத் தான் நான் குறிப்பிட விரும்புகிறேன்! நம் இளவரசியாரும், இவ்விளம் துறவியினிடம் காதல் கொண்டுள்ளார்கள்!'' என்றார்.

''என்ன என்ன?—'' என்றார் பரபரப்புடன் வேந்தர்.

''ஆம்! இரண்டு தினங்களுக்கு முன் நம் இளவரசியாரின் மனப்போக்கைப் பற்றி, தங்கள் சகோதரியான ராஜ்யஸ்ரீயின் மூலம் அறிந்தேன். அது முதல் இவ்விருவருடைய போக்குகளையும், நானும் பாராததுபோல் பார்த்துத்தான் வருகிறேன்!''


''அப்படியா?'' என்றார் மெய் சிலிர்ப்புடன் ஹர்ஷ மன்னர்.

''அரசே! இளவரசியாரும் தம் காதலைப் பொருந்தா விடத்துக்குக் கொண்டுவிடவில்லை! இந்தத் துறவியின் போலியுருவைக் களைந்தால், இவர் வல்லபி தேசத்து மன்னரான துருவசேனன் என்பது வெளிச்சமாகும்!'' இவ்வாறு சீனத்தூதர் கூறிக்கொண்டே இரு கைகளாலும், இரு வேந்தர்களையும் தட்டியபடி அட்டகாச நகைப்பை விடுத்தார்.

''என்ன என்ன? சிலாதித்தியரின் வழி வந்த துருவசேனரா இவர்?'' என்றார் ஹர்ஷர் பெருவியப்புடன் துறவியைப் பார்த்தவாறு.

''ஆம்! இரண்டு ஆண்டுகளுக்கு முன் கத்தியவார் தீபகற்பத்தின் மீது படையெடுத்து வந்த தாங்கள், மண்ணாசையின் உந்தலால், இரத்த வெறி பிடித்து வந்தீர்கள்! வீணுகப் போரினிடையே பெரும் பெரும் உயிர்களையும் பலியாக்க மனமில்லாமலே, நாட்டை விட்டு, பாருகச்சம் சென்று தட்டனின் நட்பைப் பெற்றேன். தாங்கள் போர் தவிர்த்து வெற்றியுடன் திரும்பியதும், மீண்டும் என் நாட்டையடைந்து, குடியினரால் அரியணையேற்றப் பெற்றேன். சிறிது காலமாகத் தங்களுக்குக் கிடைத்துள்ள புகழ்களால் வெகுண்டேன். தங்களது மஹாயானக் கொள்கைகளையும், அஹிம்ஸா விரதத்தையும் நேரிடையாகச் சோதனையிடவே துறவி வேஷம் பூண்டு வந்தேன். இத் துறவியின் நெஞ்சில் வரும் போதிருந்த அழுக்காறுகள் அனைத்தும் இப்போது நீங்கி விட்டன'' என்றான் துருவசேனன். அவனது விழிகளில் ஆனந்தபாஷ்பம் சொரிந்தது.

மேற்சொன்ன சம்பவங்கள் நிகழ்ந்த பின்பே, ஹர்ஷ சக்கரவர்த்தி, தம் அருமை மகளான ஸுபாஷிணியை வல்லபி நாட்டு வேந்தனான துருவசேனனுக்குத் திருமணம் செய்வித்தார். அவ்வாண்டு நிகழ்ந்த பிரயாகை மோட்ச விழாவின்போது, சீனத் தூதருக்குக் கிடைத்த பரிசுகளில் சிறந்ததாகப் புகழ் கொண்டது ஸுபாஷிணியின் கைத்திறனால் உருவான புத்ததேவன்தான்!



அவனுடைய தாயார் 'ஸான்பொரைஸ்ட்' அடையாளமுள்ள துணி மட்டும் வாங்கியிருந்தால்...

உடம்புக்குப் பொருந்தாதபடி சுருங்கிப்போய் இறுகப்பிடிக்கும் உடைகளை அணிந்து அரிய வாய்ப்புகளை இழக்காதீர்கள்! நீங்கள் பருத்தி துணியோ அல்லது ரெடிமேட் உடைகளோ வாங்கும் பொழுது, அவைகளில் 'ஸான்பொரைஸ்ட்' ('Sanforized') அடையாளமிருக்கிறதாவெனக் கவனிக்கத் தவறாதீர்கள். இந்த அடையாளமிடப்பட்ட துணிகளில் தைய்த்த உடைகள் அநேக சலவைகளுக்குப் பிறகும் உடம்புக்கு பொருந்தாதபடி சுருங்காது!

லேபிளில் 'ஸான்பொரைஸ்ட்' அடையாளம் இருந்தால் உங்கள் உடைகள் உடம்புக்குப் பொருந்தாதபடி ஒரு பொழுதும் சுருங்காது!

'ஸான்பொரைஸ்ட்' என்ற சிறந்த செய்யப்பட்ட டிரேட் மார்க்கின் சொந்தக்காரர்களான க்ளுயட் பீபடி அண்டு கோ., இன்கார்ப்பரேட்டட் (வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு.எஸ்.ஏ.வில் இணைக்கப் பெற்றது) அவர்களால் இந்த விளம்பரம் வெளியிடப்பட்டுள்ளது. இந்த கம்பெனியின், சுருங்காது என்பதற்கான கடும் திட்டங்களுக்குட்பட்டுத் தயாரிக்கப்படும் துணிகள் மட்டுமே 'ஸான்பொரைஸ்ட்' டிரேட் மார்க் உபயோகிக்க அனுமதிக்கப்படுகிறது.

விபரங்களுக்கு: 'ஸான்பொரைஸ்ட்' ஸர்வீஸ்,
95, மேரீன் டிரைவ், பம்பாய்-2

அன்பின் வழி

ஏ.எஸ்.ராகவன்



வீடு மூன்றுபட்டுவிட்டது. அம்மாவும் பாட்டியும் ஒரு கட்சி; அப்பா ஒரு கட்சி; தாத்தா ஒரு கட்சி. எந்தக் கட்சியில் சேர்வதென்று மீனுவுக்குப் புரியவில்லை. மலங்க மலங்க விழித்துக் கொண்டு வாசலுக்கு வந்தாள். மாடிப்படி வளைவின் கீழ் 'லொட், லொட்' என்ற சத்தம் கேட்டது. தாத்தா வெற்றிலை பாக்கைக் கெட்டித்துக் கொண்டிருந்தார். அந்த நேரத்தில் அவருக்கு நாக்கும் மனமும் ஊறியிருக்கும் என்பது மீனுவுக்குத் தெரியும். ஆனால் அருகில் போய் நின்றும் தாத்தா அவளைத் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. அவரது பொக்கை வாயில் சிரிப்பு மலரவில்லை. கெட்டித்துக் கொண்டிருந்த வெற்றிலைக் காரத்திலேயே கண்ணாக இருந்தார்.

மீனுவுக்கு ரோஷம் வந்து விட்டது.

மாடிக்குப் போனாள். அங்கே பட்டாபி அறைக்குள் குறுக்கும் நெடுக்கும் நடந்து கொண்டிருந்தான். தாத்தாவைப் பற்றி அப்பாவிடம் முறையிட வேண்டும் என்று வந்தவள் நிலைப்படியிலேயே நின்று விட்டாள். 'இதென்ன, அப்பாவின் முகம் ஏன் இப்படிச் சிவந்திருக்கிறது? நடை ஏன் இப்படிப் படபடக்கிறது?' என்று வியந்தாள்.

பட்டாபி சட்டென்று நின்று, 'என்ன?' என்று கர்ஜித்தான்.

மீனு நடுங்கியே விட்டாள். "ஒன்றுமில்லையப்பா ...!" என்று கூறி விட்டு, வந்த சுவடு தெரியாமல், கீழே இறங்கி வந்து விட்டாள்.

கூடத்தில் பாட்டி இருந்தாள். அவள் மட்டும் மீனுவைப் பார்த்ததும் கையை நீட்டினாள். இது ஆறுதலாக இருந்தது, மீனுவுக்கு. அவள் மடியில் போய் உட்கார்ந்தாள். அதற்கு மேல் அவளைப் பற்றிப் பாட்டியும் கவலைப்படவில்லை. அம்மாவும் அவளும் என்னதான் பேசுவார்களோ!

"அடியே...!" வாசலிலிருந்து கிழவரின் குரல் வந்தது.

பாட்டி வாசலுக்கு வந்தாள். கூடவே மீனுவும் வந்தாள்.

"அவன் என்ன பேசப் போகிறான், பார்த்தாயா? நேற்று பிறந்த பயல்! இவனை நம்பியா நான் ஜீவனம் பண்ணிக்கொண்டிருக்கிறேன்!" என்றார் கிழவர்.

கிழவிக்குச் சங்கடமாகப் போய் விட்டது. "ஆனாலும் உங்களுக்கு இவ்வளவு கோபமாகாது ...." என்றாள்.

"ஓஹோ...... பிள்ளைக்குப் பரிந்து பேசுகிறாயோ! அந்நாளிலிருந்தே இப்படிப் பேசித்தான் அவனைப் பாழாக்கியாயிற்று!" என்றார் கிழவர்.

"ஆமாம்...என்னைச் சொல்வதென்றால் உங்களுக்கு எளிது. என்னவோ இருப்பது ஒன்றே ஒன்று. கண்ணே கண்ணு என்று நமக்கு அவன் ஒருவன் தான். ஏறுமாறாக இருந்தாலும் அனுசரித்துத்தான் போக வேணும்."

"அனுசரிக்காமலா இத்தனை நாட்கள் காலம் தள்ளியிருக்கிறது? வரவரத் தலைகீழாகப் போகிறதே, விவகாரமெல்லாம். உதறி எறிந்து பேசுகிறானே!"

"எனக்கு ஒன்றும் சொல்லத் தோன்றவில்லை. உங்கள் பாடு, உங்களுடைய பிள்ளை பாடு."

"ஏன்? உன்னுடைய பிள்ளை இல்லையோ அவன்?"

கிழவி கண்ணைப் பிசைந்தாள்.

"சரி, சரி. பெரிதாக நீ அழ ஆரம்பித்து விடாதே."

இந்தப் பேச்சும் அழுகையும் மீனுவை உறுத்தின. ஏன்? என்ன நேர்ந்து விட்டது வீட்டில்? எதற்காக இத்தனை அமளி நடக்கிறது?

இச் சமயம் மாடியிலிருந்து இறங்கி வந்தான் பட்டாபி. 'விர்'ரென்று

உள்ளே போனான். மனைவி என்னவோ சொன்னாளென்று அவனிடம் சீறிவிட்டு வாசலுக்கு வந்தான். கிழவர் உட்கார்ந்திருந்த வளைவின் கீழ் அவனுடைய செருப்புக்கள் கிடந்தன. அலட்சியமாகக் குனிந்து அதை எடுத்துப் போட்டுக் கொண்டு தெருவில் இறங்கினான்.

"பார்த்தாயா! செருப்பை என் மேலே இடித்துப் போட்டுக் கொண்டு போகிறான்! கொஞ்சம் நகரச் சொன்னால் நகர மாட்டேனா நான்! துளிக் கூட மரியாதை இல்லை. இனி ஒரு கணம் அவன் இங்கே இருக்கக் கூடாது. வந்ததும் சொல்லி விடு" என்று பொரிந்தார்.

"நீங்கள் சொல்வதென்ன? அவனே தான் போகிறேன் என்று சொல்லி விட்டானே!"

"ரொம்ப நல்லது. வேண்டுமானால் நீயும் போ!"

"எதற்காக இத்தனை கோபம்?"

"கோபமில்லை. என் நெஞ்சு குமுறுகிறது. எத்தனை பாடுபட்டிருப்பேன் இவனுக்காக! இத்தனையும் என் மீதே பாய்ந்து விட்டதே!"

கிழவி அதற்கு மேல் அங்கு நிற்கவில்லை. நின்றால் அவளுக்கும் தாங்காது. கிழவருக்கும் தாங்காது.

வீட்டிலிருந்து புறப்பட்ட பட்டாபி நேரே கீழத் தெருவுக்குப் போனான், அங்கே ஒரு வீடு காலி யிருப்பதாகக் கேள்விப்பட்டதன் பேரில். ஆனால் அந்த வீட்டை வேறு யாரோ வாடகை பேசி முடித்து விட்டார்களாம்.

இது இல்லாவிட்டால் வேறொன்று கிடைக்காமலா போகிறது! எப்படியும் வெளியேறுவது என்று தீர்மானித்தாகிவிட்டது. இனி தாமதிக்கக் கூடாது. இல்லா விட்டால் இந்தக் கிழம் கட்டைகளுக்குப் புத்தி வராது. சம்பாதித்துக் கொண்டு வந்து போடுவது அவனுடைய கடமை போலவும், அதை அதிகாரம் பண்ணிக் கொண்டு அமுல் நடத்துவது அவர்களுடைய உரிமை போலவும் அல்லவா நியாயம் பேசுகிறார்கள்! அவன் வெளியேறிய பிறகல்லவா தெரியும்? வயதானால் விவேகமும் வேண்டுமல்லவா? உபதேசம் என்ன வேண்டி யிருக்கிறது, உபதேசம்!

விஷயம் இதுதான். பட்டாபியின் தங்கை பட்டணத்தில் வாழ்க்கைப்பட்டிருக்கிறாள். அவளுடைய குழந்தைக்கு ஆண்டு நிறைவு வருகிறது. அதற்கு இருநூறு ரூபாய்க்கு மேல் 'பட்ஜெட்' தயாரித்தார் கிழவர். அவ்வளவுக்குத் தன்னாலாகாது என்றான் பட்டாபி.

"எப்படியாவது இதைச் செய்யாவிட்டால் நன்றாக இருக்காது. உன்னைப் போல அவளும் ஒரே பெண் எனக்கு" என்றார் கிழவர்.


"அதற்கு என்னை என்ன செய்யச் சொல்கிறீர்கள்? இருநூறு ரூபாய் இங்கே கொட்டியா கிடக்கிறது?"

அவன் பேசிய மாதிரி கிழவருக்குப் பிடிக்க வில்லை. "மனம் இருந்தால் மார்க்கமுண்டு. போன மாதம் திடீரென்று நூறு ரூபாய் வாங்க முடிந்ததே உன்னால்!" என்றார்.

அவர் எதைக் குறிப்பிடுகிறார் என்பதைப் பட்டாபி புரிந்து கொண்டான். அதைக் குறிப்பிட்டதுதான் அவனுக்குப் பிடிக்கவில்லை. அவனுடைய மைத்துனியின் திருமணத்துக்கென்று அலுவலகத்தில் நூறு ரூபாய் கடன் வாங்கியிருந்தான் சென்ற மாதம். "அதற்கும் இதற்கும் ஏன் முடிச்சுப் போடுகிறீர்கள்?" என்று சீறினான் பட்டாபி.

"நாம் போடாத முடிச்சை நீதான் போடுகிறாய்...பணம் எங்கிருந்து வரும் என்று எனக்குத் தெரியாதா? அதற்கு என்ன வழி என்று கேட்காமல் உதறிப் பேசுகிறாயே?"

"கேட்டு என்ன பிரயோசனம்? உட்கார்ந்த இடத்திலிருந்து ஏதாவது செலவு வைத்துக் கொண்டே இருப்பீர்கள். உங்களுக்கென்ன? உழைத்துக் கொண்டு வந்து போடுபவனுக்கல்லவா அதனுடைய அருமை தெரியும்!"



கிழவர் பொங்கி விட்டார். "சரிதானடா...என் ஆயுசில் எந்த ஆபீசிலாவது வேலை பார்த்திருக்கிறேனா என்ன, அருமை தெரிவதற்கு?...புதிதாக நீதான் உழைத்துக்கொண்டு வந்து போட ஆரம்பித்திருக்கிறாய்... பேசுகிறான்,

பார்...தங்கைக்குச் செய்ய வழியில்லை என்றால், கேட்பவர்கள் சிரிக்க மாட்டார்களா?'' என்றார்.

'' சிரிக்கட்டுமே ! எனக்கென்ன ?''

'' ஆமாம். உனக்கென்ன ? பெற்றவர்களுக்குத்தானே அந்த அவமானம் !''

'' அப்பா! உங்கள் பேச்சும் போக்கும் எனக்குப் பிடிக்கவில்லை. சீக்கிரமே இதற்கெல்லாம் ஒரு முடிவு ஏற்பட்டுவிடும். கவலைப் படாதீர்கள். உங்கள் விருப்பம் போல் இந்த வீட்டிலேயே என்னென்ன செய்ய வேண்டுமோ, செய்து கொண்டு இருங்கள். நான் போகிறேன்.''

பட்டாபி உதறி விட்டு வந்து விட்டான்.

மனத்தில் இவ்வளவையும் அசை போட்டுக் கொண்டு நடந்தவன், '' யாரு, பட்டாபியா ?'' என்ற குரல் கேட்டு நின்றான்.

எதிரில் முனிசிபல் உயர் நிலைப் பள்ளியின் மாஜி தலைமை ஆசிரியர் சர்மா, நின்றார். '' நமஸ்காரம், சார்!'' என்று கைகூப்பினான்.

'' ஏண்டா, அப்பா சௌக்கியமாக இருக்கிறாரா ?''

'' இருக்கிறார்,ஸார்! ஒருநாளைக்கு வீட்டுக்கு வாருங்களேன் !''

'' ஆகட்டும். கட்டாயம் வருகிறேன்... ஆனால் என்னைப் பார்த்ததும் உன் அப்பா விடமாட்டார். ஓயாமல் நன்றி சொல்லுவார்...உன்னை 'பாஸ்' பண்ண வைப்பதென்றால் இலேசாக இருந்ததா ? கழிசடையாகத் திரிந்தாய்...எப்படியோ நல்ல நிலைமைக்கு வந்து விட்டாய். போகிறது...சௌக்கியமாக இருந்தால் சரி. எனக்கு வேறென்ன வேணும் ?''

அவர் போனதும் பட்டாபி மேலே நடந்தான். மனம் பழைய நாட்களில் மிதந்தது. வாஸ்தவத்தில் பட்டாபி அப்போதெல்லாம் முரட்டுத்தனமும், பிடிவாத குணமும் ஒருங்கே அமைந்த கழிசடையாகத்தான் இருந்தான். படிப்பாவது மண்ணாவது ! மாதம் இருபத்தைந்து ரூபாய் கொடுத்து 'டியூஷன்'. அந்த வாத்தியாரைக் கண்ணில் விரலை விட்டு ஆட்டுவான் ! அவர் இருபத்தைந்து ரூபாய்க்காக ஆடாத ஆட்டமெல்லாம் ஆடுவார். அது ஒரு காலம்! எப்படியோ அவனும் தேறிவிட்டான் ! அதற்காக அவனுடைய அப்பா கால் தேய நடந்திருக்கிறார், இந்தத் தலைமை ஆசிரியர் வீட்டுக்கு !

இதை எல்லாம் அவன் மறக்கவில்லை.

குடும்ப வைத்தியர் நாராயணனின் வீடு நெருங்கியது. அவர் வெளியே நின்று கொண்டிருந்தார். பட்டாபியைக் கண்டதும், '' வா, வா...நடராஜன் வந்திருக்கிறான், தெரியுமோ ?'' என்றார்.



பூர்மாஷெல் பிரசார அதிகாரி திரு சி. எம். சங்கரலிங்கம் அவர்களின் குமாரி தனலட்சுமியின் பரதநாட்டிய அரங்கேற்றம் செப்டம்பர் 27ந் தேதி சென்னை மியூசியம் தியேட்டரில் சென்னை நீதி அமைச்சர் திரு சி. சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் விமரிசையாக நடந்தது.

நடராஜன் பட்டாபியின் பள்ளித் தோழன். இவனுக்கு அவன் நேர் எதிர். ஆனால் ஒரு முறை இருவருமே டைபாய்டில் சேர்ந்தாற் போல் படுத்தார்கள். பிழைத்து எழுந்தார்கள்.

'' அப்பா சௌக்கியம் தானே ?''

'' உம்...''

'' ஏன், என்னவோ போலிருக்கிறாய் ?''

'' ஒன்றுமில்லையே, டாக்டர் !''

'' நடராஜன் வந்ததும் வராததுமாக உன்னைத்தான் விசாரித்தான்......டைபாய்டை அவன் மறக்கவில்லை,..உண்மையாகச் சொல்கிறேன், பட்டாபி. அந்த முறை நீங்கள் இருவரும் பிழைப்பீர்கள் என்கிற நம்பிக்கை எனக்கே இல்லை. இன்னமும் என் மருந்தால் நீ பிழைத்ததாக நான் எண்ணவில்லை.''

பட்டாபி வெறுமனே சிரித்தான்.

'' உன் அப்பா எப்படித் தவித்துப் போனார், தெரியுமா ! பிழியப் பிழிய அழுவார். அவருடைய பிரார்த்தனை தான் உனக்கு உயிர் தந்தது என்று நான் நினைக்கிறேன், பட்டாபி !''

பட்டாபி நெகிழ்ந்து போனான். '' வாஸ்தவம், டாக்டர்! அப்பாவுக்கு என் மீது உயிர் !''

''உயிர் என்று சாதாரணமாகச் சொல்கிறாயே ? சகலமும் நீ தானே அவருக்கு.

இத்தனைக்கும் அந்தக் காலத்தில் நீ தறுதலையாகத் திரிந்தாய்!'' டாக்டர் கட கட வென்று சிரித்தார். ''அது போகட்டும். இப்போது நீ பார்க்கும் உத்தியோகம் எப்படி வந்தது என்று நினைக்கிறாய்? அதன் ரகசியம் எனக்கல்லவா தெரியும்!''

பட்டாபி நிமிர்ந்து உட்கார்ந்தான்.

''ஸ்மித்னு ஒருவெள்ளைக்காரத் துரை இருந்தான் அப்போ, உங்கள் கம்பெனி மானேஜராக. அவனுக்கு எதெது பிடிக்கும் என்று ஒரு ஜாபிதா தயார் செய்து, காசைக் காசென்று பாராமல் செலவு செய்து, அவனுக்கு அவ்வளவையும் கொண்டு போய் அபிஷேகம்செய்து, காலைப் பிடித்துக் கெஞ்சி அல்லவா வாங்கினார் வேலை!... அதெல்லாம் பெரிய கதை!''

பட்டாபி எழுந்துவிட்டான்- ''நான் வருகிறேன், டாக்டர்!''

''ஏன், அதற்குள் புறப்பட்டுவிட்டாய்?''

''அவசர காரியம் இருக்கிறது.''

பட்டாபி ஓட்டம் ஓட்டமாக வீட்டுக்கு வந்தான். என்ன பேதைமை! வீட்டை விட்டு அவன் வெளியேறுவதாவது! அது எப்படி முடியும்? அவனுக்கு உயிர், கல்வி, வாழ்வு இவ்வளவையும் தந்தவரை அலட்சியப் படுத்திவிட்டு அவன் வெளியேறுவதென்னவோ சுலபம்தான். ஆனால் அவ்வளவும் அவனுகப் பெற்றவையா? அவர் தந்தவை அல்லவா? அவற்றைக் கொண்டு வெளியேறுவது ஒரு சாமர்த்தியமா?

''அப்பா! என்னை மன்னித்து விடுங்கள்...'' என்று கூறிக் கண் கலங்க அவர் முன் நின்றான் பட்டாபி.



கிழவர் கலங்கி விட்டார். ''ஏன்? வீடு கிடைக்கவில்லையோ?'' அப்போதும் பெருமையின் பிடி குறையவில்லை.

''வீடு கிடைத்தது. ஆனால் நான் போகப் போவதில்லை.''

''ஏன்?''

''எனக்கு விருப்பமில்லை. உங்களை இந்த நிலையில் விட்டுச் செல்வது சரியில்லை.''

''இதோ பார். எனக்கு உதவி செய்வதற்காக நீ இங்கிருக்க வேண்டுமென்பதில்லை. உன் விருப்பம் போல் போகலாம்'' என்றார் கிழவர்.


அவன் மாடிக்குப் போனான். சிறிது நேரத்தில் திரும்பி வந்தான். கையில் ஒரு வெள்ளைத் தாள் இருந்தது. ''என்னை நீங்கள் நம்ப மாட்டீர்கள். ஆகவே நான் புறப்படவேண்டியது தான். அதற்கு முன் ஒரு நிபந்தனை. இந்தக் கடிதத்தை ஆபீஸுக்கு உங்கள் கையாலேயே அனுப்பி வையுங்கள்'' என்றான்.

கிழவர் அதை வாங்கிப் பார்த்தார். ராஜிநாமாக் கடிதம்! ''என்னடா இது,பட்டாபி?'' என்று அலறினார்.

''ஆம், அப்பா...நீங்கள் தந்த வாழ்வின் அகந்தையில் நான் இங்கிருந்து புறப்படத் துணிந்தேன்... அந்த உரிமை எனக்கு இல்லை. சகலமும் உங்களுடையதாக இருக்கும்போது, என்னிடம் மீதம் என்ன இருக்கிறது?''

கிழவரின் கண்களில் நீர் பெருகியது. பிள்ளையைப் பார்த்தார். ''நான் பட்டபாடெல்லாம் வீணாகவில்லையடா, பட்டாபி...'' என்று விம்மினார்.

இப்போது மீனுவின் பாடுதான் சங்கடமாகி விட்டது. எங்கு சென்றாலும் அன்பின் இரக்கம் அவளைத் திக்குமுக்காடச் செய்கிறது!


நரஸூ காபி
அருந்தி அதன்
பிரத்யேகமான
ருசியை
அனுபவியுங்கள்
நரஸுஸ்
மான்யுபாக்சரிங்
கோ. பிரைவேட் லிட்.
சேலம் & சென்னை
NCZ-32 ATH


அமிர்தாஞ்சனம்
வலிகளை
அறவே
போக்கிவிடுகிறது
AMRUTANJAN
Pain Balm
மிகச் சக்தி வாய்ந்த வலி
நிவாரணியென, 65 வருடங்
களுக்கு மேலாக நற்பெயர்
பெற்றுள்ளது அமிர்தாஞ்சனம்
எல்லா விதமான தலைவலிகள்,
சுளுக்கு, இடுப்புவாத நோய்,
தலைவலி, ஜலதோஷம், முதுகுவலி,
பல்வலி எல்லாவற்றிலிருந்தும்
உடனடி நிவாரணம் அளிக்கிறது.
வலியாற்றிய பிறகு எவ்வித வினையும்
விளைவிக்காது; காரணம், வலிகண்ட இடத்
தில் மட்டுமே உபயோகிக்கப்படுகிறது.
பரீட்சித்துப் பாருங்களேன்.
முதல் மருந்தாக உபயோகித்துப்
பாருங்கள். 9 இல் 7 வகை
வலிகளை அது அறவே
போக்கிவிடுகிறது.
அமிர்தாஞ்சன்
லிமிடெட்
சென்னை-4
மற்றும் பம்பாய் 1, கல்கத்தா 1
Amrutanjan INHALER
அமிர்தாஞ்சனம் இன்ஹேலர் ஜலதோஷத்தையும்
மூக்கடைப்பையும் ஆற்றுகிறது
AL-58 4C TAM.



எங்கே

பெண்கள் தங்களுக்குப் பிடித்த வாலிபர்களைக் கல்யாணம் செய்து கொள்ளலாம். திருமணம் செய்து கொண்ட பெண், கணவனுக்கு வெறும் அடிமையல்ல. உயிர்த்துணை; வாழ்க்கைக்கு ஊன்றுகோல்; ஜீவனிலே ஒரு பகுதி. உலகத்துக்கு ஆதாரமாகிய கடவுள் ஆண் - பெண் என்று இரண்டு கலைகளுடன் விளங்குகிறது. இரண்டும் பரிபூரண சமம். பார்க்கப் போனால் ஆணைவிடப் பெண்ணே அணுவளவு உயர்வாகக் கூறலாம். — கவியரசர் பாரதியார்.

பெண்ணுக்கு ஜீவன் உண்டு; மனம் உண்டு; ஐந்து புலன்கள் உண்டு; அவர்கள் உயிரற்ற இயந்திரங்கள் அல்ல. உயிருள்ள செடிகொடிகள் போலவும் அல்ல. சாதாரணமாக ஆண்களைப் போலவேதான் பெண்களும். இதை எங்கே எல்லா ஆண்களும் நினைத்துப்பார்க்கிறார்கள்? பெண்களைச் செக்குமாடுகளாக நினைக்கிறார்கள் சிலர். பஞ்சடைத்த தலையணையாகக் கருதுகிறார்கள் வேறு சிலர். இப்படி நினைக்கின்ற புண்ணிய ஆத்மாவின்கரம் பிடித்த அபாக்கியவதி நான்.

ஆறு வயதுச் சிறுமியாக, உலகம் தெரியாத பச்சிளம் பாலகியாக இருக்கும்போதே எனக்குக் கஷ்டகாலம் ஆரம்பமாகிவிட்டது! என்மீது அன்பையும் ஆசையையும் வைத்திருந்த என் தந்தை காலமாகிவிட்டார். தந்தையை இழந்த நான் என் அருமைத் தாயாரின் அன்பில் வளர்ந்தேன். தந்தையைப் பிரிந்த ஏக்கம் தெரியாமல் இருப்பதற்காக என் தாயும் தமக்கையும் அண்ணனும் என் மீது அன்பை வாரிச் சொரிந்தனர். அதிக வசதிகள் இல்லாத ஒரு சாதாரண கிராமத்தில் பிறந்தேன். அங்கு எங்களுக்கு ஏராளமான நிலபுலன்கள் உண்டு. கிராமத்திலேயே எங்கள் வீடு ஒன்றுதான் மேடைவீடு. மற்ற வீடுகள் எல்லாமே குச்சு வீடுகள்தான். வீட்டுக்குள் இருக்கும் வரையில் வெளி உலகத்தைப் பற்றி ஒன்றும் தெரியாது. உலகம் எல்லாமே மகிழ்ச்சியுடன் இருப்பதுபோல் தான் இருக்கும். வீட்டை விட்டு வெளியே வந்தாலோ அந்தக் கிராமத்தின் சூழ்நிலையும் வறுமையில் அடிபட்ட மக்களின் முகங்களும் அவர்கள் அறியாமையும் மனத்தை என்னவெல்லாமோ செய்துவிடும். இந்தச் சூழ்நிலையில் நான் வளரக்கூடாது என்பதற்காக என் தாயார், நகர்ப்புறத்திலுள்ள பெரிய தாயார் வீட்டுக்கு என்னை அனுப்பி வைத்து விட்டாள். பெரிய தாயார் வீடு எனக்குச் சொர்க்கலோகம் போலிருந்தது. என் பெரியப்பா எனக்குச் சொந்தத் தகப்பனாராகமாறினார். பெரியம்மா பெற்ற அன்னையைவிட அதிக அன்பு செலுத்த ஆரம்பித்தாள். ஏராளமான அண்ணன்மார்கள் வேறு எனக்கு அங்கு கிடைத்தார்கள். அவர்கள் எல்லாரும் என்னைப் போற்றிப் போற்றி வளர்த்தார்கள். விதம்விதமான ஆடைகள், அலங்காரங்கள், வேடிக்கைகள், விளையாட்டுகள், இப்படிக் குதூகலமான சூழ்நிலையில் அண்ணன்மார்களின் அருமைத் தங்கையாக இருந்து, அம்மா, பெரியம்மா இவர்களின் பேகம் பொற்சித்திரமாக விளங்கிக் கவலையென்பதே தெரியாமல் ஆனந்தமாக வளர்ந்தேன்.

பள்ளிக்கூடத்திலே நான்தான் அழகி. இதை நானாகச் சொல்லவில்லை. என்னுடன் படித்த மாணவிகளே சொல்லியிருக்கிறார்கள். வாய்விட்டல்ல; வாய்மொழியை விட அர்த்தபுஷ்டி நிறைந்த நயன மொழிகளால் தான். இதையெல்லாம் உணர்ந்த நான் என்னை அழகு நிறைந்த தேவகன்னிகையாக நினைத்துக் கொண்டேன். என் உள்ளத்தில் கர்வம் ஓங்கி நின்றது. என் கதையைப் படிக்கும் நேயர்கள் மனத்தில் பொறுமை உண்டுபண்ணக்கூடிய எத்தனையோ சூழ்நிலைகளும் எனக்கு ஏற்பட்டிருக்கின்றன. ஆனால் சத்தியமாகச் சொல்லுகிறேன். அத்தகைய சம்பவம் எதுவும் நடைபெற்று விடவில்லை. காரணம்: நான் தமிழ்ப் பெண். பண்பாடு நிறைந்த உயர்ந்த குடும்பத்தில் பிறந்தவள். அந்தக் குடும்பத்துத் தமிழ்ப் பெண்களுக்குரிய தெய்வத் திருப்பண்பு என்னைக் காத்து நின்றது.

பதினைந்து வயது வரையில் கவலையும் கஷ்டமும் துன்பமும் துயரமும் தெரியாத கன்னிப் பெண்ணாக வளர்ந்தேன். மான்குட்டி போல் துள்ளி விளையாடி வந்தேன். என் நடையைப் பார்த்து, என் பேச்சைக் கேட்டு, என் திறமையைக் கண்டு எல்லாரும் என்னை வானளாவப் புகழ்வார்கள். நாடகம், சினிமா, சங்கீதம், நாட்டியம் இவைகளைக் கேட்டும் பார்த்தும் மகிழ்ந்து வந்தேன். ஆனால் இவையெல்லாம் இன்று என் வாழ்வில் பழங்கதையாகிக் கனவாகித் தேய்ந்து மறைந்து விட்டன.

என் இதயத்தில் எத்தனை எத்தனையோ இன்பக் கோட்டைகள் கட்டிவைத்திருந்தேன். அந்தக் கோட்டைகளெல்லாம் ஒருநாள் இடிந்து நொறுங்கி விட்டன.





போவேன்!

எல்லாருமாகச் சேர்ந்து என்னைப் பாழும் கிணற்றில் தள்ளி விட்டார்கள். எனக்கு ஏதோ நன்மை செய்வதாக எண்ணி, எதிர்காலத்தில் நான் எல்லாவகையிலும் சந்தோஷப்படப் போகிறேன் என்று நம்பி அந்த ஏற்பாட்டைச் செய்தார்கள். 'ஆயிரம் காலத்துப் பயிர்' என்று சொல்லும் அந்தப் பெரிய வைபவத்துக்காக ஊரைக் கூட்டினார்கள், உற்றாரைக் கூப்பிட்டார்கள். நண்பர்களுக்கு அழைப்பு அனுப்பி வைத்தார்கள். நாளும் கிழமையும்பார்த்து மணவறையில் என்னை அமரவைத்தார்கள். என் கழுத்தில் 'அவர்' தாலியைக் கட்டினார். மூன்று முடிச்சுக்களை அழுத்தமாகப் போட்டார். கெட்டிமேளம் கொட்டியது. எல்லாரும் என்னை ஆசீர்வதித்தார்கள். எனக்கு என்னவோ அப்பொழுதே அழுகையும் ஆத்திரமும் பொங்கிக்கொண்டு வந்தன. ஆனால் என் உணர்ச்சிகளை யார் பொருட்படுத்தினார்கள்? என்னைச் சுற்றிச் சுற்றி வந்து கேலி செய்தார்கள். நான் ஏதோ ஆனந்தக் கண்ணீர் வடிப்பதாகச் சொல்லி நையாண்டி செய்தார்கள். அவரோ என்னைத் தம்முடைய உடைமைப் பொருளைப் பார்ப்பது போல, பசியோடு இருக்கும் கொடிய புலி தன் இரையை நோக்குவது போல வெறியோடு பார்த்தார். அப்பப்பா! அந்தப் பார்வையில்தான் என்ன கொடுமை!

'கல் என்றாலும் கணவன், புல் என்றாலும் புருஷன்' என்ற சர்வாதிகாரப் பழமொழிக்கு அடங்கி ஒடுங்கி நடக்க வேண்டிய ஒரு அடிமைப் பொருளாக என்னைப் பார்க்க ஆரம்பித்து விட்டார். அன்றுமுதல் இன்றுவரை என்னை ஒரு உணர்ச்சியற்ற கல்லாக, பகுத்தறிவற்ற புல்லாக எண்ணிப் படாதபாடு படுத்திவருகிறார். இந்தக்கொடுமைகளுக்கெல்லாம்எப்போதுதான் முடிவு கிடைக்குமோ?

** ** **

பத்து மாதங்கள் சுமந்து பெற்ற தாயை மறந்து, பெற்ற மகளினும் மேலாக வளர்த்த என் பெரியம்மாவைவிட்டு, என்மீது அன்பைச் சொரிந்த அண்ணன்மார்களைப் பிரிந்து, என் மகிழ்ச்சிக்காக எல்லாவற்றையும் தியாகம் செய்யும் பண்புள்ள என் சகோதரிகளை விட்டு, நான் வளர்ந்து விளையாடிய நகரையும் விட்டு, புதிய நகருக்கு வந்தேன். தெரியாத ஊருக்குள் புகுந்தேன். முன்பின் தெரியாத மனிதர்களை என்னைச் சேர்ந்தவர்களாக ஏற்றுக்கொண்டேன். நான் வளராத வீட்டு வாசலில் கால் அடி எடுத்து வைத்தேன். தாயின் அன்புக்குப் பதில் மாமியின் கொடுமை என்னை வரவேற்றது. பார்க்குமிடமெங்கும் மலர்ந்த முகத்துடன் அன்பைக் கொட்டிய அண்ணன்மார்களுக்குப் பதில் அவருடைய அதிகாரம் என்னை ஆட்டிப் படைத்தது. இது போதாது என்று இன்னும் இரண்டு பேர், என் கணவருக்கு உறவினர்களாம்! அவர்கள்தான் வீட்டின் நிர்வாகஸ்தர்கள். அவர்கள் ஆணைக்கும் உட்பட்டுத்தான் நான் அவர் வீட்டில் ஏவல் செய்ய வேண்டும். ஆமாம்; இது அவர் வீடுதான்.



பகீரதன்

'என் வீடு' என்று சொல்லிக்கொள்ள எந்த உரிமையும் எனக்கு அந்த வீட்டில் இல்லை. சமயம் நேரும்போது அவரும் இது 'என் வீடு' 'என் வீடு' என்று சொல்லிச் சொல்லிக் குத்திக் காண்பிப்பார். சுருக்கமாகச் சொன்னால் அந்த வீட்டில் அவர் தந்தையோ, அவர் பாட்டனோ யாருமே பெண்களைப் போற்றி வாழ்ந்தவர்களில்லை என்று தெரிந்தது. பெண் என்றால் அது குழந்தைகளை உற்பத்தி செய்யும்' இயந்திரம், சமையல் செய்து போடும் பணி ஆள் என்ற எண்ணத்தை உடைய உயர்ந்த குடும்பம்! இந்தக் குடும்பத்தில் வந்த அவரிடம் அன்பையும் பண்பையும் எதிர்பார்க்க முடியுமா?

நான் செய்த பாவம், பிறக்கும்போதே எல்லா வசதிகளும் படைத்த பெரிய குடும்பத்தில் பிறந்து தொலைத்து விட்டேன். செல்வமும் செல்வாக்கும் உள்ள குடும்பத்தில் பிறந்துவிட்டதால் என்னை யாரும் சமையல் அறையின் பக்கமே போகவிட்டதில்லை. பிறந்த நாள் முதல் அடுப்பங்கரையையே எட்டிப் பார்க்காத நான் இப்பொழுது அடுப்படியில் கிடந்து அவதிப்படுகிறேன். என் தாயின் அன்பு மொழியைக் கேட்டு ஆனந்தக் கண்ணீர் விட்ட நான் இப்பொழுது மாமியின் கடுசொற்களால் துயரக் கண்ணீர் வடிக்கிறேன். வீணையின் நாதத்தையும் தமிழ் இசையின் இனிமையையும் கேட்ட காதுகள் அவருடைய பண்பாடற்ற வசைமொழிகளைக் கேட்டு வாட ஆரம்பித்து விட்டன. நல்லவேளை இந்த வீட்டில் வேலைக்காரர்கள் தொல்லை இல்லை. ஒன்றுக்கு மூன்றாக வேலையாட்கள் வைத்துக் கொள்ள வசதி இருந்தும் அவர் ஏனோ வைத்துக் கொள்ளவில்லை. ஏன்? நான்தான் ஒருத்தி உழைப்பதற்குப்புதுவேலைக்காரியாக வந்துவிட்டேனே!

இத்தனை துன்பங்களையும் துடைத்து விட்டிருப்பேன், அவர் மட்டும் என்மீது அன்பு காட்டி யிருந்தால்! இத்தனை கொடுமைகளையும் மகிழ்ச்சியோடு உதறித் தள்ளி யிருப்பேன் அவர் ஆசையோடு என்னிடம் நேசம் காட்டி யிருந்தால். அதற்குத்தான் நான் கொடுத்து வைக்காத பாவியாகிவிட்டேனே.

என்னுடைய துரதிர்ஷ்டத்தைப் பற்றி என்னத்தைச் சொல்ல? அவருடைய போக்கே புரியாத புதிராக இருக்கிறது. என்னால் ஏதாவது காரியம் ஆகவேண்டுமானால் அப்போது மட்டும் பேசுவார். அந்தப் பேச்சும் எப்படியிருக்கும்? கடுமையும் கட்டளையுமாகத்தான் இருக்கும். அதிகாரமும் ஆணவமும்தான் அதில் துள்ளித் துடிக்கும்.

அடுத்த வீட்டில், எதிர்த்த வீட்டில், அக்காள் வீட்டில், அண்ணன் வீட்டில் அவர்கள் கணவனும் மனைவியும் கொஞ்சிக் குலாவுவதைப் பார்த்திருக்கிறேன். அதைப்போல் நாமும் நம்முடைய கணவருடன் ஆசையுடன் [பேசமாட்டோமா என்று என் இதயம் துடிக்கும். ஆவலோடு அவர் முன்னால் போய் நிற்பேன். அவர் என்னை ஏறெடுத்தும் பார்க்க மாட்டார். என் பரிதாப நிலையை எண்ணி நான் உள்ளம் குமுறிக் குமுறித் தனிமையில் உட்கார்ந்து கண்ணீர் விடுவதைத் தவிர வேறு ஒன்றும் செய்ய முடியாமல் தனியாய்த் தவிப்பேன்.

அவர் அணிந்து கொள்வதற்கு வேண்டிய உடைகளை எல்லாம் நான்தான் கொண்டு போய்க் கொடுக்க வேண்டும். நன்றாக உடுத்திக்கொண்டு நினைத்தபோதெல்லாம் வெளியில் போவார். ஹோட்டலுக்கும் சினிமாவுக்கும் போகாத நாளே இருக்காது. அப்பொழுதெல்லாம் நாமும் அவருடன் போக மாட்டோமா என்று என் பேதை உள்ளம் ஏங்கித் துடிக்கும். என்னையும் மறந்து, நாம் எங்கிருக்கிறோம் என்ற சூழ்நிலையையும் மறந்து ' சினிமாவுக்கா போகிறீர்கள்?' என்று ஆசையோடு கேட்டுவிடுவேன். அடுத்த கணம் அவருடைய முகம் கர்ணகடூரமாக மாறிவிடும். அனலைக் கக்கும் அவர் முகத்தைப் பார்க்கப் பயங்கரமாக இருக்கும். காதால் கேட்க முடியாத கடுசொற்களை என்மீது அவர் அள்ளி வீசுவார்.

''ஆமாம்! சினிமாவுக்குத்தான் போகிறேன். உன் உத்தரவு பெற்றுக்கொண்டுதான் கிளம்ப வேண்டுமோ ?'' என்று 'சள்'ளென்று விழுவார். என் சப்த நாடியும் ஒடுங்கிப் போகும். நான் நடுநடுங்கிப் போவேன்.



** ** **

அவருக்கு எந்தப் புண்ணியவான்தான் எம். ஏ. பி.எல். என்ற பட்டத்தைக் கொடுத்தானோ? அந்தநாளு எழுத்துப் பட்டத்துக்கும் அவருக்கும் ஒரு சம்பந்தமும் இல்லை. என் பெரியப்பா சொல்லுவார், 'அறிவும் பண்பாடும் வேறு. இந்தக் காலத்துப் பட்டப் படிப்பு வேறு. கழுதைகள் கூட நினைத்தால் பி. ஏ., எம். ஏ. பட்டம் வாங்கிவிடும்' என்று. அடாடா! பெரியப்பா வாக்குத்தான் எவ்வளவு அனுபவம் நிறைந்தது. ஊருக்கெல்லாம் நியாயம் சொல்வார். வார்த்தைக்கு வார்த்தை பழமொழிகளாகக் கொட்டுவார். கேட்போர் அவர் அறிவைக் கண்டு திகைக்கும்படியாக நடந்து கொள்வார். ஆனால் வீட்டில் தம் மனைவியிடம் மட்டும் அவருக்கு நியாயமாக நடந்து கொள்ளத் தெரியாது. இத்தனைக்கும் என் தாயார் வீட்டில் யாரும் அவர்தான் உலகில் இல்லாத அபூர்வ மாப்பிள்ளை என்று அவரைத் தேடிப் போய் நிற்கவில்லை. என்னைத் திருமணம் செய்துகொள்ள அவர்தான் செய்யாத ஜால

மெல்லாம் செய்தார். அப்பொழுது எனக்கு பதின்மூன்றுவயது தான் நிரம்பி யிருந்தது. எப்படியாவது என்னைக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டுமென்று ஒற்றைக்காலில் நின்றார். எங்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் வீட்டுக்கெல்லாம் சென்று தம்முடைய கௌரவத்தைக் காண்பித்துக் கொண்டு நல்ல பிள்ளை போல் வேஷம் போட ஆரம்பித்தார். என் சகோதரியையும் அவள் கணவரையும் கரையாய்க் கரைத்தார். அவர்களும் அவருடைய வெளி வேஷத்தில் மயங்கி விட்டனர். என்னை அவருக்குக் கொடுத்தால் நான் ரொம்பவும் சந்தோஷமாக இருப்பேன் என்று நம்பி விட்டனர். இன்று அவர்கள் நம்பிக்கை நாசமாகப் போய் விட்டது. என்னை அவருக்குக் கொடுப்பதற்குப் பாடுபட்ட அவர்களைக்கூடத் தமக்கு ஆகாதவர்களாக நினைத்து விட்டார்.



வீட்டில் அவர் வைத்ததுதான் சட்டம். வேலை கெட்ட வேலையில் நாலு தடியன்களை அழைத்து வந்து 'இவர்கள் எல்லாம் என் அருமை நண்பர்கள்' என்று சொல்லிச் சமைத்துப் போடச் சொல்லுவார். அவர்களுடன் சேர்ந்து சிரித்து விளையாடிக் கொண்டு சாப்பிடுவார். அவர்கள் போன பிறகு முகத்தை 'உம்' என்று வைத்துக் கொண்டு உட்கார்ந்து விடுவார். ஏதாவது கேட்டால் எரிந்து விழுவார்.

என்னுடைய தமையனோ, தமக்கையோ என்னைப் பார்க்க வந்திருக்கும்போது அவர்களுக்குக் காப்பி போட்டுக் கொடுப்பேன். என் கையால் காப்பி போட்டுச் சாப்பிடுவதில் அவர்களுக்குத் தனி ஆனந்தம். அந்தக் காப்பியைச் சாப்பிட்டு விட்டு வாயாரப் புகழ்ந்து செல்வார்கள். இந்தப் பேச்சைக் கூட அவரால் பொறுக்க முடியாது. அவர்கள் சென்றபிறகு 'உன் அப்பன் வீட்டிலிருந்து கொண்டு வந்தாயோ! வீட்டுச் சாமான்களை ஏன் இப்படிப் பாழடிக்கிறாய்?' என்று சீறி விழுவார். என் விதியை எண்ணிக் கண்ணீர் வடிப்பதைத் தவிர வேறு என்ன செய்வேன்? 'என் கணவர் கொடுமைக்காரர்' என்று நான் யாரிடம் சொல்லிக் கொள்வேன்? அவர்தான் படித்துப் பட்டம் பெற்றவர் ஆயிற்றே! அதிலும் காங்கிரஸ்காரர்; காந்திமகானிடம் பக்தி கொண்டவர். ஊரெல்லாம் அவரை 'நல்லவர்!' என்று போற்றுகிறது. இந்த நிலையில் என் சொல் அம்பலம் ஏறுமா? என்னைப்போல அவரை நன்கு உணர்ந்தவர்களும் சிலர் இருக்கத்தான் செய்தார்கள். அவர்களில் யாராவது அவருடைய கருமிக் குணத்தைப் பற்றியும், அறியாமையைப்பற்றியும், அகம்பாவத்தைப்பற்றியும் சொல்லி விட்டால் என்னால் அதைக் காது கொடுத்துக் கேட்க முடியாது. என் மனம் கிடந்து அடித்துக் கொள்ளும். என்ன இருந்தாலும் அவர் என் கணவர் அல்லவா?

ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாகத் தமிழ் நாட்டுப் பெண்கள் இரத்தத்தில் ஊறி வந்திருக்கும் தெய்வத் தமிழ்ப் பண்பல்லவா இது. என்னிடம் உள்ள அந்த உயர்ந்த பண்பாட்டை அவர் தமக்குச் சாதகமாக உபயோகப்படுத்திக் கொண்டு என்னைப் படுத்தி வைக்கும் பாட்டைச் சொல்லி முடியாது.

அவருடைய குண விசேஷங்களை அறியாத என் கிராமத்துப் பண்ணையாட்கள் அன்போடு என்னைப் பார்க்க வருவார்கள். வரும்போது அவர்கள் வெறுங் கையோடு வர மாட்டார்கள். பரங்கிக்காய் என்றும் பூசணிக்காய் என்றும் மாங்காய் தேங்காய் என்றும் ஏதாவது கொண்டு வருவார்கள். 'சின்னம்மாவுக்கு என்ன குறை? வக்கீல் வீட்டு அம்மா, பெரிய பண்ணை எசமானி' என்று பெருமையோடு சொல்லுவார்கள். அவர்கள் அன்பு முகங்களைப் பார்க்கும்போது என் இதயம் எல்லாம் பூரிக்கும். இந்த ஏழை எளியவர்கள் காட்டும் பரிவுகூட 'அவர்' என்னிடம் காட்டமாட்டேன் என்கிறாரே என்று ஏங்குவேன். அவர்கள் 'போய் வருகிறேன்' என்று சொல்லிக் கொள்ளும்போது 'வெற்றிலை பாக்கு வாங்கிச் சொல்லுங்கள்' என்று சொல்லி இரண்டணாக் காசு கொடுக்கக் கூட என்னிடம் ஒன்றும் இருக்காது. இந்த அவமானத்தை என்னென்று சொல்வது? அவர் என்னிடம் என் செலவுக்கென்று காலணா கூடக் கொடுப்பதில்லை. அப்படி எப்போதாவது ஒன்றோ இரண்டோ கொடுத்தாலும் அதற்கு ஆயிரம் கணக்கு. அப்படியே கணக்கு எழுதிக் கொடுத்தாலும் அது சொத்தை, இது சொள்ளை என்று நூறு குற்றச்சாட்டு. இந்த நிலையில் நான் வெறும் வார்த்தைகளால் அவர்களை உபசரித்து அனுப்புவதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்? ஏழை மக்களுக்கு அள்ளி அள்ளிக் கொடுத்த என் கை இப்பொழுது வெறுங் கையாகப் போன வேதனையை நான் எப்படி வெளியில் சொல்லிக் கொள்வேன்? வக்கீல் ஐயா, பெரிய தனக்காரர். தம் மனைவியின் கைச்செலவுக் கென்று காலணாகூடக் கொடுப்பதில்லை. வீட்டுக் காரியங்கள் ஒவ்வொன்றுக்கும் வேலைக்காரி போல வேலை பார்த்து நேரம் பார்த்து அவரிடம் நிற்கவேண்டிய பரிதாபத்தை நான் வாய் திறந்து சொன்னால் யாராவது நம்புவார்களா? ஊரைப் போல் உலகைப் போல் என் கையிலும் நாலு காசை வைத்துக்கொண்டு 'இது என் வீடு' என்று சொல்லிச் சுதந்திர உணர்ச்சியுடன் குடும்பம் நடத்தும் நாள் எனக்கு வருமா?

இத்தனைக்கும் என்னுடைய கல்யாணத்துக்கு முன்னால் நான் யாரோ, அவர் யாரோ? அவர் ஒண்டிக் கட்டையாகப் பிறந்தவர். அண்ணன் தம்பி என்று அவருக்கு யாருமே இல்லை. அவர்களின் அன்பையும் பெருமையையும் தெரியாதவர். எனக்கு அண்ணன் தம்பி அக்காள் தங்கை என்று எல்லோரும் இருக்கிறார்களே! இவருக்கு வாழ்க்கைப் பட்ட பிறகு அவர்கள் அன்பின் உயர்வை இன்னும் நன்றாக உணர்ந்து விட்டேன்! ஓயாமல் கொடுமைப்படுத்தும் இவரை நம்பி அவர்களுடைய அன்பையும் உதறிவிட முடியுமா!

ஊரில் உள்ளவர்கள் எல்லாம் அவரை 'நல்லவர்!' என்று சொல்லும்படியாகத் தான் நடந்து கொள்கிறார். அவர் தமக்கு வேண்டியவர்களுக்கெல்லாம் நன்றாகத் தான் செய்கிறார். அதுபோல் எனக்கு வேண்டியவர்களுக்குச் செய்ய வேண்டும் என்று நான் விரும்பமாட்டேனா? அவருக்கு நாலு பேருடன் சந்தோஷமாக இருக்க வேண்டும் என்று தோன்றுவது போல் எனக்கும் தோன்றாதா? அவர் சினிமாவுக்கும், ஹோட்டலுக்கும் செலவழிக்கும் ரூபாயில் ஒரு சிறு பகுதி எனக்குக் கொடுத்தால்கூட என் குறை தீர்ந்து விடுமே! கட்டுவது கதர்; பேசுவது தர்மம்! காலையிலும் மாலையிலும் கடவுளைத் தொழுவதில் ஒன்றும் குறைவில்லை. ஆனால் மனைவி என்று ஒருத்தி வீட்டில் இருக்கிறாளே என்ற எண்ணம் மட்டும் அவருக்குக் கிடையாது. அவளுக்கும் இதயம் என்று ஒன்று உண்டு. அதை வேதனைப்படுத்தக் கூடாது என்பதை மட்டும் அறியாதவர். நான் என்ன துறவியா? உலகத்தைத் துறந்தவளா? எனக்கு மட்டும் ஆசைகள் இருக்காதா? வீட்டுக் காரியங்களைச் செய்வதைத் தவிர இந்த ஜென்மத்தில் வேறு ஒன்றையும் நினைக்க வேண்டாமா?



** ** **

ஒரு நாள் எனக்கு ஆசையோடும் பாசத்தோடும் கணவரைத் தேடி வைத்த என் அக்காளும் அத்தானும், நான் என் அருமைக் கணவருடன் நடத்தும் ஆனந்தமான வாழ்க்கையைப் பார்க்க ஆவலுடன் வந்தார்கள். என் அக்காள் அவள் கணவருடன் நடத்திய ஊடல், காதல் இவைகளைப் பற்றியெல்லாம் சொன்னாள். அப்புறம் அத்தானும் அவளும் சேர்ந்து அனுபவித்த ஆடல் பாடல்கள் முதலியவற்றைப் பற்றியெல்லாம் கதை கதையாக வர்ணித்தாள். அவற்றையெல்லாம் கேட்கக் கேட்க என் மனசை என்னவோ செய்தது! ''அதெல்லாம் இருக்கட்டும், அக்கா! வேறு எதைப் பற்றியாவது பேசேன்!'' என்றேன் நொந்த மனத்துடன்.

''அதற்குள் உனக்கு உலகம் வெறுத்து விட்டதா?'' என்றாள்.

''இல்லை...'' என்று இழுத்தேன்.

''உனக்கென்ன பணத்துக்குக் குறைவா? இல்லை, உன் கணவர் என்ன கர்நாடகமா? என் அத்தானைப் போல அவர் என்ன முன்கோபக்காரரா? உன் வீட்டுக்காரர் எவ்வளவோ நல்லவர்'' என்றாள்.

''நீ ரொம்பவும் கொடுத்து வைத்தவள், அக்கா!'' என்றேன்.

''ஏன் அப்படிச் சொல்லுகிறாய்?''

''நீங்கள் எல்லாம் கானல் நீரைப் பார்த்து மயங்கி விட்டீர்கள் அக்கா! அவர் பசுத்தோல் போர்த்த புலி. அவர் படிப்பும் பட்டமும், அழகும் ஆடம்பரமும் யாருக்கு வேண்டும்? ஆயிரம் வருஷங்களுக்கு முன்னால் காட்டில் வாழ வேண்டிய அநாகரிக மனிதனின் அரக்க இதயம் படைத்தவர். அன்பையும் பண்பையும் அறியாத வறட்டுப் பட்டதாரி. வார்த்தைக்கு வார்த்தை விஷத்தைத் தோய்த்து, நிமிஷத்துக்கு நிமிஷம் என்னைக் கொட்டுகிறார். நான் என் விதியை நினைத்துக் குமுறிக் குமுறிச் செத்துக்கொண்டிருக்கிறேன் அக்கா! செத்துக் கொண்டிருக்கிறேன்!'' என்று அவளைப் பிடித்துக் கொண்டு அழ ஆரம்பித்து விட்டேன்.

அக்காளும் என்னைப் பிடித்துக் கொண்டு உடல் குலுங்கக் குலுங்க அழுதாள். என் உடன்பிறந்த பாவத்துக்காக அவள் மனம் புண்ணாகித் துடித்து வேதனைப் பட்டாள். ''எல்லாம் தன்னால்தானே வந்தது!'' என்று அத்தான் மனம் நொந்து போனார். சோகமே உருவமாகக் கல்லாய்ச் சமைந்து போய் விட்டார்.

நான் என்னத்தைச் சொல்லுவது? ''இதை ஏன் அவர்களிடம் சொன்னோம்?'' என்று எண்ணி வருந்தினேன். இத்தனை ஆண்டுகளாக மூடி மூடி வைத்திருந்தது போல் இப்போதும் இருந்திருக்கக் கூடாதா என்று எண்ணினேன். என் பாரம் என்னோடு போய்த் தொலைந்திருக்கக் கூடாதா? என்மீது அன்பு செலுத்தும் பாபத்துக்காக அவர்களும் என் நிலை கண்டு துயரப்பட வேண்டுமா என்று எண்ணி மனம் நொந்தேன். என் வாயிலிருந்து வந்த வார்த்தைகளா அவை? இல்லை; என் இதயத்தில் சுடர் விட்டுக் கொண்டிருந்த துன்பத்தின் எதிரொலியல்லவா அது?

ஆசையோடு என்னைப் பார்க்கவந்த அக்காளும் அத்தானும் அதன்பிறகு அடிக்கடி என் வீட்டுக்கு வர ஆரம்பித்தார்கள். எனக்கு ஆறுதல் வார்த்தைகள் சொல்லித் தேறுதல் செய்வார்கள். அவர்களால் அதைத் தவிர வேறு என்னதான் செய்ய முடியும்? இப்படி ஒருநாள் அவர்கள் வந்து இருக்கும்போது அவர்கள் எனக்குச் சொன்ன தேறுதல் வார்த்தைகளை அவர் கேட்டு விட்டார். அவர்கள் வீட்டுக்குப் போன இரவு, ஆகா! அவர் ஆடிய ஆட்டம் கொஞ்சநஞ்சமல்ல.

''அக்காளும் அத்தானும் என்னை என்ன பொரிந்து விடுவார்களோ! உன் அக்காளுக்குத்தான் யாரும் கேட்பார் மேய்ப்பார் கிடையாது. அவள் அரட்டை அடிப்பாள். சிரிக்கச் சிரிக்கப் பேசுவாள். அதுபோல நீயும் இருக்கலாம் என்று நினைக்கிறாயா? இப்படி வீடு வீடாகப் போய் எவளோடாவது, எவனோடாவது பேசிக் கொண்டிருக்கலாம் என்று பார்க்கிறாயா?'' என்று பண்பாடில்லாமல் சத்தம் போட்டார். ''இனிமேல் அவர்கள் இந்த வீட்டுக்கு வரட்டும் பார்க்கிறேன். நான் சந்தோஷமாக இருப்பது அவர்களுக்குப் பிடிக்கவில்லை போலிருக்கிறது'' என்றார்.

என்னை இவருக்கு மணம் முடித்துவைத்த என் அக்காளும் அத்தானும் எவனோவாம்! எவளோவாம்! என்மீது அக்காளுக்கு உயிர். அக்காள் தங்கமானவள். எதையும் மனத்தில் வைத்துக் கொள்ள மாட்டாள். எல்லாரிடமும் மனம் விட்டுப் பழகுவாள். கலகலவென்று சிரிப்பாள். அதற்கென்ன செய்வது? அத்தான் அக்காளை அப்படிப் போற்றி வருகிறார். அவள் உணர்ச்சிக்கும் மதிப்பு கொடுத்து வருகிறார். அதைப் பார்த்து அவருக்குப் பொறாமை. இன்னொருவர் மகிழ்ச்சியுடன் இருப்பதுகூட அவருக்குப் பொறுக்கவில்லை. என் வாழ்வில் எனக்குக் கொஞ்சம் ஆதரவாக இருந்து உதவிபுரிபவர்கள் அக்காளும் அத்தானும் தான். அதையும் பாவி நான் இழந்து விட வேண்டுமா?

அது என்ன காரணமோ எங்காவது கல்யாணம், கார்த்திகை, அவருக்கு வேண்டிய நண்பர்கள் வீடுகளுக்குப் போவதென்றால் மட்டும் அவர் என்னை அழைத்துப் போவார். அதுவும் எப்படி? மிகுந்த அதிகாரத்துடன்தான். அன்பு, ஆசை, மண்ணாங்கட்டி, தெருப்புழுதி அதெல்லாம் ஒன்றும் எங்கள் வாழ்க்கையில் மருந்துக்குக்கூடக் கிடையாது. இந்த லட்சணத்தில் அப்படிச் சிலநாள் அவருடன் செல்வதே என் ஏங்கிய இதயத்துக்குச் சற்று ஆறுதலாக இருந்து வந்தது.

ஏனோ தெரியவில்லை. இப்பொழுதெல்லாம் அத்தான் என் வீட்டுக்கு வருவதில்லை. அக்காள்மட்டும் வந்து கொண்டிருந்தாள். அவள் வந்து போய்க் கொண்டிருந்தது என் நொந்து போன மனத்துக்குச் சற்று ஆறுதலாயிருந்தது! இப்பொழுது அவளையும் வரவொட்டாமல் செய்து விட்டார்.

'ஒண்ணே ஒண்ணு கண்ணே கண்ணு' என்று என்னுடைய தாய்க்கு இருப்பது ஒரே ஒரு பிள்ளை. என் அருமைத் தம்பி; என் மீது கொள்ளை ஆசை கொண்டவன். அவன் இப்பொழுது அவர் வீட்டுக்கு வரக்கூடாது. என்னைப் பெற்றுக் கிளிபோல் வளர்த்து இந்தப் பூனையின் கையில் உயிரோடு கொடுத்து விட்டு அலறுகிறாளே என்னைப் பெற்ற அன்புத் தெய்வம் என் அம்மா, அவள் இவர் வீட்டுக்கு வரக்கூடாது. இவரை உத்தமர் என்று எண்ணி என்னை இவருக்குக் கட்டிவைக்கப் படாத பாடு பட்டாளே என் தமக்கை அவள் இவர் வீட்டுக்கு வரக்கூடாது. ஆனால் என் சுற்றத்தார் செல்வமும் செல்வாக்கும் இவருக்குப் பயன்படவேண்டும். அவர்கள் எல்லாம் இவரைப் பார்த்து மதிக்கும்படி நான் பார்த்துக் கொள்ள வேண்டும். இது என்ன நியாயமோ!



இந்த நிலைமையில் எனக்கு மூன்று மாதம். ஏற்கனவே மனம் நொந்திருக்கும் எனக்கு இது வேறு. கேட்க வேண்டுமா? என்னால் வீட்டுக் காரியங்களைச் செய்ய முடியவில்லை. அசதி அதிகமாக வந்தது. சாப்பாடோ செல்வதில்லை. கை கால் எல்லாம் வீக்கம். அதனால் சமையல் செய்வதில் தாமதம். இவ்வளவு உடல் நிலைமையிலும் சமைத்துப் போடுகிறேனே என்று என்மீது அனுதாபப் பட வேண்டாம். திட்டாமலாவது இருக்கக் கூடாதா? வழக்கம் போல அவருடைய வசவுகளுக்கு ஒரு குறையும் இல்லை. அவர் அதட்டலும் உருட்டலும் தவிர அன்பு செய்ய எனக்கு நாதியில்லை.

எப்படியோ அம்மாவுக்குக் கடிதம் எழுதி அவளும் வந்து என்னை அழைத்துப் போய் விட்டாள். வயிறும் பிள்ளையுமாகத் தாய் வீட்டில் இருக்கும்போது அங்கேயாவது அமைதியாக இருக்க விட்டாரா? அதுவும் இல்லை. ஏதாவது கடிதம் எழுதி அதன் மூலம் என்னையும் தாயையும் வேதனைப்படும்படி செய்து வந்தார். ஆண்டவன் அருளினால் பெற்றுப் பிழைத்தேன். ஆனால் பிள்ளையை என்னுடன் அவர் வீட்டுக்கு அழைத்து வர முடியவில்லை. காரணம் என்ன தெரியுமா? வீட்டில் கொண்டுவந்து வளர்த்தால் பணம் செலவாகி விடுமாம்! அதனால் சோதிடத்தின் மீது பழியைச் சுமத்தினார். 'அவனுடைய ஜாதகம் அப்பாவுக்கு ஆகாதாம். ஆகையால் ஐந்து ஆண்டு வரையில் குழந்தை பாட்டி வீட்டிலே இருக்கட்டும்' என்று சொல்லி விட்டார். குழந்தையை என் அம்மாவிடம் விட்டு விட்டு நான் இவருக்குச் சமைத்துப் போட்டுக் கொண்டிருந்தேன். இப்படியும் ஒரு பெற்ற மனசு இருக்குமா என்று எனக்கே ஆச்சரியமாக இருக்கிறது. இவருக்கு நில புலன்களுக்கு ஒன்றும் குறைவில்லை. அத்துடன் மாதம் ஐந்நூறு ரூபாய்க்குமேல் வருமானம் வேறு வந்து கொண்டிருக்கிறது. இந்த லட்சணத்தில் என் பிள்ளை தாய் தந்தை இல்லாத அனாதைபோல் பாட்டி வீட்டில் வளர்ந்தான். பணத்தைச் சேர்த்துவைத்து அவர் என்ன தான் செய்யப் போகிறாரோ! போகும்போது யாரும் எதையும் கொண்டு போவதில்லை என்ற உண்மையை யார்தான் அவருக்கு உணர்த்தப் போகிறார்களோ?

** ** **

இப்படி எத்தனை எத்தனையோ நிகழ்ச்சிகள். நாட்கள், மாதங்கள் என்று பத்து ஆண்டுகள் ஓடிவிட்டன. இந்த ஆண்டுகளை நினைத்துப் பார்த்தால் எனக்கே வியப்பாக இருக்கிறது. பத்து ஆண்டுகளாக அவர் கொடுமைகளைப் பொறுத்துக் கொண்டிருந்த என்னால் இப்பொழுது பொறுக்க முடியவில்லை. காரணம்முன்பெல்லாம் வாயினால் மட்டும் திட்டிக் கொண்டு இருந்தார். இப்பொழுதோ சொல்லவே நாக் கூசுகிறது. என் இதயம் நடுநடுங்குகிறது! கைநீட்டி அடிக்கவும் ஆரம்பித்து விட்டார். ஒரு நாள் ஒன்றுமில்லாத ஒரு காரியத்துக்காக மாடு நிகர்த்த துச்சாதனன் போல் என் மைக்குழலை இறுக்கிப் பிடித்து ஒரு குலுக்குக் குலுக்கினார். அந்தக் கொடிய கையில்தான் என்ன பலம்! எனக்கு உலகமே சுழலுவது போல இருந்தது. அப்படி நான் தடுமாறிக் கொண்டிருக்கும்பொழுதே வெறி பிடித்தவர் போல் கன்னங்களில் 'பளார்!' 'பளார்!' என்று அறைய ஆரம்பித்து

விட்டார். என் கண்களில் ஆயிரம் மின்னல்களின் ஒளி ஒரே சமயத்தில் தாக்கியதுபோல் இருந்தது! அடுத்த கணம் எங்கோ அதள பாதாளத்தில் விழுந்து கொண்டிருப்பதை உணர்ந்தேன். அன்றே என் பிராணன் போயிருந்தால் எவ்வளவு நிம்மதியாயிருக்கும்.

பெண்ணாய்ப் பிறந்த என் சீரழிந்த வாழ்க்கையைப் போல் எத்தனை பெண்கள் இந்த நாட்டில் வேதனைப்படுகிறார்களோ! தங்கள் இதய வேதனையை வெளியில் சொல்லிக் கொள்ள முடியாமல் எப்படித் தவியாய்த் தவிக்கிறார்களோ! ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம். இந்த லட்சணத்தில்,

“மங்கையராகப் பிறப்பதற்கே—நல்ல
மாதவம் செய்திட வேண்டுமம்மா!”

என்று கவிமணி அவர்கள் பெருமிதத்தோடு பாடிவிட்டுப் போயிருக்கிறார். என் சோகக் கதையையும் நான் மங்கையாகப் பிறந்து சீரழியும் கோலத்தையும் அவர் பார்த்திருந்தால் இப்படியெல்லாம் பாடியிருப்பாரா?

** ** **

ஒரு நாள் இரவு பாருங்கள். வழக்கம் போல் அவர் சாப்பிட்ட பிறகு நான் சாப்பிட்டுக் கொண்டிருந்தேன். மாடியில் எங்கள் குழந்தை காது வலி என்று துடித்துக் கொண்டிருக்கிறான். அவரைக் கண்டால் நடுநடுங்கிச் சாகும் அந்தப் பச்சிளம் பாலகன் வலி தாங்காமல் அழுது துடித்துக் கொண்டிருக்கிறான். அருகில் இருக்கும் அவர் அவனுக்கு ஆறுதல் சொல்லாமல், என்னிடம் வந்து கத்தினார்.

“எத்தனை நாழியாகச் சாப்பிடுவது? சமைப்பதை அப்படியும் இப்படியுமாகக் காட்டிவிட்டுக் கடைசியில் எல்லாவற்றையும் விழுங்கிக் கொண்டிருக்கிறாயா? உன் பிள்ளை கத்துவது காதில் விழவில்லை?”

எப்படி இருக்கிறது நியாயம்? இவரை ஏமாற்றி நான் சாப்பிடுவது என்றால் நான் ஏன் இப்படி இருக்கிறேன்? என்னுடைய உரிமையை நிலைநாட்டி அவரையே ஆட்டிப் படைத்திருக்க மாட்டேனா?

மறு கணம் வெறிபிடித்தவர்போல விடுவிடென்று மாடிக்குச் சென்றார். காது வலியால் துடித்துக் கொண்டிருக்கும் அந்தச் சின்னஞ் சிறு சிசுவை ‘ஏன் அழுது அடம் பிடிக்கிறாய்?’ என்று அறைந்து கொண்டிருந்தார். என் தாய் இதயம் குமுறிப் பொங்கியது. ‘ஏன் இப்படிக் குழந்தையை அடித்துக் கொல்கிறீர்கள்?’ என்று கேட்டேன். அவ்வளவு தான்; என் கூந்தலைப் பிடித்து இழுத்து வந்து ‘என் பிள்ளையை நான் அடிக்கத்தான் அடிப்பேன். நீ யார் என்னைக் கேட்பது?’ என்று என் கன்னத்திலும் நாலு வைத்தார். ‘ஏன் இப்படிச் சித்திரவதை செய்கிறீர்கள்?’ என்று வலி தாங்க முடியாமல் கேட்டு விட்டேன். ‘எதிர்த்துவேறு பேசஆரம்பித்து விட்டாயா?’ என்று மேலும் கொடுமைப் படுத்தத் தொடங்கி விட்டார். ‘நீ இனிமேல் என் வீட்டில் இருக்க வேண்டாம். இப்பொழுதே போய்விடு’ என்று கழுத்தைப் பிடித்து வெளியில் தள்ளி விட்டார்.

இந்த வார்த்தைகளைக் கேட்டதும் என் தலையில் ஆயிரம் இடிகள் ஒரே கணத்தில் வந்து விழுந்ததுபோல் வேதனைப்பட்டேன். “ஐயா! என்னை உங்கள் காலடியிலேயே கொன்று போட்டு விடுங்கள். ஆனால் உங்களுடன் வாழத் தெரியாதவள் என்று ஊரார் நகைக்கும்படி செய்து விடாதீர்கள்” என்று அவர் காலைப் பிடித்துக் கொண்டேன்! பெண் என்றால் பேயும் இறங்கும் என்பார்கள். ஆனால் அவர் இரும்பு இதயம் மட்டும் இளகவில்லை.

அவர் படுத்தும் இந்தக் கொடுமைகளுக்கெல்லாம் என்னால் ஒரு கணத்தில் முடிவு காண முடியும். ‘ஆறிலும் சாவு, நூறிலும் சாவு.’ என்றாவது ஒருநாள் சாகத்தான்வேண்டும். அந்த நாளை இன்றே என்னால் வரவழைத்துக் கொள்ள முடியும். தற்கொலை கோழைகளின் செய்கையானாலும் அவர் கொடுமையில் இருந்து விடுபடுவதற்காகக் கோழையாகவே போகத் தயாராக இருக்கிறேன். ஆனால் அதற்குத் தடையாக என் குழந்தை நிற்கிறான். அவன் பால் வடியும் முகம் “அம்மா! என்னைத் தனியாக அவரிடம் விட்டு விடாதே!” என்று பரிதாபமாகக் கெஞ்சுகிறது! அவன் நல்வாழ்வுக்காக நான் உயிர்வாழத்தான் வேண்டும்.

என் இதய வேதனையை என்றாவது ஒரு நாள் அவர் உணராமலா போகப் போகிறார்! அவரும் மனிதர்தானே? அவருக்கும் இதயம் இருக்கத்தானே செய்யும்? அது ஒருநாள் அன்பின் சக்தியை அறியாமலா போகும்! என்று காத்துக் கொண்டிருக்கிறேன். நம்பினோர் கெடுவதில்லை அல்லவா?

என்னுடைய போதாத காலம் மீண்டும் ஒருநாள் என்னைப் பார்த்து, “நீ இந்த வீட்டை விட்டுப் போ” என்று சொன்னால் நான் அவர் வீட்டை விட்டு வெளியில் போய் அவர் மானம் மரியாதை குறையும் படி நடந்து கொள்ள முடியுமா? நானும் தமிழ்ப் பெண்தானே! நான் அவரை விட்டு எங்கே போவேன்? எங்கே போவேன்?

** ** **


ஒரு பெண் இந்த சாத்துவீக எதிர்ப்பு முறையைக் கைக்கொள்ள விரும்பினால் அவள் தன் கணவனிடம் சொல்ல வேண்டியது:

‘நான் எல்லா வகையிலும் உனக்குச் சமமாக வாழ்வதில் உனக்குச் சம்மத முண்டானால் உன்னுடன் வாழ்வேன். இல்லாவிட்டால் இன்று இரவு சமையல் செய்ய மாட்டேன். எனக்குவேண்டியதை மட்டும் சமைத்துத் தின்றுகொண்டு இங்கேயே இருப்பேன். உனக்குச் சோறு போட மாட்டேன்’ என்று கண்டிப்பாகச் சொல்லிவிடவேண்டும். நீ அடித்து வெளியே தள்ளினால் வீதியில் கிடந்து சாவேன். இந்த வீடு என்னுடையது. இதை விட்டு நான் வெளியேற மாட்டேன். இந்தத் தீர்மானமான வார்த்தையை, அற்ப இந்திரிய இன்பங்களை விரும்பியேனும், நகை துணிமணி முதலிய வீண் டம்பங்களை இச்சித்தேனும், நிலையற்ற உயிர்வாழ்வைப் பாராட்டியேனும் மாற்றக்கூடாது. சிறிது சிறிதாக நியாயத்தை ஏற்படுத்திக் கொள்வோம் என்னும் கோழை நிதானக் கட்சியாரின் மூடத்தனத்தைக் கைக்கொள்ளக்கூடாது. ‘எனக்கு நியாயம் வேண்டும். அதுவும் இந்தக் கணத்தில் வேண்டும்.’ — மகாகவி பாரதியார்

Printed and Published by R. Ananthanarayanan for the Proprietors Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press, Kilpauk, Madras-10
Managing Editor: T. Sadasivam.

REGISTERED No. M. 4392

Registered as a Newspaper in Ceylon



L 280-50 TM

ஹிந்துஸ்தான் லீவர் லிமிடெட் தயாரிப்பு